
# பொருளியல் நோக்கு

ஏப்ரல் / மே
**1979**




கிராமியக் கொடுகடன்

மக்கள் வங்கி வெளியீடு

# கிராமியக் கொடுகடன்

1957 ல் 90 சதவீதத்துக்கும் அதிகமான கிராமியத் துறைக்கான கடன்கள் நிறுவன ரீதியற்ற மூலங்களிலிருந்தே பெறப்பட்டிருந்தன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் பலம் வாய்ந்த கிராமியக் கடன் அமைப்பொன்றைத் தாபிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி அவ்வளவு தூரம் வெற்றியளிக்கவில்லை.

1961 ல் மக்கள் வங்கி தாபிக்கப்பட்டமை, நமது நாட்டில் கிராமியக் கொடுகடன் வரலாற்றில் ஒரு பிரதான மைல் கல்லாகும். வெகு தூரத்தில் இருக்கும் கிராமங்களுக்கு வங்கிப் பழக்கத்தை அறிமுகஞ்செய்து வைப்பதிலும், உழவர் விவசாயிகளுக்கு நிறுவன ரீதியான கடன்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் மக்கள் வங்கி முன்னோடியாக இருந்தது. கிராமியத்துறைக்கு மட்டுமே சிறப்பாகப் பொருந்தக்கூடிய உத்திகளைக் கண்டறிந்து பிரயோகிப்பதிலும் இவ்வங்கி வெற்றி கண்டது. அதன் கிளைகள் பெரும்பாலும் முன்னர் வங்கிகளைக் கண்டிராத பிரதேசங்களிலேயே தாபிக்கப்பட்டன. மக்கள் வங்கி இன்னும் ஒரு படி மேலே சென்று, 1964 ல் கிராமிய வங்கி திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. ''சிறிய மனிதனின்'' பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளிலும் அது கைகொடுத்துதவிற்று. இப்பக்கத்திலிருக்கும் படங்கள் இவ்வங்கியின் சில நடவடிக்கைகளைக் காட்டுகின்றன.



வில்கமுவை மக்கள் வங்கிக்கிளை. பதியங்கலையிலிருந்து 25 மைல் தொலைவில் இருக்கும் இப்பகுதியைச் சென்றடைவது அவ்வளவு எளிதான காரியமில்லை.




கிராமச் சந்தை — நிறுவன ரீதியற்ற கடன் அமைப்பே இங்கு தொடர்ந்து ஆதிக்கம் பெற்று வந்துள்ளது. ''கைமாற்று''க் கடன் திட்டங்கள் மூலம் மக்கள் வங்கி இங்கு ஊடுருவியுள்ளது.



மிகவும் பரவலான குடிசைக் கைத்தொழில்களில் ஒன்றுான கயிறு திரித்தல். இக் கைத்தொழிலின் விருத்திக்காகவும் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.



கிராமியக் கலைஞருக்கும், கைவினைஞருக்கும் நிறுவன ரீதியான கடன்கள் முதன் முதல் மக்கள் வங்கியால் பெற்றுக்கொடுக்கப்பட்டன.



எரி பொருளுக்காக விறகு வழங்கும் விறகு-மடுவம் இது. இத்துறையும் இப்பொழுது வங்கிக் கடனுதவிகளைப் பெற்றுக்கொள்கின்றது.



கிராமங்களில் பாற் பண்ணைக் கைத்தொழிலுக்கு இப்பொழுது உற்சாகம் கொடுக்கப்படுகின்றது. இத்துறைக்கான வங்கிக் கடன்களில் பெரும் பகுதியை மக்கள் வங்கி வழங்குகின்றது.

# பொருளியல் நோக்கு

மலர் 5 இதழ் 1/2 ஏப்ரல்/மே 1979



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.


சிறப்புக்கட்டுரைகள்


கார்டர் ஹெண்டர்சன் 28 சிக்கனத்தை நோக்கி நகரும் மேற்கத்தைய மனோபாவம்

மானெல் தம்போ 32 பொருளாதாரப் புத்தொழுங்கு அல்லது மனித இன அழிவு


விசேஷ அறிக்கை


3 கிராமியக் கொடுகடன்—வரலாற்றுப் பின்னணியும் பிரச்சினைகளும்


நிரல்கள்


2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

13 பொருளாதாரம்

15 பெருந்தோட்டப் பயிர்கள்

16 நூல் ஆய்வு

17 வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

21 வியாபாரப் பொருட்கள்

25 வர்த்தகம்


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் [illegible]

**சந்தாதாரர்கள் கவனிக்கவும்:**

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சில சூழ்நிலைகளால் அச்சடிப்பதில் ஏற்பட்டிருக்கும் தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டு நாம் இரு இதழ்களை (ஏப்ரல்/மே 1979) ஒருங்கிணைத்துள்ளோம். எவ்வாறிருப்பினும், எமது சந்தாதாரர்கள் 12 தனித்தனி இதழ்களைப்பெற உரித்துடையவர்கள் என்பதைத்தெரிவித்து கொள்கிறோம்.

அடுத்த இதழில்

- சுற்றுலாத்துறை — புதிய கைத்தொழில் ஒன்றின் வளர்ச்சி
- தங்கமும் சர்வதேச நாணய நிதியும் மூன்றாவது உலகமும்
- தேயிலை அபிவிருத்திப் பெருந் திட்டம்

அட்டைப்படம்

வடிவமைப்பு: பாலித்த கன்னங்கரா

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

மார்ச்

1 தங்குதல், உணவு கொள்ளல் என்பவற்றுக்கான அரச அதிகாரிகளின் அலவன்சுகளை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதிகரித்தது; பிரயாணப்படி அளவுகளும் மாற்றியமைக்கப்பட்டன. இந்த மாற்றங்கள் காரணமாக அரசுக்கு இவ்வருடத்தில் ஏற்படும் மேலதிகச் செலவு ரூ. 2.6 கோடியாகும்.

2 பொருளாதார நெருக்கடிகளுக்கும், அரசியல் குளறுபடிகளுக்கும் மத்தியில் இரானின் புதிய அரசாங்கம் அதன் நாணயத்தைப் பெறுமதியிறக்கம் செய்தது. சகல வெளிநாட்டுக் கடன்களும் செலுத்தப்படுமென்று உறுதியளிக்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பான ரொய்டர் அறிக்கையொன்று கூறியது.

5 சீனாவின் கைத்தொழில் மயமாக்கல் திட்டங்களில் ஐக்கிய இராச்சியத்துக்குப் பங்குகொள்ள வழிகோலும் பொருட்டு, 700 கோடி பவுண் பெறுமதி வாய்ந்த பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியின் விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) கீழ் இலங்கை அதன் முதலாவது வரைவான 78 கோடி ரூபாவை (4 கோடி எஸ். டீ. ஆர்.) பெற்றுக்கொண்டது. இந்தப் புதிய வசதி ஜனவரியில் அனுமதிக்கப்பட்டது. இலங்கை இந்த வசதியிலிருந்து மூன்று வருட காலத்துக்குள் 520.6 கோடி ரூபாவை (26 கோடி எஸ். டீ. ஆர்.) பெற்றுக்கொள்ள முடியும்.

6 நாணயங்களை உருக்குதல், உருக்குலைத்தல் என்பவற்றைத் தடுக்கும் பொருட்டு பாராளுமன்றம் நாணயக் கட்டளைச் சட்டத்தை மாற்றியமைத்தது. இதன் பிரகாரம், இத்தகைய குற்றமொன்றைப் புரியும் ஒருவருக்கு 3,000 ரூபா அபராதம் விதிக்கப்படலாம்; அல்லது இரண்டு வருடங்களுக்கு குறைந்த சிறைத் தண்டனை கொடுக்கலாம்.

8 மணிலாவில் நடைபெற்ற ஆசிய, பசுபிக் பொருளாதாரக் கமிசன் மாநாட்டில் சர்வதேச தொழில் தாபன அதிகாரியொருவர் பேசிய போது, ஆசியாவில் சுமார் 41.5 கோடி மக்கள் கொடிய வறுமையில் வாடுவதாகவும், கடந்த இரு தசாப்த காலத்தில் 35.5 கோடி ஆசியர்களின் வாழ்க்கை நிலைமைகள் அதளபாதாளத்துக்குச் சென்றிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

12 சகல வகைப் பலகைகளுக்குமான விலைகளை அரச மரக் கூட்டுத்தாபனம் திருத்தியமைத்துள்ளது. 1978 மே மாதத்தில் விலைகள் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டன; தற்போதைய விலையதிகரிப்பு 40 சதவீதத்திலிருந்து 280 சதவீதம் வரையில் இருக்கின்றது. மரம் அறுக்கும் செலவு உயர்ந்து சென்றிருப்பதும், கூட்டுத்தாபனம் பெருந்தொகையான நட்டங்களை அனுபவித்து வருவதும் இந்த விலை மாற்றத்துக்குப் பின்னணியில் இருந்த காரணிகளாகும்.

பிரான்சின் மிகப் பெரிய வர்த்தக வங்கியான பாங்க் டீ இந்தோசைனா டீ சுயெஸ் கொழும்பில் அதன் கிளையொன்றை ஆரம்பித்து வைத்தது.

14 நாட்டின் ஆபரண ஏற்றுமதி வர்த்தகத்துக்கு உதவும் வகையில் 1 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை இறக்குமதி செய்ய அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் உத்தேசித்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உடன்படிக்கையின் கீழ், சீனா இலங்கைக்கு 80,000 மெட்ரிக் தொன் அரிசியை வழங்க இருப்பதாகவும், இதற்கான விலை தற்போதைய உலகச் சந்தை மட்டங்களை விட 3 சதவீதம் குறைவாக இருக்குமென்றும் இலங்கையின் வர்த்தக அமைச்சர் தெரிவித்தார்.

15 ஸ்ரீலங்காவின் நிதியமைச்சருக்கும் டென்மார்க்கின் நிதி, வெளிநாட்டு ஒத்துழைப்பு அமைச்சர்களுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களையடுத்து, அடுத்து வரும் மூன்று வருடங்களில் இலங்கைக்கு 22 கோடி கொரோனர் (65.7 கோடி ரூபா) உதவி வழங்க டென்மார்க் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

சபுகஸ்கந்தை யூரியா தொழிற்சாலை 1980 ஜனவரி அளவில் உற்பத்தியை ஆரம்பிக்க இருப்பதாக உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார். இதன் வருடாந்த உற்பத்தி 310,000 தொன்களாக இருக்கும்.

19 ஐரோப்பிய பொதுச் சந்தையினால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் தைக்கப்பட்ட ஆடைகளுக்கான கோட்டாக்களைப் பயன்படுத்த, மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் அதிகார எல்லைக்குள் இருக்கும் கைத்தொழில்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இக்கைத்தொழில்கள் தமது உற்பத்திகளுக்கான சந்தைகளைத் தாமே தேடிக்கொள்ள வேண்டுமென அதிகார பூர்வமான வட்டாரங்கள் தெரிவித்தன.

22 மகாவலி அதிகார சபை ஸ்தாபிதம் குறித்த சட்ட மூலத்தை பாராளுமன்றம் நிறைவேற்றியது. மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இச்சபை பொறுப்பாக இருக்கும்.

27 ஏப்ரல் முதலாந் தேதியிலிருந்து எண்ணெய் விலையை 9 சதவீதமாக அதிகரிப்பதற்கு உலகின் பிரதான எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் தீர்மானித்தன.

29 இலங்கைக்கும் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசுக்குமிடையிலான உதவி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன; இவற்றுள் ஒன்று 1.2 டொயிஷ் மார்க் (9.8 கோடி ரூபா) பெறுமதியான பண்டக் கடனாகும்; மற்றையது, கிரிண்டி ஓயா நீர்ப்பாசனத் திட்டத்துக்கான 2.6 கோடி மார்க் (21.4 கோடி ரூபா) கடனாகும்.

30 சமீப வாரங்களில் உலகின் பிரதான நாணயங்களுடனான டொலரின் நிலை ஸ்திரமடைந்து வந்துள்ளது. யென் நாணயத்தை விடவும் அது 3 சதவீதம் பெறுமதி உயர்ந்தது. ஏனைய பல ஐரோப்பிய நாணயங்களை விடவும் டொலரின் பெறுமதி எல்லைரீதியான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது.

31 தேயிலைக் கொழுந்து ஒரு இறாத்தலுக்கான உத்தரவாத விலையை 70 சதத்திலிருந்து 85 சதமாக உயர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சிறு காணித்துண்டுகளில் தேயிலை உற்பத்தியை மேற்கொள்ளும் சுமார் 125,000 குடும்பங்கள் இவ்விலையதிகரிப்பினால் நன்மையடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# கிராமியக் கொடுகடன் வரலாற்றுப்பின்னணியும் பிரச்சினைகளும்

ஆசியாவின் பெரும்பாலான பகுதிகளில் வாழும் உழவர் விவசாயிகள், ''நீர் மட்டம் கழுத்து வரை வந்திருக்கும்'' நிலைமையில் வாழ்வதாக பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஒரு பயிர்நாசம் அல்லது சுகவீனம் அவர்களை நீரில் முழுதாக அமிழ்த்திவிடும். கடும் வட்டி வாங்குபவனாகச் சித்தரிக்கப்படும் கிராமக் கடன் கொடுப்போன்; கூடிய விலைகளில் அன்றாடப் பாவனைப் பொருட்களை விற்பனை செய்யும் கடைக்காரன்; என்றும் கடன்பட்ட நிலையில் வாழும் விவசாயியின் இயலாமையைப் பயன்படுத்தி அவனைச் சுரண்டும் நிலச்சுவான்தார்; தமது நாளாந்த நுகர்வுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும், சாகுபடிச் செலவுகள், அவ்வப்போது எதிர்பாராவண்ணம் நேரிடும் செலவினங்கள் என்பவற்றை ஈடு செய்வதற்கும் மாற்று வழிகள் இல்லாது அல்லல்படும் கிராமிய விவசாய வாழ்க்கையின் பின்னணியில் இவர்கள் யாவரும் மிக முக்கியமானவர்கள்; ஒரு வகையில் இன்றியமையாதவர்கள்.

சிறிய நிலத்துண்டொன்றிலிருந்து கிடைக்கும் வருமானம் சாதாரண ஜீவனமொன்றுக்குப் போதியதாயில்லை. எனவே, அடித்தளம் பலவீனமானதாக இருப்பதால், விவசாயிகள் தமது தரித்திர நிலையிலிருந்து மீட்சி பெறுவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஒரு புறத்தில், புதிய முறைகளையும், தேவையான உள்ளீடுகளையும் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான மூலதனம் அவர்களிடமில்லை. 'மரபுசார்ந்த' இந்தத் துறையில் வெளியீடு என்பது அவசியமாகவே நிலம், உழைப்பு என்பவற்றின் ஒரு கூட்டுக் கருமமாகவே இருக்கின்றது. 'நவீன' அல்லது 'கைத்தொழில்' துறைகளைப் போன்று மூலதனத்தை ஒன்று திரட்டும் செய்முறை இங்கு மிக அரிதாகவே காணப்படுகின்றது. மறுபுறததில் பரீட்சார்த்த முயற்சிகளின் விளைவுகளில் காணப்படும் நிச்சயமின்மை, ஆபத்து என்பன காரணமாக, விவசாயிகள் மாறுதல்களுக்குப் பயந்து, நிச்சயமான (ஆனால் குறைந்த உற்பத்தி ஆற்றல் கொண்ட) பழைய முறைகளையே பின்பற்ற விரும்புகின்றனர். எனவே, வறுமையானது கிராமங்களில் வறுமையை மென்மேலும் வளர்க்கின்றது.

ஆனால், அடிக்கடி கேட்கப்பட்டுவரும் ஒரு கேள்விக்கு இது விடையளிக்கவில்லை. அதாவது, கிராம முன்னேற்றம் மிக மெதுவானதாக இருப்பதுடன், ஒப்பீட்டு ரீதியில் கிராமிய வறுமை தொடர்ந்தும் அதிகரித்து வருவது ஏன்? கிராமப் பிரதேசங்களில் வாழும் குறை வருமானப் பிரிவினரில் பெரும்பான்மையானோர் தமது ஜீவனோபாயத்துக்காக விவசாயத்திலேயே தங்கியிருக்கின்றனர். உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவும் தொழில் நுட்பம், சேவைகள் என்பவற்றை அவர்களால் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. உற்பத்தி நடவடிக்கைகளின் நலன்கள் சமமாக பங்கீடு செய்யப்படுவதைத் தடுப்பதிலும், உள்ளீடுகள், சேவைகள், உற்பத்தியதிகரிப்புக்கு உதவும் நிறுவனங்கள் என்பவற்றை வறியோர் சென்றடையாதவாறு பார்த்துக் கொள்வதிலும் ஒரு சில நலன் பேணும் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, சந்தைப் படுத்தக்கூடிய உபரியைப் பெற்றுத்தராத அல்லது பிழைப்பு மட்டத்துக்குக் கூடிய வருமானத்தை வழங்காத சிறு காணித்துண்டுகளை வைத்திருக்கும் கிராமிய உழவனின் துயரம் தோய்ந்த வாழ்க்கை, நமது உழவர் விவசாய அமைப்பின் ஒரு

பிரதான அம்சமாகும். கடன் கொடுப்போர், கடைக்காரர், உற்பத்தியை மொத்தமாக கொள்வனவு செய்யும் வர்த்தகர், நிலச்சுவான்தார்; கடன்களையும், ஏனைய உள்ளீடுகளையும் வழங்கும் நிறுவன ரீதியான அமைப்புகள் பொருத்தமாகவும், திறமையாகவும் விருத்தி பெறுநிருத்தல், தாக்கமான விவசாயிகள் பேரணிகளின் குறைவு, அரசாங்க மற்றும் நிறுவன ரீதியான ஆவண ரீதியிலான கொடுகடன் என்பனவெல்லாம் இதன் ஏனைய அம்சங்களாகும்.

ஸ்ரீ லங்காவின் கிராமியத்துறை அதன் கடன் தேவைகளுக்காக பாரம்பரியமாக நிறுவன ரீதியற்ற மூலங்களிலேயே தங்கியிருந்து வந்திருக்கின்றது. தேவைகள் நேரிடும் போது விவசாயிக்கு உதவும் நண்பர், உறவினர், நிலச்சுவான்தார் என்போர் சில சந்தர்ப்பங்களில் வட்டியின்றியும், சில சந்தர்ப்பங்களில் மிகக் குறைந்த வட்டி வீதத்திலும் கடன்களைக் கொடுத்து வருகின்றனர். பரஸ்பர நம்பிக்கையிலேயே இக்கடன்கள் வழங்கப்படுகின்றன; அதாவது, பிறிதொரு சந்தர்ப்பத்தில் கடன் வாங்கியவர் கடன் கொடுத்தவருக்கு கடனுதவிகளை வழங்குவார்; அல்லது வேறு வழிகளில் — அதாவது விவசாய நடவடிக்கைகளில் உதவுதல், வீட்டு வேலைகளைச் செய்தல் போன்றவற்றில் — உதவியாக இருப்பார்.

மத்திய வங்கி 1969 ல் நடாத்திய கிராமியக் கொடுகடன், படுகடன் தன்மை பற்றிய ஆய்வின் போது வட்டி வீதங்கள் பற்றிய பல சுவாரஸ்யமான விஷயங்கள் கண்டறியப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் வருட வட்டி 175 சத வீதத்துக்கும் கூடுதலாக இருந்துள்ளது. ஆனால், சுமார் கால் பங்கு கடன்களுக்கே இந்த வீதம் அறவிடப்பட்டுள்ளது. பெருந்தொகையான கடன்கள் வட்டியில்லாக் கடன்களாகவே இருந்தன. ஆனால், பண்டங்களாக கடன்கள் கைமாறும் போது மறைமுக வட்டி அறவிடப்படும் வாய்ப்புண்டு.

நிறுவன ரீதியற்ற கடன் மூலங்கள் விவசாயிகளைப் பொறுத்தவரையில் பல வகைகளில் பயனுடையதாகும். இந்த முறையில் பெரும்பாலும் பிணைகள் கோரப்படுவதில்லை; மேலும், திருப்பிச் செலுத்தும் கால அளவை கடனாளியின் வசதிக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம். படிவங்களைப் பூர்த்தி செய்தல், ஆவணங்களில் கையெழுத்து வைத்தல் போன்ற நீண்ட படிமுறைகள் இவ்வமைப்பில் இல்லை. நிறுவன ரீதியற்ற கடன்துறை நுகர்வுத் தேவைகளுக்காகவும், அவசரத் தேவைகளுக்காகவும் கடன்களைக் கொடுக்கின்றது. எனவே, 'கேள்வி கேட்கப்படாத கடன்' என்று இது அழைக்கப்படுகின்றது.

வசதி, நெகிழ்ச்சித்தன்மை, இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடிய தன்மை என்பன காரணமாக கிராமியத்துறை பெருமளவில் நிறுவன ரீதியற்ற கடன் அமைப்பிலேயே தங்கியிருக்கின்றது. நிறுவன ரீதியான கடன் வசதிகள் அதிகரிக்கப்பட்ட பின்னரும் கூட இத்தகைய வசதிகள் காரணமாக பெருந்தொகையான விவசாயிகள் நிறுவன ரீதியற்ற துறைகளிலிருந்தே கடன்களைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதைப் பல ஆய்வுகள் காட்டியுள்ளன.

### கிராமியக் கடன் ஏன் அவசியமாகிறது ?

குறைந்த வருமான மட்டங்கள், சேமிப்புக் குறைவு, விவசாயப் பொருளாதாரமொன்றின் ஒழுங்கீனமான வருமானம் என்பவற்றின் விளைவாக கிராமியத் துறையின் சாதாரண நுகர்வுத் தேவைகளுக்காக கடன் தேவைப்படுகின்றது. மேலும், மத வைபவங்கள், திடீர்ச் சுகவீனம், திருமணம் போன்ற குடும்பச் சடங்குகள், பயிர் நாசம் போன்றன நேரிடும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்காக செலவு செய்ய விவசாயிகளிடம் மேலதிக பணம் இருப்பதில்லை. இதனால் அவர்களது கடன்படு தன்மை மேலும் அதிகரிக்கின்றது.

உற்பத்திச் செலவுகளைப் பன்மடங்கு அதிகரித்திருக்கும் புதிய தொழில் நுட்பங்கள் காரணமாக விவசாயத்துக்கான கடன் ஓர் அத்தியாவசிய அங்கமாக மாறியிருக்கின்றது. பாரம்பரியமாக விதைக்கப்பட்டு வரும் நெல்லினங்களை விடக்கூடிய விளைச்சல் தரும் புதுரக இனங்கள், செலவு கூடிய பசளை, களை கொல்லிகள் என்பன உள்ளீடுகளை வேண்டி நிற்கின்றன. டிராக்டர் போன்ற பண்ணை இயந்திரங்களுக்கும், உபகரணங்களுக்கும் நடுத்தர மூலதனம் தேவைப்படுகிறது. குழாய்க் கிணறுகள் போன்ற நீர்ப்பாசன விருத்திகளுக்காக நீண்ட கால மூலதனம் தேவைப்படுகின்றது. எனவே, விவசாய நடைமுறைகள் நவீனமயமாக்கப்பட்டது கிராமியத்துறைக்கான கொடுகடன் அளவு அதிகரிப்பதற்கான மிகப் பிரதான காரணம் என்று ஒருவர் கூறலாம். ஆனால், இவற்றுக்கு அப்பாலும் கிராமியக் கடன் அமைப்பு ஊடுருவிச் சென்றிருப்பது ஏன்? இவ்வினாவுக்கான விடையைத் தேடும் பொருட்டு கிராமியக் கடன்படு தன்மையின் வேர்களை ஆராய்தல் முக்கியமானதாகும்.

பெருந்தோட்டப் பொருளாதாரம் அறிமுகம் செய்யப்பட முன்னர், இலங்கையின் கிராமியச் சமூகங்களின் படுகடன் அளவுகளைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய சான்றுகளில்லை. எனினும், கிடைக்கக்கூடியதாக இருக்கும் ஓரிரு சான்றுகளின்படி, அக்காலத்தில் பண்டமாற்று முறையே முக்கியம் பெற்றிருந்ததை அறிய முடிகின்றது. எனவே இந்த பண்ட மாற்று முறையில் கிராமத்தின் சமூக - பொருளாதார அமைப்பு ஓரளவு படுகடன் நிலையில் இருந்திருக்கலாம் என்பதை ஊகிக்க முடிகின்றது. உலகின் பிரதான பொருளாதார நீரோட்டத்துடன் இலங்கை ஒருங்கிணைக்கப்பட்டதும், நாடெங்கிலும் வர்த்தகத் தொடர்புகள் உருவானதும் காரணமாக பெருந்தோட்டப் பொருளாதாரம் முக்கியத்துவம் பெற்று முன்னேற்றமடைய பாரம்பரிய கிராமப் பொருளாதாரம் பாதிப்புற்றது. சுயதேவைப் பூர்த்தியான பிழைப்பு மட்டப் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியதும் படுகடன் நிலை வளர்ச்சியடையத் தொடங்கிற்று.

இலங்கையின் பாரம்பரிய சமூக - பொருளாதார அமைப்பு, அவ்வமைப்பில் வாழ்ந்த தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் உதவுவதாக இருந்தது. இது பரஸ்பர பொருளாதார நடவடிக்கைகளையும் உருவாக்கிற்று. இவ்வமைப்பு தகர்ந்து விட்டதையடுத்து வர்த்தகவியலும், பணக்கொடுப்பனவுகளும் முக்கியம் பெறத் தொடங்கின. சிறுகாணித் துண்டுகளை வைத்துக்கொண்டு விவசாயிகள் வறுமையில் உழன்று வந்த ஒரு பின்னணியில், துரிதமாக வளர்ச்சி பெற்றுவந்த நவீன வர்த்தகமானது, இலங்கையின் நாட்டுப்புறத்தில் மக்களின் கடன் சுமைகளைக் கூட்டியது.

சிறு விவசாயி, நிலக்குத்தகை அமைப்பு என்பவற்றின் பின்னணியிலேயே கிராமியப் படுகடன் பிரச்சினை நோக்கப்படுதல் வேண்டும். யோகரத்தினம், சிக்லர் ஆகியோரின் கணிப்புக்களின் பிரகாரம், இலங்கையின் சராசரி நெற்காணி உடமை 2 ஏக்கருக்கும் குறைவானதாகும். இந்நிலத்துண்டுகள் பொருளாதார ரீதியில் சிக்கனமான அலகுகளாக இல்லாதிருப்பதால் ஒரு குடும்பத்துக்குப் போதிய வருமானத்தை அவை பெற்றுக் கொடுப்பதில்லை. சில இடங்களில் குறிப்பிட்ட சில பண்ணை நிலங்களின் அளவு விஸ்தரிப்படைந்து செல்லும் அதே வேளையில், வேறு பண்ணை நிலங்கள் மென்மேலும் குறுகி வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்தப் படிமுறை இரு முகப்பட்ட பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. அதாவது, ஒருபுறத்தில் நில உடமைவாதம் தலை தூக்கும் போது மறுபுறத்தில் பெருந்தொகையான நிலமற்ற தொழிலாளர் உருவாகி வருகின்றனர். உழவு சாயிகள் தொடர்ந்தும் கடன் வலையில் சிக்குவது ஏன் என்பது குறித்து பல ஆய்வுகள் எழுப்பிய வினாவுக்கு இது விடை தருகின்றது.

1936 க்கும் 1948 க்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கிராமிய பொருளாதார நிலை குறித்த பல ஆய்வுகள், கிராமியத்துறையில் கடன் சுமை அதிகரித்திருப்பதாகவும், கூடிய வட்டி வீதங்கள் அறவிடப்படுவதாகவும் எடுத்துக் காட்டின. கொரியச் செழிப்பு நிலைமையின் போது 1950-51 காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு ஆய்வு, நிலைமை ஓரளவுக்கு விருத்தி பெற்றிருப்பதைக் காட்டியது. ஆனால், கிராமியத்துறையின் கடன் நிலைமைகள் பற்றி சரியான முறையில் தரவுகளைத் திரட்டி மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு 1957ல் குடிசனக் கணிப்பீட்டு புள்ளி விவரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கிராமக் குடும்பங்களில் 54 சதவீதமும், விவசாயக் குடும்பங்களல் 60 சதவீதமும் கடன்பட்ட நிலையில் இருப்பதை இவ்வாய்வு எடுத்துக் காட்டியது. இவ்வாய்வில் (முதன் முறையாக) கடன் மூலங்கள் பற்றிய தரவுகள் பெறப்பட்டதுடன் இக்கடன்களில் 8 சதவீதம் மட்டுமே நிறுவன ரீதியான மூலங்களிலிருந்து பெறப்பட்டிருந்தன. 1969 ல் இலங்கை மத்திய வங்கி கிராமியக்கடன், கடன் சுமை என்பன பற்றிய ஆய்வொன்றை மேற்கொ...டது. கிராமியத் துறையின் கடன் தேவைகளை நிறைவு செய்யவென 1961 ல் மக்கள் வங்கி தாபிக்கப்பட்டது; எனவே, நிலைமைகள மாறுதலடைந்திருந்த ஒரு சூழ்நிலையிலேயே இவ்வாய்வு நடத்தப்பட்டது.

பெருந்தொகையான கடன்கள் நிறுவன ரீதியற்ற மூலங்களிலிருந்தே பெறப்பட்டிருந்தன. இக்கடன்களை உறவினர்களும், நண்பர்களும் வழங்கியிருந்தனர். இது இலங்கைக் குடும்ப அமைப்பின் ஒரு சிறப்பம்சமாகும். இத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் பரஸ்பர நம்பிக்கையின் பேரிலும், கடப்பாட்டின் பேரிலும் மேற்கொள்ளப்படுவதால் (பெரும்பாலும்) இவற்றுக்கு வட்டி அறவிடப்படுவதில்லை. கிராமியக் கடன் கொடுப்போர் தொழில் ரீதியாகவும் கடன்களை வழங்கி வருகின்றனர்.

## அரசாங்க ஆதரவுடனான கடன் திட்டங்கள்

படுகடன் நிலை ஒரு பிரச்சினையாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர், உழவர் விவசாயிகளின் இன்னல்களைத் தீர்க்கும் பொருட்டு அரசு சார்ந்த பல நிறுவனங்கள் இப் பிரச்சினையில் தலையிடத் தொடங்கின. இவற்றுள் மிக முக்கியமானது 1912 ல் இருந்து இயங்கி வரும் கூட்டுறவுக்கடன் நிறுவனங்களாகும். இத்திட்டத்தைப் பயன்படுத்தி உழவர் விவசாயிகளுக்கு கடன்களை வழிப்படுத்தும் முயற்சியை 1947 ல் அரசாங்கம் முதன் முதல் மேற்கொண்டது. இத்திட்டம் காணி ஆணையாளரினால நாடு தழுவிய ரீதியில் நிர்வகிக்கப்பட்டது. 1952 - 1957 வரையான ஐந்தாண்டு காலத்தில் இக்கடன் திட்டத்தை உணவு உற்பத்தித் திணைக்களம் மேற்கொண்டது. இந்த ஆரம்ப வருடங்களிலேயே கடன் வினியோகம் துரிதமாக அதிகரிக்கத் தொடங்கியது; அத்துடன், பின்னர் வந்த வருடங்களின் நிலைமைகளுக்கு மாறாக மீளச்செலுத்துதலும் திருப்திகரமாக இருந்தது.

இக்கடன் திட்டம் 1957 ல் கமத்தொழில் சேவைகள் திணைக்

**இலங்கையில் கிராமியக் கொடுகடன் மூலங்கள் 1957, 1969 வருடங்களில்**

| மூலம் | 1957 | மொத்தக் கடனில் சதவீதம் | | 1969 |
|---|---|---|---|---|
| 1. நிறுவன ரீதியான மூலங்கள் .. .. .. .. | 7.8 | | | 25.0 |
| அரசாங்கம் .. .. .. .. .. | | 2.6 | | 2.7 |
| கூட்டுறவு .. .. .. .. .. .. | | 4.1 | | 9.7 |
| வர்த்தக வங்கிகள் .. .. .. .. .. | | 1.1 | | 6.7 |
| ஏனையன .. .. .. .. .. .. | | — | | 5.9 |
| 2. நிறுவன ரீதியற்ற மூலங்கள் .. .. .. .. | | | 92.2 | 75.0 |
| தொழில் ரீதியான கடன் கொடுப்போர் .. .. .. | | 15.5 | | 11.0 |
| உப தொழில் ரீதியான கடன் கொடுப்போர் .. .. | | — | | 17.8 |
| கடைக்காரர்கள் .. .. .. .. .. | | 7.4 | | 14.3 |
| வர்த்தகர்கள், தரகு முகவர்கள் .. .. .. | | 4.1 | | 1.5 |
| நிலச்சுவான்தார்கள் .. .. .. .. .. | | 8.0 | | 0.7 |
| உறவினர் நண்பர் .. .. .. .. .. | | 44.2 | | 25.8 |
| ஏனையோர் .. .. .. .. .. .. | | 13.0 | | 3.9 |
| | 100.00 | 100.00 | 100.00 | 100.00 |

மூலங்கள்: குடிசனக் கணிப்பீட்டு புள்ளிவிவரத் திணைக்களம், கிராமிய கடன் ஆய்வு 1957, இலங்கை மத்திய வங்கி, கிராமியக் கடன், படுகடன் ஆய்வு 1969.

களத்திடம் கையளிக்கப்பட்டது. 1962-63 அளவில் மொத்தக்கடன் விநியோகம் 19.3 கோடி ரூபாவாக இருந்தது; இத்தொகையில் 9.4 சதவீதம் மட்டுமே மீளச் செலுத்தப்படாதிருந்தது. இக்காலப்பிரிவில் குடிசனக் கணிப்பீட்டு, புள்ளி விவரத் திணைக்களம் நடாத்திய ஓர் ஆய்வு, சுமார் 30 சதவீதமான கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியிருப்பதனை எடுத்துக் காட்டியது. எனவே, மீளக் கடன் பெறும் அருகதை அச்சங்கங்களுக்கு இருக்கவில்லை. இதன் காரணமாக கடன் தொகையில் குறைவேற்படத் தொடங்கியது. 1968 ல் நியமனம் செய்யப்பட்ட ஒரு கமிட்டி, உத்தரவாத விலைத் திட்டத்திலான நெற் கொள்வனவை கூட்டுறவுச் சங்கங்கள மீது பிரயோகித்து, அதன் மூலம் (மறைமுகமாக) கடன்களை அறவிடும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களாக இருந்த உழவர் விவசாயிகள் தமக்குத் தேவையான கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனக் கருதப்பட்டது. மேலும், உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் அங்கத்தவர்களுக்குக் கொடுபட வேண்டியிருந்த பணத்திலிருந்து பங்கு மூலதனம் கட்டாயமாக அறவிடப்படுதல் வேண்டுமென்றும் இக்கமிட்டி சிபார்சு செய்திருந்தது. அத்துடன், கடன் பெறுபவர்கள் தமது உற்பத்தியில் குறித்த ஒரு பகுதியை சங்கத்துக்கு விற்பனை செய்ய இணங்குதல் வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டது.

இச் சிபார்சுகள் ஓரளவுக்கு அமுல் நடத்தப்பட்டு கடன்கள் விஸ்தரிக்கப்பட்ட போதிலும் மீள் அறவிடல் தொடர்பான சிபார்சு சிறப்பான முறையில் அமுலாக்கப்படவில்லை. இதன் விளைவாக திருப்பிச் செலுத்தப் படாதிருக்கும் கடன் தொகை தொடர்ந்து அதிகரித்தது.

கீழே காணப்படும் 3 காரணிகளையும் கருத்தில் கொண்டு 1967 ல் புதிய விவசாயக் கடன் திட்டம் அமுலுக்கு வந்தது:

1. மீளச் செலுத்தாதோர் தொகை அதிகரிப்பு.
2. கடன் பெற்றவர்கள் கடனைத் துஷ்பிரயோகம் செய்தமை.
3. கடன் மீளச் செலுத்துதல்களை கூட்டுறவுச் சங்கங்கள் துஷ்பிரயோகம் செய்தமை.

இந்த மாற்றங்களின் பின்னர், மக்கள் வங்கிக்கூடாக கடன்கள் வழங்கப்பட்டதுடன், கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிக்கும் பொறுப்பும் அவ்வங்கியிடம் விடப்பட்டது. மீளச் செலுத்தத் தவறியிருக்கும் கடனில் 75 சதவீதத்துக்கு மத்திய வங்கி அளிக்கும் உத்தரவாதத்துடன் இத்திட்டம் இயங்கியது. இக்கடனுக்கான வட்டி 9 சதவீதமாக இருந்ததுடன், கடனைக் கண்காணிப்பதில் விஸ்தரிப்பு அலுவலர், பயிர்ச்செய்கைக் குழுக்கள், கூட்டுறவுச் சங்கக்குழு என்போர் ஈடுபடுத்தப்பட்டனர். கடனில் ஒரு பகுதி பொருளாக — அதாவது, விதைநெல், உரம், விவசாய ரசாயனப் பொருட்கள், முட்கம்பிகள் என்பனவாக — வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழும் கூட கடன் பயன்பாடும், மீளச் செலுத்துதலும் தொடர்ந்து வீழ்ச்சியுற்று வந்தன.

நிறுவன ரீதியான கடன் திட்டங்கள் தொடர்ந்தும் எதிர் நோக்கி வந்த ஒரு பிரச்சினை, கடன் மீளச் செலுத்தாதோரின் தொகை அதிகரித்து வந்ததாகும். புதிய விவசாயக் கடன் திட்டம், விஸ்தரிக்கப்பட்ட கிராமியக் கொடுகடன் திட்டம் என்ற இரண்டும் இப்பிரச்சினையை எதிர்நோக்கின.

புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டதையடுத்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை தீவிரமாக அதிகரிக்கத் தொடங்கியது. 1947-48 ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு பார்க்கும் போது, 1975-76 வரை ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு 2310 சதவீதமாக இருக்கின்றது. வருடாந்த அதிகரிப்பு 81 ம் ஆகும். அதிகரிப்பு வீதம் தளம்பிச்சென்ற போதிலும், அதிகரிப்பு நிலையானதாக இருந்தது. எவ்வாறிருப்பினும், வருடாந்த கொடுகடன் தொகைக்கும், உற்பத்தி அளவுக்குமிடையே எத்தகைய நேரடித் தொடர்புகளும் காணப்படவில்லை. உதாரணமாக, 1960 க்கும் 1964 க்கும் இடையில் வழங்கப்பட்ட கடன் தொகை 22.4 சதவீதமாக் அதிகரித்த அதே வேளையில், நெல் உற்பத்தி 5 சதவீத அதிகரிப்பினை மட்டுமே காட் 1973, 1974 ம் ஆண்டுகளில் கடன் தொகை 376 சதவீதமாகவும், உற்பத்தி 26 சதவீதமாகவும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. மாறாக, 1959-60 காலத்தில் வழங்கப்பட்ட கடன்

## கிராமிய கடன்படுநிலையின் ஆரம்ப நிலைமைகள்

கிராமிய கடன்படு நிலை பற்றி மேற்கொள்ளப்பட்ட முதலாவது தேசிய ஆய்வுகளில் 1957 ம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட கிராமிய துறையின் கடன் நிலைமைகள் பற்றிய தகவல்கள் மிகவும் குறைவாகவே கிடைத்தன. 1936 - 1948 ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அநேக கிராமிய பொருளாதார ஆய்வுகள் உயர்ந்த மட்டத்திலான கடன்படு நிலைமைகளையும், உயர்ந்த வட்டி வீதங்களையும் காட்டுகின்றன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெரும்பாலான மாவட்டங்களில் கடன் படுநிலையிலிருந்த குடும்பங்களின் அளவு மிக உயர்வாக காணப்பட்டது. ஒரு மாவட்டத்தில் 75 வீத குடும்பங்கள் கடன்படுநிலையிலிருந்தன. சராசரியாக கடன்படுநிலை வருடாந்த சராசரி வருமானத்தின் 30 வீதத்துக்கும் 90 வீதத்துக்கும் இடைப்பட்டதாக இருந்ததுடன், மிக கூடியளவிலான குடும்பங்கள் தமது வருமானத்திலும் பார்க்க மேலதிகமான செலவினங்களை உடையனவாகவும் காணப்பட்டன. கிராமியத்துறையின் அதிகமான கடன்கள் உற்பத்தி தேவையற்ற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன என்ற பொதுவான அபிப்பிராயத்துக்கு முரணாக மிக பெருமளவிலான கடன் விவசாயச் செலவினங்களுக்கே பயன்படுத்தப்பட்டன.

1950-51 காலப்பகுதியில் கொரிய செழிப்பு நிலைமைகளின் போது மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஆய்வில் கிராமிய கடன்படுநிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது சுட்டிக் காட்டப்பட்டது. அக்காலப் பகுதியில் விவசாய விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றமே குடும்பங்கள் மத்தியில் கடன்படுநிலைமைகளின் அளவு வீழ்ச்சியுறுதற்கு பெருமளவு காரணமாகவிருந்ததில் சந்தேகமில்லை. கடனி அளவு அதிகரித்த அதே சமயத்தில், வருமானத்தின் அளவு (கடன் காரணமாக) வீழ்ச்சியடைந்ததுடன், வட்டி வீதங்களும் அதிகரிப்படைந்தன. முந்தைய ஆய்வுகளைப் போலவே உற்பத்தி நோக்கங்களுக்கான கடன்களின் அளவு மொத்த கடனின் 53 வீதம் வரை உயர்வாக காணப்பட்டது. இரு ஆய்வுகளும் கடன்களை வழங்கும் மூலங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவில்லை. ஆயினும், நிறுவன ரீதியிலான கடன்களின் பிரதான மூலமாக இருந்த கூட்டுறவுச்சங்க களின் வரையறுக்கப்பட்ட கடன் கொடுப்பனவுகளில் இருந்து, தனிப்பட்ட கடன் வழங்குவோரிலேயே பெருமளவில் தங்கியிருந்த நிலைமைகளை உணரக்கூடியதாக உள்ளது.

தொகை 24 சதவீதமாக வீழ்ச்சியடைந்த போதிலும், நெல்லுற்பத்தி 18 சதவீதமாக அதிகரித்தது. அதே போன்று, 1969-70 பருவத்தில் நெல்லுற்பத்தி 17.8 சதவீதமாக அதிகரித்த அதே வேளையில், கடன் தொகை 7 சதவீதத்தால் குறைந்திருந்தது.

நிறுவன ரீதியான கொடுகடன் அமைப்பில், கோடிட்டுக் காட்டக் கூடியதான சில போக்குகள் அவதானிக்கப்பட்டு வந்துள்ளன. அதாவது, நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு பரவலான முறையில் கடன்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில், மீளச் செலுத்தாத கடன் தொகை கூடிச்சென்றுள்ளது. அதனையடுத்து கடன் பெற அருகதையுடையோர் தொகை திடீரெனக் குறைந்து விடுவதுண்டு. கடன் விநியோகம், மீள் அறவிடல் என்ற இரு இலட்சியங்களையும் ஒரே நேரத்தில் எய்துவது சாத்தியமில்லை என்பதனை நமது நாட்டு அனுபவம் காட்டியுள்ளது.

1977 ன் யால போகம் முடிவுற்றபோது திருப்பிச் செலுத்தப்படாத மொத்தக் கடன் ரூ. 34 கோடியாக இருந்தது. 1977-78 மகா பருவத்துக்கு கடன் நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கும், மீளச் செலுத்தத் தவறியிருப்போருக்கு கடன் வழங்குவதற்கும் உத்தியோகபூர்வமாக தீர்மானிக்கப்பட்டது. இப்போகத்துக்காக வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூ. 40 கோடியாகும்; மக்கள் வங்கி மட்டும் இதில் 31.8 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. (சாதகமான காலநிலை காரணமாகவும்) இப்போகத்தின் உற்பத்தி இதுவரை கால உயர் மட்டமாக இருந்தது. அதே வேளையில் மீள அறவிடப்பட்ட கடனும் மிகமிகக் குறைவாக இருந்தது. மீண்டும், 1978-79 பருவத்தில் கடன் நிபந்தனைகள் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, இப்பருவத்தில், கடன்களை முற்றாக மீளச் செலுத்தியிருப்பவர்களுக்கு மட்டுமே கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும். மேலும், இலங்கை மத்திய வங்கி அதன் 75 சதவீத கடன் உத்தரவாதத்தையும் வாபஸ் பெற்றுள்ளது.

கடன்கள் மீளச் செலுத்தப்படாதிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. விவசாயக் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாதிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதற்காக இலங்கை மத்திய வங்கி ஓர் ஆய்வினை மேற்கொண்டது. இதன் பின்னணியில் 17 காரணங்கள் இருப்பதாக இவ்வாய்வு காட்டியது. குறைந்த விளைச்சல், பயிர்நாசம், கூட்டுறவு அதிகாரிகளின் அக்கறையின்மை, வேறு நோக்கங்களுக்காக பணத்தைப் பாவித்தல், அரச அதிகாரிகளின் ஊழல், அரசியல் தலையீடு, விவசாயிக்கு திருப்பிச் செலுத்தும் நோக்கமின்மை என்பன இவற்றுள் முக்கியமானவையாகும். மறு வார்த்தைகளில் கூறுவதாயின், சிலருக்கு கடன்களைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் இல்லை; சிலர் இக் கடன்களைத்

## 1957 ல் கிராமியக் கடன்

1957 ல் குடிசன, புள்ளிவிபர திணைக்களம் மேற்கொண்ட கிராமிய கடன்படுநிலை ஆய்வுகளே கிராமிய துறையின் கடன் நிலைமைகள் பற்றி முதன் முதலாக சேகரிக்கப்பட்ட ஒழுங்கு முறையான தரவுகளாகும். இந்த ஆய்வுகளின்படி 54 சதவீதமான கிராமிய குடும்பங்களும், 60 சதவீதமான விவசாய குடும்பங்களும் கடன்பட்டனவாக இருந்தன. சராசரியாக இக் கடன்தொகை, சகல குடும்பங்களுக்கும் என்ற ரீதியில் தலா குடும்பமொன்றுக்கு 790 ரூபாவாகவும் விவசாய குடும்பமொன்றுக்கு அதே வகையில் 753 ரூபாவாகவும் இருந்தது.

கடன் பெறும் மூலங்கள் பற்றிய தகவல் முதன் முறையாக பெறப்பட்டது. எட்டு வீதத்துக்கும் குறைவான கடன், நிறுவனங்களுக்கூடாக கிடைத்தது. நிறுவன கடன் வழங்கும் மூலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கிய இடத்தை பெற்றதுடன் நிறுவன கடன் வழங்கும் மூலங்களின் அரைபங்கிற்கும் மேற்பட்ட தொகையை அல்லது மொத்த கடனின் 4.1 வீதத்தை இவை வழங்கின. அட்ட

தனிப்பட்ட வகையிலான கடன் வழங்கும் மூலங்கள் பலவகைப்பட்டன. இவ்வகையான கடன்களில் சுமார் 44 சதவீதம் உறவினர்கள், சிநேகிதர்களிடமிருந்து பெறப்பட்டவையாக இருந்தன. அதே சமயம் நிலச்சுவான்தார்கள் மொத்த கடனின் 8 வீதத்தை மட்டுமே வழங்கினர். பெட்டிக்கடை வைத்திருப்போர், வியாபாரிகள், கமிசன் ஏஜென்டுகள் என்போர் மொத்தக் கடனின் 11.5 வீதத்தை வழங்கினர். எனவே, கடன் வழங்குவதை தொழிலாகக் கொண்டவர்கள் வழங்கிய தனிப்பட்ட கடன்களின் தொகை மொத்தக் கடனின் 15.5 வீதமாக மட்டுமே இருந்தது.

பிரதேச ரீதியாகவும் கடன் மூலங்களின் வேறுபாடுகள் அவதானிக்கத் தக்கவையாக இருந்தன. கடன் வழங்கும் மூலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் கண்டி (24.4%), மட்டக்களப்பு (19.2%), பொலனறுவை (24.4%) ஆகிய மாவட்டங்களில் முக்கியத்துவம் பெற்றன. அதே சமயத்தில் கொழும்பு, களுத்துறை, மாத்தளை, மாத்தறை, அம்பாந்தோட்டை, சிலாபம், இரத்தினபுரி, கேகாலை, மாவட்டங்களின் மொத்த கடனின் 3% க்கும் குறைவான பங்கையே இவை வழங்கின. வெவ்வேறு மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி சமனற்றதாக காணப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

நாடெங்கிலும் குறிப்பிடத்தக்க பாரிய கடன் வழங்கும் மூலமாக இருந்தது உறவினர்களும், சினேகிதர்களுமாவர். யாழ்ப்பாணம் (55%), வவனியா (59%), திருக்கோணமலை (59%), கேகாலை (61% மாவட்டங்களில் 50 சதவீதத்துக்கும் கூடிய கடனை இவர்கள் வழங்கியிருந்தனர். ஆயினும் புத்தளம் (21%), சிலாபம் (21%), அனுராதபுரம் (13%), பதுளை (18%) மாவட்டங்களில் உறவினர், சினேகிதர் மூலமாக கிடைத்த கடன் 30% க்கு குறைவானதாகும்.

மாத்தளை (22%), நுவரெலியா (26%), மட்டக்களப்பு (35%) மாவட்டங்களில் கடன் வழங்கும் மூலங்களில் நிலச்சுவான்தார்கள் முக்கிய இடம் பெற்றனர். புத்தளம் (41), அனுராதபுரம் (45%), இரத்தினபுரி (31%) மாவட்டங்களில் கடைக்காரர்கள் குறிப்பிடத்தக்க கடன் வழங்கும் மூலமாக இருந்தனர். கடன் வழங்குவதை தொழிலாகக் கொண்டவர்கள் கொழும்பு (28%), அம்பாந்தோட்டை (32%), சிலாபம் (23%), அனுராதபுரம் (27%), பதுளை (24%) ஆகிய மாவட்டங்களில் முக்கிய கடன் வழங்கும் மூலங்களாக காணப்பட்டனர். சிலாபம் மாவட்டத்தில் (29%) திரியும் வியாபாரிகள் விசேடமாக குறிப்பிடக் கூடிய கடன் வழங்குபவராக விளங்கினர்.

உற்பத்தி சார்ந்தது, உற்பத்தி சாராதது என்ற இரு பெரும் பிரிவுகளில் கடன்களுக்கான நோக்கம் வகுக்கப்பட்டது. மொத்த கடனில் 56% உற்பத்தி தேவைகளுக்காகவும், 44% உற்பத்தி சாராத காரணங்களுக்காகவும் பெறப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது. உற்பத்தி தேவைகளுக்கான கடன் பிரிவில் வேளாண்மை, விலங்குவளர்ப்பு, வர்த்தகம், நிர்மாண வேலைகள், வாகனங்களை வாங்குதல் போன்ற காரணங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. அதே வேளையில், உற்பத்தி சாராத பிரிவில் செலவினங்கள், உணவு, மருத்துவம், வைபவங்கள், கடன் மீளச் செலுத்துதல் போன்றவற்றுக்காகப் பெறப்பட்ட கடன்கள் அடங்கின.

நோக்கம் குறித்த பங்கீட்டில் குறிப்பிடத்தக்க அம்சம், உற்பத்தி தேவைக்கான கடனில் வியாபாரம், நிர்மாணம் என்பவை பிரதான இடம் பெற்றிருந்ததாகும். ஏறக்குறைய இவை கடன்களின் 30% வீதத்தைக் கொண்டிருந்தன. வேளாண்மை கடனாக 10% மும் ஏனைய விவசாய கடன்களாக 12% மட்டுமே பெறப்பட்டது. பெரும்பாலான மாவட்டங்களில் கடன்களின் பெரும்பகுதி உற்பத்தி நோக்கங்களுக்காகவே பெறப்பட்டது. வேளாண்மைக்கான கடனில் உயர்ந்த பங்கினை பொலநறுவை (70%), கண்டி (20%), புத்தளம் (54%), மட்டக்களப்பு (53%), வவனியா மாவட்டங்கள் பெற்றன.

திருப்பிச் செலுத்தத் தேவையில்லை என்று நினைக்கின்றனர். திருப்பிச் செலுத்த வேண்டிய அவசியமில்லையென விவசாயிகள் நினைத்திருந்தபடியால், 14.6 சதவீதமான கடன்கள் மீளச் செலுத்தப்படாதிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் பற்றிய மாதிரி ஆய்வொன்றினை மக்கள் வங்கி 1977 ல் நாடு தழுவிய ரீதியில் நடாத்தியது. விவசாயக் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாமைக்கான பிரதான காரணங்கள் அவ்வாய்வறிக்கையில் அட்டவணையைப் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன் பெற்றவர்களால் தெரிவிக்கப்பட்ட இக்காரணங்கள், வங்கி நடாத்திய ஏனைய ஆய்வுகளின் போது உறுதி செய்யப்பட்டன. 1977-78 மகா பருவத்துக்கு வழங்கப்பட்ட கடன்களில் 1978 டிசம்பர் வரையில் 13.6 சதவீதம் மட்டுமே மீள அறவிடப்பட்டிருந்தது. மிகக் குறைவான மீள் அறவிடல் வீதம் வவுனியா மாவட்டத்திலும் (2.3 %), மிகக் கூடிய வீதம் பொலனறுவை மாவட்டத்திலும் (71 %) பதிவு செய்யப்பட்டது.

பல்வேறு கூறுகளையும் உள்ளடக்கிய பரந்த ரீதியிலான திட்டமொன்றின் ஓரம்சமாகவே சொடு கடன் காணப்படுகின்றது. விவசாயி நெல்லினை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் இலாபம், நெல்லின் உத்தரவாத விலையிலேயே தங்கியிருக்கின்றது. இந்த இலாபம், கடனை மீளச் செலுத்தும் ஆற்றலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்கின்றது.

கமநல ஆய்வு பயிற்சி நிறுவனம் 1976-77 மகா போகத்தின் போது நடத்திய ஓர் ஆய்வு, ஒரு புசல் நெல்லின் உற்பத்திச் செலவினையும், உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் விற்பனை செய்யும் பட்சத்தில் விவசாயி பெறும் இலாப எல்லைகளையும் எடுத்துக் காட்டியது. எவ்வாறிருப்பினும், விவசாயி உழைக்கும் எல்லை இலாபம் இன்னும் போதியதாக இல்லை.

எவ்வாறிருப்பினும், உத்தரவாத விலைத்திட்டத்தின் இயக்கம் பல்வேறு காரணிகளிலும் தங்கியிருக்கின்றது. தனியார் துறை கொள்வனவாளர்களுடன் ஒப்பிடும் போது அரச மட்டத்திலான கொள்வனவு அமைப்பு

**விவசாயக் கடன்களை மீளச் செலுத்தமைக்கான காரணங்கள்**

| | காரணம் | வெளியிட்டோர் தொகை | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | பயிர் நாசம் .. .. .. .. | 148 | 65.78 |
| 2. | விஸ்தரிப்புச் சேவைக் குறைபாடு .. .. | 16 | 7.11 |
| 3. | வேறு துறைகளில் முதலீடு .. .. .. | 18 | 8.0 |
| 4. | கடன்களை அரச உதவியாக கருதியமை .. | 13 | 5.77 |
| 5. | ஏனைய கடன்களை முதலில் செலுத்தியமை .. | 15 | 6.67 |
| 6. | ஏனைய காரணங்கள் .. .. .. | 15 | 6.67 |
| | | 225 | 100.0 |

நெகிழ்ச்சியற்றதாகவும், விவசாயிகளைப் பொறுத்த வரையில் சற்றுச் சங்கடமானதாகவும் இருக்கின்றது.

பெற்ற கடன்களை மீளச் செலுத்தும் விவசாயியின் ஆற்றல், தனது உற்பத்திகளை நியாயமான விலைகளில் விற்பனை செய்வதிலேயே தங்கியிருக்கின்றது. உத்தரவாத விலைத்திட்டம் நியாயமான விலையொன்றை வழங்கினாலும் கூட, பல சந்தர்ப்பங்களில் விவசாயிகளுக்கு இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை; உத்தரவாத விலைக்கும், விவசாயி தனது உற்பத்தியை விற்பனை செய்யும் விலைக்குமிடையிலான வேறுபாடு மாவட்டத்துக்கு மாவட்டம் வித்தியாசப்பட்டுச் செல்கின்றது.

## கொடுகடனும் உயர் விளைச்சல்தரும் நெல் இனங்களும்

உயர் விளைச்சல் தரும் நெல் இனங்கள் செலவு கூடிய உள்ளீடுகளை வேண்டி நிற்பதால் அவற்றுக்கான கடன் தேவையும் அதிகமாகும். இலங்கையில் இன்று பாவிக்கப்படும் நெல் இனங்களை பொதுவாக 4 பிரிவுகளாக வகுக்கலாம். பாரம்பரியமானவை (ஏக்கர் விளைச்சல் திறன் 40 புசல்), விருத்தி செய்யப்பட்ட பாரம்பரிய இனங்கள் (60 புசல்), பழைய கூடிய விளைச்சல் தரும் இனங்கள் (80 - 100 புசல்), புதிய கூடிய விளைச்சல் தரும் இனங்கள் (120 - 140 புசல்) என்பனவையே இவையாகும். அறுபதுக்களின் ஆரம்பத்தில் புதிய கூடிய விளைச்சல் தரும் ''எச்'' நெல் இனம் பரவலாகப்பாவனைக்கு வந்தது. 1970 ம் ஆண்டளவில் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பில் சுமார் 70 சதவீதத்தில் இந்த இனமே விதைக்கப்பட்டிருந்தது. 1973-74 மகா பருவத்தில் பயன்படுத்தப்பட்ட விதை நெல் வகைகள் பற்றிய விவரம் மேழே தரப்படுகின்றது.

ஏக்கருக்கு 100 புசல்களிலிருந்து 140 புசல்கள் வரை விளைச்சல் தரும் புதிய நெல் இனங்கள் இங்ஙனம் விதைக்கப்பட்டபோதிலும், தேசிய சராசரி இன்னும் 50 புசலுக்குக் குறைவானதாகவே இருக்கின்றது.

**மகா 1973-74 — விதை நெல்**

| | விவசாயிகள் விதம் |
|---|---|
| அதிக விளைச்சல் தரும் புது இனங்கள் .. .. | 42.0 |
| அதிக விளைச்சல் தரும் பழைய இனங்கள் .. .. | 33.3 |
| பாரம்பரிய இனங்கள் .. | 24.7 |

மூலம்: அறுவடை ஆய்வு

அடுத்து, பசளைப் பிரயோகம் பற்றிப் பார்ப்போம். அண்மைய வருடங்களில் பசளைப் பிரயோகம் தொடர்ந்து அதிகரித்து வந்திருப்பதுடன், அரசு சுமார் 50 சதவீதத்துக்கு உரமானியம் வழங்கி வருகின்றது. ஆனால், 1974 ல் உரமானியம் குறைக்கப்பட்டதையடுத்து பசளைப் பிரயோகம் குறைவடைந்தது.

எனவே, கடன் விநியோகம், அதன் பாவனை, மீள் அறவிடல் என்பன வெறுமனே நிதி நிலைமைகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. பண்ணை நிலத்தின் அளவு, (மீளச் செலுத்துவதைச் சாத்தியமாக்கும் வகையில்) மிகையை ஏற்படுத்தக்கூடிய அதன் ஆற்றல் என்பவற்றிலேயே அவை தங்கியிருக்கின்றன. மேலும், நடைமுறையிலிருக்கும் குத்தகை அமைப்பினையும், ஈற்றில் உழவனுக்கு எஞ்சும் நெல்லின் அளவையும் நாம் கவனத்தில் எடுத்தல் அவசியமாகும். சந்தைப்படுத்தல் அமைப்பு, விவசாயி பெற்றுக் கொள்ளும் விலை என்பவற்றிலும் கடனை மீளச் செலுத்தும் அவனது ஆற்றல் தங்கியிருக்கின்றது. அதுமட்டுமன்றி, இதனை நிர்ண

### சில நெல் உற்பத்தி மாவட்டங்களில் இலாப எல்லைகளும் உற்பத்திச் செலவுகளும்

| | பொலன்னறுவை | அம்பாந்தோட்டை | கண்டி-கேகாலை | கொழும்பு |
|---|---|---|---|---|
| உற்பத்திச் செலவு (ரு) .. .. .. | 24.39 | 23.00 | 25.44 | 29.75 |
| புசல் நெல்லுக்கான உத்தரவாத விலை ரு. 33/- ஆக இருக்கும்போது இலாப எல்லை (ரு.) .. .. | 8.61 | 10.00 | 7.66 | 3.25 |
| உற்பத்திச் செலவுகள் இலாப எல்லை சதவீதம் .. | 35 | 43 | 30 | 11 |

யிப்பதில் காப்புறுதிச் சேவைகள், புதிய கூடிய விளைச்சல் தரும் நெல்லினங்கள், விவசாய இரசாயனப் பொருட்கள் என்பனவும் கூடிய பங்கு வகிக்கின்றன. இவை யாவற்றுக்கும் மேலாக கடன் பெறும் விவசாயியின் சமுகவியல் பின்னணியை நாம் அவதானித்தல் வேண்டும். இலங்கையைப் போன்ற ''அரசியல் மயப்பட்ட'' ஒரு நாட்டில், கடனும் ஒருவகையில் அரசியலாகவே இருந்து வந்துள்ளது; அதாவது நெல் உற்பத்தியுடன் எவ்வகையிலும் தொடர்பில்லாத சந்தர்ப்பங்களில் கடன் குழாய் திறக்கப்படுவதும், மூடப்படுவதுமுண்டு. கடன்களைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு மீண்டும் மீண்டும் கடன்களை வழங்குவதும் அவர்களைத் தொடர்ந்தும் அவ்வாறு செய்யத் தூண்டுவதுடன், கடன்களைச் செலுத்தும் விவசாயியை ஏளனம் செய்து பரிகசிக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ள உளவியல்ச் சூழல், கடன்களைச் செலுத்தாதவனை ''மக்கள் வீரனை'' கருதும் அளவுக்கு முன்னேறிச் சென்றுள்ளது. இத்தகைய ஒரு சூழலிலேயே விவசாயக் கடன்கள் ஒரு மறைமுகமான மானியமாகக் கருதப்பட்டு வருகின்றன. இந்த மனோநிலை மென்மேலும் வலுப்பெற்று வருவதைக் காண முடிகின்றது.

#### நெல் உற்பத்திக்கான உர விநியோகம்

(ஆயிரம் தொன்களில்)

| | | | |
|---|---|---|---|
| 1961 | .. | .. | 29.0 |
| 1962 | .. | .. | 38.1 |
| 1963 | .. | .. | 47.1 |
| 1964 | .. | .. | 60.1 |
| 1965 | .. | .. | 42.0 |
| 1966 | .. | .. | 44.1 |
| 1967 | .. | .. | 73.2 |
| 1968 | .. | .. | 85.2 |
| 1969 | .. | .. | 83.5 |
| 1970 | .. | .. | 87.1 |
| 1971 | .. | .. | 95.4 |
| 1972 | .. | .. | 88.4 |
| 1973 | .. | .. | 125.5 |
| 1974 | .. | .. | 96.4 |
| 1975 | .. | .. | 48.7 |
| 1976 | .. | .. | 72.4 |
| 1977 | .. | .. | 81.5 |
| 1978 | .. | .. | 113.3 |

## காப்புறுதி

பயிர் அழிவு விவசாயிகளின் ஊக்கத்தை மங்கச் செய்துவிடும் ஒரு முக்கிய காரணியாகும். மேலும், கொடுகடன் திட்டங்கள் உத்தரவாத விலைத் திட்டம், விஸ்தரிப்புச் சேவைகள் என்பவற்றையும் அது பயனற்றவையாக்கிவிடுகின்றது. கடனிலும், கிராமியப் படுகடன் தன்மையிலும் அது நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. விவசாயி எதிர்நோக்கும் நிச்சயமின்மைகளுக்கு மத்தியில், வறட்சி, வெள்ளம், கிருமிகள், நோய்கள் என்பன அவனைக் கதிகலங்கச் செய்துவிடுகின்றன. இதன் காரணமாக புதிய முறைகளைக் கையாள அவன் தயக்கங் காட்டுகின்றான். விவசாயத்துறையைப் பொறுத்த வரையில், காப்புறுதி என்பது, ஒரு பயிர் நாசத்துக்குப் பின்வரும் கூட விவசாயத்தை தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில் விவசாயிக்கு நிதிப் பாதுகாப்பு அளிப்பதனையே குறிக்கின்றது. பயிர்க்காப்புறுதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மிகச்சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

நெற் பயிர் காப்புறுதித் திட்டங்கள் 1958 இலிருந்து (ஏதோ ஒரு உருவில்) இயங்கி வந்திருக்கின்றன. இந்த வருடத்தில் மகா பருவத்தின்போது ஒரு முன்மாதிரித் திட்டத்துக்காக, 5 மாவட்டங்களில் 26,000 ஏக்கர் நிலம் காப்புறுதிக்காகத் தெரிவு செய்யப்பட்டது. 1962-63 பருவத்தில் 11 மாவட்டங்களில் 65,000 ஏக்கர் நிலம் காப்புறுதியின் கீழ் வந்தது. இது மேலும் விஸ்தரிக்கப்பட்டு, 1973-74 மகா பருவத்தில் 16 மாவட்டங்களில் 200,000 ஏக்கர் நிலம் காப்புறுதி செய்யப்பட்டது.

எழுபதுக்களின் ஆரம்பத்தில் இக்காப்புறுதி அமைப்பில் சில பிரதான குறைபாடுகள் கண்டறியப்பட்டன. சேகரிக்கப்பட்ட தவணைப் பணம் மிகக் குறைவாக இருந்த அதே வேளையில், வழங்கப்பட்ட நட்ட ஈடுகள் மிகக் கூடுதலாக இருந்தன. இதனையடுத்து, 1973 ன் விவசாயக் காப்புறுதிச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. நெல்லுக்கான கட்டாயக் காப்புறுதி அமைப்பொன்றை இது தாபித்தது. இவ்வமைப்பை அமுல் நடத்தும் பொறுப்பு விவசாயக் காப்புறுதிச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. தவணைப் பணத்தின் அளவு பிராந்திய ரீதியில் நிர்ணயிக்கப்பட்டது. புதிய அணுகு முறையுடன் கூடிய இந்தத் திட்டம் 1975 யால பருவம் முதல் இயங்க ஆரம்பித்தது. நெல் உற்பத்தியின் கீழ் இருக்கும் சகல பகுதிகளும் இத் திட்டத்தின் கீழ் வருமென எதிர்பார்க்கப்பட்டது.

முன்னைய முறை, காப்புறுதி அலகாக குடியிருப்பாளரையே கருதியது; புதிய முறையின் பிரகாரம் பயிர்ச்செய்கைக் குழுப் பிரதேசமே காப்புறுதி அலகாக கணிக்கப்பட்டது. தனிப்பட்ட விவசாயிகள் பயிர்ச்செய்கைக் குழுவில் தமது பெயரைப் பதிவு செய்து, காப்புறுதி நோக்கங்களுக்காக தமது நிலங்களைச் சேர்த்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. பழைய காப்புறுதித் திட்டம் சுமார் 900,000 காப்புறுதி செய்யப்பட்ட அலகுகளை கையாள வேண்டி இருந்ததற்குப் பதிலாக, புதிய திட்டம் 5600 அலகுகளை மட்டுமே கையாள வேண்டி ஏற்பட்டது. பயிர்ச் செய்கைக் குழுவின் விவசாய உற்பத்திக் கமிட்டி விவசாயியுடன் நேரடித் தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

இந்த ஏற்பாடானது, கிராம மட்டத்தில் பலவிதமான முறைகேடுகளுக்கு வழி வகுத்தது கண்டறியப்பட்டது. அரசியல் சார்புநிலைகள் காரணமாக, சில ''விவசாயிகள்'' பயிர்ச்செய்கைக் குழு

வின் காப்புறுதிப் பதிவேட்டில் தமது பெயர்களையும் சேர்க்கச் செய்து நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொள்ள முயன்றனர். இதன் விளைவாக, காப்புறுதிச்சபை பல சந்தர்ப்பங்களில் நட்ட ஈடு வழங்க மறுத்துள்ளது.

புதிய காப்புறுதித் திட்டம் 1975 ல் அமுல் செய்யப்பட்டதன் பின், விவசாயக்கடன் வழங்கும் நிறுவனங்கள் காப்புறுதியைக் கட்டாயப்படுத்தின. தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர், காப்புறுதித் தவணைப் பணங்களை அக் கூட்டுறவுச் சங்கங்கள் சேகரித்து அப்பிரதேசத்தின் விவசாய உற்பத்தி நிலையத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஒரு பருவத்துக்கு ஒரு ஏக்கருக்கான தவணைப்பணம் ரூ. 8/- லிருந்து ரூ. 30/- வரையிலிருக்கும். காப்புறுதிச் சபை குறித்த பிரதேசத்தின் விவசாய உற்பத்தி நிலையத்துடன் கலந்தாலோசித்து தவணைப்பண அளவினை நிர்ணயம் செய்யும். 1976 ல் தவணைப்பண வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டு 1976-77 மகா பருவத்தில் புது வீதங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்படும் போது, சாகுபடி நிலம் முழுவதும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கின்றதா என்பதை வங்கி கவனித்தல் வேண்டும். தற்போதைய 1978-79 மகா பருவத்துக்கு விவசாயக் கடன்களைக் கோரும் விவசாயிகள் மிகக் கூடிய கட்டாய தவணைப்பணம்—அதாவது ஏனையவர்களை விடவும் மூன்று மடங்கு — செலுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயக் கடன்களை மீள அறவிடுதலில் மிக மோசமான அனுபவங்களைப் பெற்றிருக்கும் வங்கிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே, இந்த உயர் வீதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இப்புது முறையின் நன்மை தீமைகளைப் பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும்.

காப்புறுதியினால் பாதுகாப்பு பெற்ற நிலப்பரப்பளவு தொடர்ந்தும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. 1976-77 மகா போகத்தின் போதுகூட மொத்த சாகுபடி நிலப்பரப்பில் 22 சதவீதம் மட்டுமே காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. இப்பருவத்தில் திரட்டப்பட்ட தவணைப் பணம் மொத்த இலக்கில் 20 சதவீதமாக இருந்ததுடன், முன்னைய வருடத்தை விடவும் எல்லாரீதியிலான குறைவையும் காட்டியது. 1977 யால பருவத்தில் 8 சதவீதமான நிலப்பரப்பே காப்புறுதி செய்யப்பட்டிருந்தது; மேலும், திரட்டப்பட்ட தவணைப் பணம் மொத்த இலக்கில் 8 சதவீதமாக இருந்ததுடன், முன்னைய யால பருவத்தை விடக் குறைவாகவும் இருந்தது.

காப்புறுதித் திட்டத்தின் ஆரம்ப வருடங்கள் கடுமையான வறட்சிகளால் பாதிக்கப்பட்டவை என்பதை மனதில் இருத்திக் கொள்ளல் வேண்டும். 1976 ன் பின்னர் நிலைமைகள் சாதகமாக மாற்றமடைந்ததுடன், காப்புறுதித் திட்டம் (அதன் குறைபாடுகளுக்கு மத்தியிலும்) சற்று நம்பிக்கையூட்டுவதாகத் தென்படுகின்றது.

நாம் இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் போது, கிராமியத்துறையின் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதில் கொடுகடன் கொள்கைகள் மட்டும் தனித்து வெற்றி பெறப் போவதில்லை என்பதைக் காண முடிகின்றது. காலனித்துவத்தின் ஆரம்ப நாட்களில் தேசத்தின் பொருளாதாரம் இரட்டைத் தன்மை வாய்ந்த அமைப்பாக மாறியதிலிருந்தே கிராமியத் துறையில் மிகச் சிக்கலான பல அடிப்படைப் பிரச்சினைகள் தோன்றி வளர்ச்சியடைந்து வந்துள்ளன. குத்தகை அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரும் விவசாயச் சீர்திருத்தங்கள், கிராமிய நிறுவனங்களின் அபிவிருத்தி என்பவற்றினால் மட்டுமே இப்பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துவிட முடியும்.

கிராமியத்துறைக்கான கொடுகடன், விவசாய அபிவிருத்திக் கொள்கையுடன் வைத்து நோக்கப்படுதல் வேண்டும். கொடுகடன் அமைப்பு சிறப்பான முறையில் இயங்குவதற்கு சமூக பொது முதலீட்டுத் தேவைகள், நிறுவன அமைப்புக்கள் என்பன முன்னிபந்தனைகளாகும். விருத்தியாக்கப்பட்ட தொழில்நுட்பம், விஸ்தரிப்

## இலங்கையில் நெற்காணித்துண்டுகளின் அளவு

விவசாயத் துறையிலுள்ள பெரும்பான்மையரான உற்பத்தியாளர்கள் சிறு நெற்காணித் துண்டுகளை உடையவர்களாக உள்ளனர். 1962 ல் மேற்கொள்ளப்பட்ட விவசாய மதிப்பீட்டின்படி, முழு விவசாய துறையினதும் 95.8 வீதமான காணித்துண்டுகள் 10 ஏக்கருக்குக் குறைவானவை. பெருந்தோட்டப் பயிர்களுடன் ஒப்பிடும்பொழுது நெல் உற்பத்தி சிறிய காணித்துண்டுகளிலேயே செயற்படுத்தப்படுவது மிகவும் தெளிவாகின்றது. 1970 ல் கமநல சேவைகள் திணைக்களம் திரட்டிய தரவுகள், நெல்லைப் பொறுத்தவரையில், உற்பத்தியாளர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஒரு ஏக்கருக்கும் குறைவான துண்டுகளையே பெற்றிருந்தனர் என்பதையும், மொத்த நெற்காணியின் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கில் மட்டுமே பயிர் செய்ததையும் சுட்டிக்காட்டியது. இந்த மூன்றில் இரு பங்கு உற்பத்தியாளர்களின் சராசரி வேளாண்மை நிலம் ஏறக்குறைய அரை ஏக்கராக மாத்திரமே காணப்பட்டது. மேலும், இதே தரவுகளின்படி, தீவின் முக்கால் பங்கு நெற்காணித் துண்டுகள் 5 ஏக்கருக்கும் குறைவாகவே காணப்பட்டன. இம் மதிப்பீடுகளை ஏனைய மாவட்ட மட்டத்திலான ஆய்வுகளும் உறுதிப்படுத்தின. உதாரணமாக, கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் 1974ல் அம்பாந்தோட்டையில் மேற்கொண்ட ஆய்வுகள், இங்கு நெற்செய்கையில் ஈடுபட்டவர்கள் சராசரி 1.9 ஏக்கர் பரப்பு மேட்டு நிலங்களைப் பயன்படுத்தினார்கள் என்பதை சுட்டிக்காட்டிய அதே சமயத்தில், வேறு இரு மாவட்டங்களின் ஆய்வுகள் (குறிப்பாக பொலநறுவையும் கண்டியும்) முறையே 2.2 ஏக்கராகவும், 2.1 ஏக்கராகவும் இருந்ததை காட்டின.

மேலும், 1970 ம் ஆண்டின் நெற்காணி பதிவுகள், குத்தகை வேளாண்மையாளர்களின் தொகை 318,459 என்றும், வேளாண்மை நிலம் 308,459 ஏக்கர்கள் என்றும் 239,411 நில உடமையாளர்கள் இந் நிலங்களுக்கு உரிமையாளர்களாக இருந்தனரென்றும் எடுத்துக்காட்டியது. இருந்தனரென்றும் எடுத்துக்காட்டியது. எனவே, நில உடமையாளர்கள் சிறு நிலப்பரப்புகளையே தம்மிடம் வைத்திருந்தனர் என்பது தெளிவாகிறது. நெற்காணிகளின் 800,000 உரிமையாளர்களில் 3.6 னர் மட்டுமே 5 ஏக்கருக்கும் அதிகமான நிலத்தைப் பெற்றிருந்தனர்.

450,929 குத்தகை வேளாண்மைக்காரர்கள் அரை ஏக்கர் நெல் வயல்களிலேயே வேலை செய்கின்றனர் என்றும்; ஏறக்குறைய 7,000 குத்தகை வேளாண்மையாளர்கள் 10 ஏக்கரும் அதற்கு அதிகமானதுமான வயல்களில் வேலை செய்கின்றனரென்றும் மிகவும் அண்மைக்கால அறிக்கைகள் சுட்டிக்காட்டின. அரசாங்கம் தற்போது குத்தகை வேளாண்மைக்காரர்கள் 5 ஏக்கர் நிலத்திலேயே வேலை செய்தல் வேண்டும் என்கிற, நிலப்பரப்பை கட்டுப்படுத்தும் சட்ட மூலத்தை அறிமுகம் செய்துள்ளது. நெற்பயிர்ச் செய்கையின் உச்ச பயனை பெறுவதில் 5 ஏக்கருக்கு மேலான எதுவும் தனியொரு வேளாண்மையாளரது சக்திக்கு அப்பாற்பட்டதென அரசாங்கம் கருதுவதே இதற்கு காரணமாகும்.

புச் சேவைகள், நீர்ப்பாசன அமைப்புக்கள், போக்குவரத்து வசதிகள், சந்தைப்படுத்து வசதிகள் என்பன பொருத்தமான முறையில் கிடைக்கும் ஒரு பின்னணியிலேயே கொடுகடன், விவசாயம் என்பன தாக்கமானவையாக அமைய முடியும்.

கிராமியக் கொடுகடன் பிரச்சினையின் பிறிதொரு அம்சம் நுகர்வுத் தேவைகளுக்கான கடன்களாகும். நுகர்வுத் தேவைகளுக்கு நிறுவன ரீதியான கடன்கள் வழங்கப்படுவதில்லை. பல வருடங்களாக கொடுகடன் நிறுவனங்கள் உற்பத்தித் தேவைகளுக்காக மட்டுமே கடன்களை வழங்கி வந்திருக்கின்றன. நுகர்வுக் கடன்களை வழங்குவதில் கிராமிய வங்கிகள் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன. எனினும், சேமிப்புக்களை ஒன்று திரட்டும் அவற்றின் ஆற்றலிலேயே கொடுகடன் நடவடிக்கைகளின் விஸ்தரிப்பு தங்கியிருக்கின்றது.

உற்பத்திக்கடன், நுகர்வுக் கடன் என கடன்களை வகை பிரிப்பதும், கடனை உற்பத்தி நோக்கத்துக்காக மட்டும் கட்டுப்படுத்துவதும் பல சந்தர்ப்பங்களில் உற்பத்தி முயற்சிக்கு ஊறு விளைவிப்பதாக இருந்து வந்துள்ளது. நுகர்வுத் தேவை மிக முக்கியமானதாகும். அவை நிறைவு செய்யப்படாத பட்சத்தில், ஒன்றில் உற்பத்திக் கடன் நுகர்வுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும்; அல்லது, உற்பத்திக்கடன் பொருளாக வழங்கப்படும் பட்சத்தில், விவசாயியின் நுகர்வுக் கடன் பொறுப்பு, உற்பத்திக் கடனை தாக்கமற்றதாக்கிவிடும்.

கொடுகடன் பற்றிய விவாதத்தில் சில தெளிவான எடுகோள்கள் பாவிக்கப்படுவதுண்டு; அதாவது, நிறுவன ரீதியான கடன் ''நல்லது'' என்றும், நிறுவன ரீதியற்ற கடன் ''மோசமானது'' என்றும் கருதப்பட்டு வருகின்றது. நிறுவனங்கள் குறைந்த வட்டி வீதங்களையும், ஏனைய கடன் கொடுப்போர் உயர் வட்டி வீதங்களையும் அறவிடுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், உழவர் விவசாயிகள் இப்படி உணர்வதில்லை. அவர்களைப் பொறுத்த வரையில், நிறுவன ரீதியற்ற கடன் மூலம், நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய தாகவும், நுகர்வுத் தேவைகளுக்கு கடன் வழங்குவதாகவும், செலவு குறைந்த கொடுக்கல் வாங்கல் முறைகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது. மேலும், நிறுவன ரீதியற்ற சில மூலங்கள் குறைந்த வட்டி வீதங்களை அறவிடுகின்றன; அல்லது வட்டி அறவிடுவதே இல்லை.

''நிறுவன ரீதியான துறை நிறுவன ரீதியற்ற துறைக்கு கடன்களை வழங்க வேண்டும் என்பது பலருக்கு ஒரு முரண்பாடான கருத்தாகத் தென்படலாம். ஆனால் நிறுவன ரீதியற்ற துறையில் திரவத் தன்மை அதிகரிக்கும்போது, கொடுகடன் நடவடிக்கைகளில் கடன் தொடுப்போரிடையே போட்டி ஏற்பட்டு வட்டி வீதங்கள் குறைவடையும்.'' என்று அண்மையில் ஒரு பொருளியல் அறிஞர் குறிப்பிட்டார். கிராமியத்துறையில் இத்தகைய நிலைமைகளின் கீழ் இயங்குவதற்கு நிறுவன ரீதியற்ற துறைக்கு வசதிகள் வழங்கப்படுமாயின், இக்கொள்கை அதன் நோக்கங்களில் வெற்றி பெற முடியும். மறுபுறத்தில் நிறுவன ரீதியான துறையின் வெற்றி, நிறுவன ரீதியற்ற துறையுடன் தொடர்பு கொள்ளும் அதன் ஆற்றலிலேயே தங்கியிருக்கின்றது.

கிராமியத்துறைக்கு கொடுகடன்களை வழங்கும் நிறுவனங்களின் தொகை அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்திருப்பது உண்மையே. ஆனால், கிராமியத்துறைக்குப் பணிபுரியும் நிறுவனங்களின் ஆற்றலிலும், திறமையிலுமே கடன் விஸ்தரிப்பு, அதன் பொருத்தமான பாவனை என்பவற்றின் வெற்றி தங்கியிருக்கின்றது.

## நெல்லின் குத்தகை ஒழுங்குகள்

இலங்கையின் 75 வீதமான நெற்காணித்துண்டுகள் பல்வேறு வகையான குத்தகை முறைகளின் கீழ் இயங்குகின்றனவாயினும், ''அந்தே'' அல்லது பங்குக்கு பயிரிடுகின்ற முறையே முதன்மையாக உள்ளது. குத்தகையாளர் 50 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட தனது உற்பத்தியை நில உடமையாளர்களுக்கு வழங்குவது மரபாக இருந்து வந்தது. உற்பத்தி திறமைகளுக்காக சரிமமான பங்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக இம்முறை கடுமையாக விமர்சிக்கப்பட்டது. குத்தகையாளர்கள் தமது உற்பத்தியின் அரைப்பங்கை அல்லது அதற்கு அதிகமானதை ஒப்படைக்க வேண்டியிருந்ததால், உயர்ந்த ரக உள்ளீடுகளில் முதலீடு செய்வதற்கான ஆர்வம் அவர்களிடம் மிக குறைவாகவே இருந்தது. ஆய்வுகள் உடமையாளருக்கும், குத்தகையாளருக்குமிடையிலான உற்பத்தி வித்தியாசங்களைக் காண்பிக்கவில்லையாயினும், உடமையாளர்களது வருமானத்தை விட குத்தகையாளர்களது தேறிய வருமானம் மிக குறைவாக இருந்ததைச் சுட்டிக் காட்டின.

குத்தகையாளர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், ''அந்தே'' முறையின் கீழ் செயற்படுத்தப்பட்ட காணிகளின் வாடகை விதிகளும் 1958 ம் ஆண்டின் நெற்காணிச் சட்டத்தின் நோக்கமாக இருந்தது. இவ்விதிகளை செயற்படுத்தவென கிராம மட்டத்திலான வேளாண்மைக் குழுக்களை இது ஸ்தாபித்தது. எனினும், இச்சட்டத்தின் செயற்பாடு மிகவும் திருப்தியற்றதாக இருந்ததுடன், பெருந்தொகையான வெளியேற்றங்கள் இடம் பெற்றன. வேளாண்மைக் குழுக்களின் திறமையின்மையினும், நீண்ட காலத்துக்குப் பின்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், கிராமச் சூழலில் நில உடமையாளரின் மிக உயர்ந்த பொருளாதார அந்தஸ்து, குத்தகையாளர் இச்சட்டத்தின் நன்மைகளை அடைவதற்கான வழிகளை மட்டுப்படுத்துவதாக இருந்தது.

1973 ன் விவசாய நிலங்கள் சட்டம், நெற்காணிச் சட்டத்தை உள்ளடக்கியதுடன், இப்புதிய சட்டம் நெற்காணிச் சட்டத்தை அனைத்து விவசாய நிலங்களுக்கும் விஸ்தரித்ததுடன், மாவட்ட விவசாய நீதிமன்றங்களையும் உருவாக்கியது. எனினும், கிடைக்கக்கூடியதாகவிருந்த ஆய்வுகள், நிலைமையில் முன்னேற்றம் எதையும் சுட்டிக் காட்டவில்லை. இதற்கு முக்கிய காரணம், விவசாய உற்பத்தி குழுக்களின் செயற்பாடு திறமையற்றதாகவும், நில உடமையாளர்களின் பக்க சார்புடையதாகவும் இருந்ததாகும்.

# கிராமிய வங்கிகள்

கிராமியத்துறைக்குச் சேவை செய்யவென வங்கித்துறையில் அறிமுகஞ் செய்யப்பட்ட ஒரு புதிய அமைப்பு 1964ல் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய வங்கித்திட்டமாகும். இலங்கையில் கிராமிய வங்கித்துறை பற்றிய எண்ணக்கரு 1961 ல் மக்கள் வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து உருப்பெற்றதாகும். 1969 மார்ச்சில் 50 வது கிராமிய வங்கிக் கிளையைத் திறந்து வைத்துப் பேசிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. டப். பத்திரன பின்வருமாறு குறிப்பிட்டார். ''மக்கள் வங்கி ஸ்தாபிதத்தின் பிரதான நோக்கங்கள் (1961 ன் 29 ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரகாரம்), இலங்கையில் கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்வதும், கூட்டுறவுச் சங்கங்கள், அனுமதிக்கப்பட்ட சங்கங்கள், பயிர்ச் செய்கைக் குழுக்கள் என்பவற்றுக்கு நிதி மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொடுத்து கிராமிய வங்கித் துறையையும், விவசாயக்கடன் அமைப்பையும் விருத்தியுறச் செய்வதாகவே இருந்தன. கிராமியப் பொருளாதாரத்தின் யதார்த்தங்களை மக்கள் வங்கி உணர்ந்திருந்தது; பெருந்தொகையான கிராமவாசிகள் — குறிப்பாக விவசாயிகள் — தமது கடன் தேவைகளுக்காக கூடிய வட்டிவீதங்களை அறவிடும் நிறுவன ரீதியற்ற மூலங்களில் தங்கியிருந்ததை அது கண்டறிந்தது; கூட்டுறவு இயக்கத்தின் அபிலாசைகளிலும, இலட்சியங்களிலும் அது ஆர்வம் காட்டியது; கிராமிய விவசாயிகளைப் பீடித்திருக்கும் வறுமைப்பிணியைக் குறைவடையச் செய்வதிலும், சற்றில் அதனை முற்றாக ஒழித்துக் கட்டுவதிலும் கிராமியக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்ற வேண்டிய பங்கு பற்றி அது அறிந்திருந்தது; கூட்டுறவுச் சங்கங்கள் தமது அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு உதவும் வகையில் மக்கள் வங்கி தீர்க்க தரிசனத்துடன் பல திட்டங்களை வகுத்தெடுத்தது; இறுதியாக, இவ்வங்கி, தைரியமாக ஒருபடி மேலே சென்று ஒரு பரிசோதனை முயற்சியாக ''கிராகிய வங்கிகளை'' த் தாபித்தது.''

கண்டி மாவட்டத்தில் மெனிக்கின்ன என்ற இடத்தில் அமைந்திருந்த கிராமியக் கூட்டுறவுச் சங்கத்தில் 1964 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் முதல் முன்னோடிக் கிராமிய வங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதே வருடத்தின் ஏப்ரல், மே மாதங்களில் இத்திட்டம் வேறு இரு சங்கங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அதன் பின்னர், இத்திட்டம் திருப்திகரமான முறையில் இயங்கத் தொடங்கியது. 1969 மார்ச் அளவில் 50 கிராமிய வங்கிகள் தாபிக்கப்பட்டிருந்தன. 1978ம் ஆண்டு முடிவுற்றபோது நாடெங்கிலும் 183 கிராமிய வங்கிகள் காணப்பட்டதுடன், 275 விசேஷ கிளைகள் இவற்றுடன் இணைக்கப்பட்டிருந்தன.

1964 ன் பின்னர் கிராமிய வங்கிகளில் ஏற்பட்டு வந்த படிமுறையான வளர்ச்சியில் இரு கட்டங்கள் அவதானிக்கத்தக்கவையாகும்.

1. பரிசோதனைக்கட்டம் 1964-1972
2. துரித விஸ்தரிப்புக்கட்டம் 1972 ன் பின்னர்.

பரிசோதனைக்கால கட்டத்தின்போது, தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமே கிராமிய வங்கிகள் தாபிக்கப்பட்டன. எனவே, அதன் விஸ்தரிப்பு மிக மெதுவாக நிகழ்ந்து வந்ததை கீழே காணப்படும் அட்டவணை காட்டுகின்றது:

| வருடம் | | கிராமிய வங்கிகள் தொகை |
|---|---|---|
| 1964 | .. | 3 |
| 1965 | .. | 8 |
| 1966 | .. | 13 |
| 1967 | .. | 27 |
| 1968 | .. | 44 |
| 1969 | .. | 68 |
| 1970 | .. | 70 |
| 1971 | .. | 111 |

இக்கால கட்டத்தில் கிராமிய வங்கிகளின் கொடுகடன் நடவடிக்கைகளில் காணப்பட்ட முக்கிய அம்சம் யாதெனில், நெல் உற்பத்தி தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்கு மட்டும் அவை கடன்களை வழங்கி வந்தமையாகும்.

1972 ன் பின்னர் கிராமிய வங்கிகளின் தொகை தீவிரமாக அதிகரிக்கலாயிற்று. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வாண்டில் புனரமைப்புச் செய்யப்பட்டதும் இதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். இப்புனரமைப்பு, சிறிய, சிக்கனமற்ற பல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை சிக்கனமிக்க பெரிய அலகுகளாக ஒருங்கிணைக்கச் செய்தது. இதனால் சங்கங்களின் தொகை குறைவடைந்ததுடன், முகாமைத் தரங்களை விருத்தி செய்வது இலகுவாக இருந்தது. இந்த மாற்றங்களையடுத்து, ஒருங்கிணைக்கப்பட்ட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் கிராமிய வங்கியொன்றைத் தாபித்தல் ஒரு கொள்கையாக உருப்பெற்றது. இதன் விளைவாக 1973 ம் ஆண்டு முடிவுற்றபோது, நாடெங்கணும் 341 கிராமிய வங்கிகள் இருந்தன. அதாவது, 341 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் இவ்வங்கிகள் தாபிக்கப்பட்டிருந்தன. பின்னர், ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் விசேட கிராமிய வங்கிக் கிளைகள் தாபிக்கப்படத் தொடங்கியவுடன் கிராமிய வங்கி அமைப்பு மேலும் விஸ்தரிப்படைந்தது.

1972 ன் பின்னர் கிராமிய வங்கிகளுக்கு ''கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்'' என்று பெயர் மாற்றஞ் செய்யப்பட்டது. கிராமிய வங்கிகளும், விசேஷ கிளைகளும் மட்டுப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றன. அவை சேமிப்பு, நிலையான வைப்புக்களை ஏற்றுக்கொள்வதுடன், கடன் மீட்பு, வீடமைப்பு, நுகர்வு போன்ற தேவைகளுக்காக கடன்களையும் வழங்கி வருகின்றன. மேலும், நகை அடகு பிடித்தல் இவ்வங்கிகளின் முக்கியமான பிறிதொரு கொடுகடன் நடவடிக்கையாகும்.

கிராமிய வங்கிகள் சிறிய பிரதேசமொன்றில் இயங்குவதுடன், அவற்றின் வாடிக்கையாளர்கள் நன்கு அறிமுகமானவர்கள். அவற்றின் இயக்கச் செலவுகள் குறைவாக இருப்பதுடன், மக்கள் இவ்வங்கிகளில் சென்று இலகுவில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடிகின்றது. வங்கிக் கிளையொன்று பொருளாதார ரீதியில் சிக்கனமில்லாத பிரதேசங்களில், கிராமிய வங்கிகள் முக்கியமான வங்கிச் சேவைகளை வழங்குகின்றது. விவசாயிகளுக்கு' பெற்றுக்கொடுக்கும் இதே சேவைகளை மக்கள் வங்கிக் கிளைகளை விஸ்தரிப்பதன் மூலம் ஏன் வழங்கக் கூடாது எனப்பலர் வினா எழுப்பியுள்ளனர். பல சந்தர்ப்பங்களில் மக்கள் வங்கி விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன்களை வழங்குகின்றது. ஆனால், கிராமியப் பொருளாதார அமைப்பின் சகல நெளிவு சுளிவுகளையும் புரிந்து கொண்டு அதன்படி கருமமாற்றுவது மக்கள் வங்கியைப் பொறுத்த மட்டில் சாத்தியமாயில்லை.

நமது நாட்டின் லட்சக்கணக்கான உழவர் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கும் குறைந்த சிறு நிலத்துண்டுகளையே வைத்திருக்கின்றனர். இந்நிலங்களில் பெரும்பகுதி அவர்களுக்குச் சொந்தமானதாகவுமில்லை. அவர்களது வருமானம் குறைவாக இருப்பதுடன், சமர்ப்பிக்கக்கூடிய பிணைகள் எதுவும் அவர்களிடமில்லை.

### கிராமிய வங்கிகளின் விஸ்தரிப்பு (1972-1977)

| வருடம் | | | கிராமிய வங்கிகள் | விசேஷ கிளைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1972 | .. | .. | 242 | — | 242 |
| 1973 | .. | .. | 341 | — | 341 |
| 1974 | .. | .. | 332 | 71 | 403 |
| 1975 | .. | .. | 338 | 109 | 447 |
| 1976 | .. | .. | 345 | 158 | 503 |
| 1977 | .. | .. | 285* | 259 | 544 |

*சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஒருங்கிணைத்தமையால் கிராமிய வங்கிகளின் தொகை குறைவடைந்தது. இந்த ஒருங்கிணைப்பின் காரணமாக பல கிராமிய வங்கிகள் விசேஷ கிளைகளாக மாற்றப்பட்டன.

(மத்திய வங்கி — பொருளாதார ஆய்வு 1977)

எனவே, இந்தப் பின்னணியில் கடன் பெறுபவரைப் பற்றி நன்கு அறிந்த பின்னரேயே கடன் தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும். வங்கிக் கிளையொன்றினுல் இதனை மேற்கொள்வதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இந்தச் சந்தர்ப்பத்திலேயே, கிராமியக் கூட்டுறவுச்சங்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. வளங்களை மிகக் குறைவாகப் பெற்றிருக்கும் வறிய விவசாயிகள் வாழும் கிராமியச் சமுதாயமொன்றில், தனி ஒவ்வொருவரினதும் பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றியமையாதவையாகும். கூட்டுறவு அமைப்பில் பலவீனமான குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், கிராமியக் கொடுகடனை நிர்வகிப்பதில் அது வேறெந்த நிறுவனத்தை விடவும் ஆற்றல் வாய்ந்ததாகும். ஏனெனில், கடன் தீர்மானங்களின் முன்னிபந்தனையான விவசாயிகளைப் பற்றிய பூரண தகவல்களை அது பெற்றிருக்கின்றது. போதிய முகாமைத்துவ ஆற்றல்களின்மையால் கூட்டுறவுச் சங்கங்கள் பலவீனமடைந்திருப்பதுடன், அவை பெற்றிருக்கும் மூலவளங்களும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கின்றன. புதிய கடன் திட்டம், இச்சங்கங்களை மீள் ஒழுங்கமைத்து பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டிருக்கின்றது. சங்கங்களுக்கு நிதி, மற்றும் தொழில் நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்து, கிராமியக் கொடுகடன் அமைப்பினை விஸ்தரிப்பதே கிராமிய வங்கிகளின் இலட்சியமாகும். இந்த அலுவல்களில் ஈடுபடும் ஊழியர்களுக்கான பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதில் மக்கள் வங்கி உதவி வருகின்றது. கிராமிய வங்கிகள் தமது மேலதிக பணத்தை அருகிலிருக்கும் மக்கள் வங்கிக் கிளையில் வைப்பிலிடுகின்றன.

கிராமிய வங்கிகளின் அபிவிருத்தியானது, நிறுவன ரீதியான துறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு புரட்சியாகும். சேமிப்புக்களை ஒன்று திரட்டுவதிலும், கிராமியக் கொடுகடனிலும் அது குறிப்பிடத்தக்க விருத்தியைத் தோற்றுவித்தது. கிராமியச் சமூகத்துக்கு நன்கு பரிச்சயமான வழிகளிலேயே அதன் கடன் நடவடிக்கைகள் இருந்தன. சிறப்பாக அடகுக் கடனைக் குறிப்பிட முடியும். சில கிராமிய வங்கிகள் சேமிப்புக்களை ஒன்று திரட்டுவதில் சில புதுமைகளையும் அறிமுகஞ்செய்தன.

கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பங்கு, பணி என்பவற்றை பரிசிலனை செய்யும் ஓர் ஆய்வினை மேற்கொண்ட நிமல் சந்தரத்ன, எஸ். குறுகல்ல என்போர் பின்வருமாறு முடிவுரை வழங்குகின்றனர். ''கிராமியத் துறைக்குச் சேவை செய்வதில் நிறுவன ரீதியான அமைப்புக்களின் அவசியத்தையும், ஆற்றலினையும் கிராமிய வங்கிகள் நிரூபித்துக் காட்டின. முன்னேற்றகரமான த்திகளை எளிமையான முறையில் கிராமியத் துறையில் பிரயோகிப்பதில் அது ஒரு பரிசோதனை முயற்சியாக இருந்தது. கிராமியத் துறையில் நிதி நிறுவனங்களின் அபிவிருத்தியில், அத்துறைக்கு மட்டுமே சிறப்பாக பொருந்தக்கூடிய உத்திகளைக் கண்டறிதல் அவசியமானதாக இருக்கும்.''



# 1979ம் ஆண்டில் பொருளாதார வாய்ப்புக்கள்

1978 ஆம் ஆண்டு பல வழிகளில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு நிலைமாறும் ஆண்டாக இருந்தது. அதாவது, பிரதானமாகக் கட்டுப்பாடுகள் மலிந்திருந்த ஒரு பொருளாதாரத்திலிருந்து கட்டுப்பாடுகள் நீங்கத் தாராளமயமாக்கப்பட்ட ஒரு பொருளாதாரத்துக்கு மாறுங்காலமாயிருந்தது. கடந்த பல வருடங்களாகத் தனியார் துறை முயற்சிகளை மீதிருந்து வந்த பல்வேறு கட்டுப்பாடுகளிலிருந்தும், வரையறுக்கும் நிபந்தனைகளிலிருந்தும் பொருளாதாரம் தெளிவாக மாறி வருவதனுலும், மூலவள உபயோகத்தை நிர்ணயிப்பதிலும, அபிவிருத்தியிலும் சந்தை முறை எடுக்கும் பங்கு அதிகரித்திருப்பதனுலும், இவ்வருடம் (1979) பொருளாதார நடவடிக்கைகளின் பெரும்பாலான துறைகளில் இந்த நிலைமாற்றத்தின் நிறைவைக் காணவேண்டும். 1978 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 8 சதவிகிதத்துக்கு மேற்பட்ட ஒரு வளர்ச்சி விகிதத்தைச் சாதிக்க முடிந்தது. அதே சந்தர்ப்பத்தில், கட்டுப்பாடுகளற்ற தாராளப் பொருளாதாரமொன்றுக்கு மாறியதனுல், ஒரு புதிய (உயர்) விலை மட்டத்தை ஸ்தாபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் விளைவாக, ஏறக்குறைய 16 சதவிகிதப் பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. சகல அறிகுறிகளிலிருந்தும், 1979 ஆம் ஆண்டிலும் பொருளாதாரம் 1970க்களின் சராசரி மட்டங்களை விட உயர்வான ஒரு வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து காட்டி வருமென்றும், பணவீக்க விகிதமும் தொடர்ந்து உயர்வாகவே இருந்து வருமென்றும் தெரிகிறது. 1979 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி, விவசாயத்தை விட கைத்தொழில், வர்த்தகம், வாகனப் போக்குவரத்து, நிர்மாணம் ஆகியவற்றில் உற்பத்தி அதிகரிப்பதன் விளைவாகவே பெரும்பாலும் ஏற்படுமென்பது திண்ணம்.

## விவசாயம்

விவசாயத்துறையில், முக்கிய பயிர்களில் எதனின் உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படுமென எதிர்பார்ப்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. 1978-79 பெரும்போக நெல் விளைச்சல் முந்திய பெரும் போகத்தின் விளைச்சலான 62 மில்லியன் புசலுடன் ஒப்பிடுகையில், 63 மில்லியன் புசலாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. (குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில்) சூறாவளிச் சேதம் ஏற்பட்டிருக்காவிட்டால், இவ்விளைச்சல் அதிகமாயிருந்திருக்கலாம். இவ்வருடம் சிறுபோக விளைச்சல் 28-30 மில்லியன் புசலாயிருப்பது சாத்தியம். இந்த அடிப்படையில் நோக்கும்போது, இவ்வருடம் மொத்த நெல் விளைச்சல் ஒன்றில் கடந்த வருடத்தின் அதே மட்டத்தில் (9.1 கோடி புசல்) இருக்கும்; அல்லது மிக அனுகூலமாக ஊகிப்பதாயின் சற்றே இலேசான விருத்தியைக் காட்டும். இந்நிலையில், அரிசி இறக்குமதிகள் இவ்வருடம் மேலும் குறைவது சாத்தியமல்ல. உண்மையில், இறக்குமதிகளின் கன அளவு கடந்த ஆண்டின் 166,000 தொன்களுக்கு மாறாக 200,000 தொன்களை நெருங்குவது மிகவும் சாத்தியம். ஆனுல் கோதுமைமா இறக்குமதிகள் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட விலை மதிகரிப்பை யடுத்துக் கேள்வியில் ஏற்பட்ட இலேசான குறைவையும், அரிசியின் சந்தை விலையில் காணப்படும் ஒப்பீட்டு ரீதியான ஸ்திரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் இவ்வருடம் சிறிது குறைவைப் பதிவு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரிசியின் இந்த ஸ்திர விலை 1979 ஆம் ஆண்டிலும் ஒரு முக்கியமான அம்சமாகத் தொடர்ந்து இருந்து வருமென்பது நிச்சயம்.

கூட்டு மொத்த பெருந்தோட்ட உற்பத்தியில் எந்தக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பையும் காண்பது சாத்தியமல்ல. (1978 ஆம் ஆண்டில் 19.9 கோடி கிலோகிராமாயிருந்த) தேயிலை உற்பத்தி இவ்வருடம் சுமார் 20.8 கோடி கிலோகிராமுக்கு உயருமென்று உத்தியோக பூர்வமாக மதிப்பிடப்படுகிறது. ஆனுல், இந்த எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு உண்மையில் சாதிக்கப்படுமா என்பது சந்தேகம். இவ்வாண்டின் முதற் கால் பகுதியில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியான 4.9 கோடி கிலோகிராம், கடந்த வருடம் இதே காலப் பகுதியில் நடைபெற்ற உற்பத்தி அளவைக் காட்டிலும் எந்த விருத்தியையும் காட்டவில்லை. 1979 ஆம் ஆண்டில் தேயிலை விலைகள் 1978 ஆம் ஆண்டின் மட்டத்துக்குச் சற்றுக் கீழ்ப்பட்ட ஒரு சராசரித் தொகையையே பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பீட்டு ரீதியாக ஏற்றுமதித் தீர்வை உயர்வாயுள்ள நிலையில், இந்த விலைக் குறைவும், உற்பத்திச் செலவுகளில் ஏற்பட்டுள்ள உயர்வும் தேயிலை உற்பத்தியாளர்களின் இலாப விகிதங்களை குறைத்து விடுவதற்கு வழி கோலலாம்.

ரப்பர் கைத்தொழில் இவ்வருட ஆரம்பத்திலிருந்து திடீர் விலை உயர்வு பெறும் ஒரு காலத்துள் பிரவேசித்துள்ளது (பெற்றோல் விலை அதிகரிப்பின் விளைவாக) செயற்கை ரப்பர் விலைகள் செங்குத்தாக உயரும் போக்கு காணப்படுவதால், வரும் மாதங்களில் ரப்பர் விலை உயர்வு மேலும் விரைவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனுல் ரப்பர் உற்பத்தியாளர்களின் இலாப விகிதங்கள் உயர வேண்டும். காலநிலை தொடர்ந்து அனுகூலமாக இருந்து வந்தால், ரப்பர் உற்பத்தி அதிகரிப்பைக் காட்டுவது நிச்சயம் எனினும், இவ்வருடத்தின் முதற்கால் பகுதியில் நடைபெற்ற உற்பத்தியான (3.8 கோடி கிலோகிராம்) கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியில் நடைபெற்ற உற்பத்தியின் அதே மட்டத்திலேயே ஏறக்குறைய இருந்து வந்துள்ளது.

(அ) கிழக்கு மாகாணத்தில் சுமார் 30,000 ஏக்கர் தெங்குக் காணிக்கு ஏற்பட்ட சூறாவளிச் சேதத்தையும் (ஆ) காலநிலைகளின் விளைவுகளையும் பிரதிபலிக்கும் வகையில் தெங்கு உற்பத்தி குறைவைக் காட்டுமென உத்தியோக பூர்வமாக முற்கணிப்புச் செய்யப்படுகிறது. எனினும், இத்தகைய காணிகளின் விளை திறன் சராசரி மட்டத்துக்கு வெகு கீழேயே இருந்து வந்துள்ளதால், கிழக்கு மாகாணத்திலுள்ள தெங்குக் காணிகள் நாட்டின் மொத்தத்

தெங்கு உற்பத்திக்கு ஒருபோதும் எந்தக் குறிப்பிடத்தக்க பங்களிப்பும் செய்யவில்லை. விளைச்சலில் சுமார் 10 சதவிகிதம் குறையுமென ஊகித்துக் கொள்வோமாயின், இவ்வருடத்தில் உற்பத்தி ஏறக்குறைய 200 கோடி தேங்காய்களாக இருக்க வேண்டும். இவ்வருடத்தின் முதற்கால் பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காயெண்ணெயின் கன அளவு 1978 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் செய்யப்பட்ட ஏற்றுமதியைவிட குறைவைக் காட்டியது. ஆனால் இது தேங்காய்த் துருவலின் ஏற்றுமதிக் கன அளவில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தேவையான அளவுக்குமேல் ஈடு செய்யப்பட்டது.

உப உணவுப் பயிர்களைப் பொறுத்தவரை 1979 ஆம் ஆண்டு எந்தக் குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் காட்டுவது சாத்தியமில்லை. எதிர்பாரா நிலைமையைச் சமாளிக்க அதிக அளவு கையிருப்பைக் கொண்டிருப்பதன் மூலம் உற்பத்தியாளர் நலனையும் நுகர்வோர் நலனையும் சமப்படுத்த அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளின் விளைவாக இப்பயிர்களில் பெரும்பாலானவற்றிற்கு ஒப்பீட்டு ரீதியாக ஸ்திரமான சந்தை விலைகள் கிடைப்பது சாத்தியம். (உள்நாட்டு உற்பத்திப் பொருள்களை விட பொதுவாக மலிவாயுள்ள) இறக்குமதிகள் வாயிலாக இத்தகைய கையிருப்புகள் அதிகரிக்கப்படுமாயின், உள்நாட்டு விலைகள் கீழ் மட்டத்தில் நிலைபெற்று விடுவதால் உற்பத்தியாளரின் இலாப விகிதங்கள் குறைகின்றன. விவசாயத் துறையில் மேற்கொள்ளப்படும் கொள்கை நடவடிக்கைகள் தொடர்ந்து ஒன்றுக்கொன்று விரோதமான இலட்சியங்களைப் — குறிப்பாக நுகர்வோருக்கு நியாயமான விலைகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவைக்கும், உற்பத்தியாளருக்குப் பிரதிபலனான விலைகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவைக்குமிடையே — பிரதிபலிக்கின்றன.

## கடற்றொழிலும் கால்நடைகளும்

மற்றும் பிரதம நடவடிக்கைகளிடையே, கடற்றொழிலும் கால்நடை வளர்ப்புக் கைத்தொழில்களும் இவ்வருடம் சில உற்பத்தி அதிகரிப்புக்களைக் காட்ட வேண்டும். கிழக்கு மாகாணத்திலுள்ள மீன்பிடி வள்ளங்கள் சூறாவளியால் சேதமடைந்தன. ஆனால் அதெப்படியிருந்தாலும், குறிப்பாகக் கடற்றொழிலுக்குப் புதிய ஊக்குவிப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டு வருவதை முன்னிட்டு, மீன் உற்பத்தி நியாயமான அபிவிருத்தியைக் காட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1978 ஆம் ஆண்டின் முதற்காலப் பகுதியில் நடைபெற்ற 35,800 தொன் மீன் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் முதற்கால் பகுதியில் மீன் உற்பத்தி 39,349 தொன் என மதிப்பிடப்படுகிறது.

1978 நவம்பரில் பாலின் கொள்வனவு விலை அதிகரிக்கப்பட்டு, மிருகத் தீனிகளின் விலைகள் குறைக்கப்பட்டதால், 1979 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி மட்டம் அபிவிருத்தியடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வருடத்தின் முதலிரு மாதங்களில் பால் சபையின் பால் சேகரிப்பு, கடந்த வருடம் இதே காலப்பகுதியின் சேகரிப்புக்கு மேல் 8 சதவிகித அதிகரிப்பைக் காட்டியுள்ளது. (ஜனவரியில் 5 சதவிகிதமும் பெப்ரவரியில் 12 சதவிகிதமும் அதிகரிப்பு.) இந்த அதிகரிப்பு, ஒரு வேளை உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்டுவரும் விருத்தி செய்யப்பட்ட ஊக்கச் சலுகைகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது போலும்.

## சுரங்க வேலையும் கல் அகழ்தலும்

கடந்த வருடம் கணிசமான விஸ்தரிப்பைப் பதிவு செய்த சுரங்கந் தோண்டல் — கல் அகழ்தல் துறையின் உற்பத்தி, இவ்வருடம் இன்னும் உயர்வான வளர்ச்சி விகிதத்தைக் காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குச் செங்கட்டிகள், ஓடுகள், மணல் ஆகியவற்றிலும் கல் அகழ்தலிலும் உற்பத்தி அதிகரித்து வருவதே பிரதான காரணம். இது கட்டட நிர்மாண நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பெரும் அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது.

இவ்வருடத்துக்கெனத் திட்டமிடப்பட்டுள்ள புதிய அரசாங்க நிர்மாண வேலைகளுக்குப் புறம்பாக, 1978 நவம்பரில் ஏற்பட்ட சூறாவளிச் சேதத்துக்குப் பின் புனருத்தாரணத்தை யொட்டி மேலும் நிர்மாண நடவடிக்கைகளும் இடம்பெறும்.

## மின்சக்தி

சூறாவளிச் சேதத்தின் விளைவாக, மதுறு ஓயா அணைக்கட்டுத் திட்டம், போவதென்ன மின்சாரத் திட்டம் போன்ற சில முக்கியமான திட்டங்களுக்குப் பின்னடைவு ஏற்பட்டதென்பது கவனிக்கத்தக்கது. 40 மெகாவாட் நீர் - மின்சார இயந்திர நிலையத்தை ஏற்படுத்தவல்ல போவதென்ன திட்டம், முன்னர் திட்டமிட்டவாறு 1979 ஆம் ஆண்டிலன்றி 1980 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்படும். மின்சார உபயோகத்தில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சியுடன், தற்போதுள்ள மின்சார விநியோக நிலைமை நெருக்கடிக் கட்டத்தை அடைந்துள்ளது. 1980 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்படும் நிலைமையைச் சமாளிப்பதற்காக அவசரகால நடவடிக்கைகள் எடுப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது.

இறக்குமதி, நாணயப் பரிவர்த்தனை சம்பந்தமாகக் கைக்கொள்ளப்பட்ட தாராளக் கொள்கைகளையடுத்து, கைத்தொழில் துறையில் உற்பத்தி 1978 ஆம் ஆண்டில் எய்திய உத்வேகத்தைத் தொடர்ந்து பேணி வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இயந்திரங்களையும், கருவிகளையும், உதிரி பாகங்களையும், மூலப் பொருள்களையும் அதிகரித்த அளவில் இறக்குமதி செய்வது தொடருமென்றும், இது இவ்வருடம் தொழிற்சாலை உற்பத்தி மேலும் அதிகரிப்பதற்கு அடிகோலுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1979 ஆம் ஆண்டில் கைத்தொழில் உற்பத்தி அதிகரிக்குமென்பதற்கான இன்னோர் எடுத்துக் காட்டு, 1978 ஆம் ஆண்டிலும் இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் அங்கீகாரம் வழங்கப்பட்ட பெருந்தொகையான புதிய கைத்தொழில் நிலையங்களாகும்.

ஜவுளிக் கைத்தொழில் அமைச்சு மட்டும் 1978 ஆம் ஆண்டில் 1,315 புதிய முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவை 45.4 கோடி ரூபாவை முதலீடு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுவதுடன், இவை 20,153 பேருக்கு வேலை வசதி வழங்குமென்றும் மதிப்பிடப்படுகிறது. இப்புதிய முதலீடுகளில் பெரும்பகுதி 1979 ஆம் ஆண்டில் நடைமுறையில் உண்மையாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சும் 1978 ஆம் ஆண்டில் 1,070 வரையான புதிய தொழில் முயற்சிகளை அங்கீகரித்தது. இவற்றில் மொத்தம் 60.6 கோடி ரூபா முதலீடு செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 50.3 கோடி ரூபா வெளிநாட்டு மூலதனமாயிருக்கும். இத்தொழில் முயற்சிகளில் 23,191 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்று மதிப்பிடப்படுகிறது. இவ் வருடத்தில் முதல் மூன்று மாதங்களில் மேலும் 213 தொழில் முயற்சிகள் கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சிடமிருந்து அங்கீகாரம் பெற்றன.

கடந்த 15 மாதங்களில் அங்கீகரிக்கப்பட்ட புதிய கைத்தொழில் முயற்சிகளில் அநேகம் இவ் வருட ஓட்டத்தில் உற்பத்தியை ஆரம்பிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன், சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள சுமார் 29 தொழில் முயற்சிகளும் 1979 ஆம் ஆண்டு முடிவில் உற்பத்தியைத் தொடங்கி வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சகல அறிகுறிகளிலிருந்தும் நாட்டிலுள்ள தொழிற்சாலை உற்பத்தியில் ஏற்படும் கூட்டு மொத்த அதிகரிப்பு இவ்வருடம் மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சிக்கு ஒரு முக்கியமான பங்களிப்புச் செய்யும்.

எந்தப் பெரிய அரசாங்கத் துறைக் கைத்தொழில் திட்டங்களும் இவ்வருடம் பூர்த்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. தற்போது நிறைவேற்றப்பட்டுவரும் சகல பெரிய கைத்தொழில் திட்டங்களும் — அஃதாவது யூரியா பசளை, நைலோன், உருக்கு கட்டம் 2, வெப்பத் தடுப்புச் சாதன திட்டங்கள் — 1980 ஆம் ஆண்டில் மட்டுமே பூர்த்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது

## வங்கித் தொழிலும் நிதியும்

வங்கித் தொழில், நிதித்துறையில், நாணய அதிகாரிகள் இவ்வருடம் எதிர்நோக்க வேண்டிய ஒரு பெரிய பிரச்சினை நாணய விரிவைக் கட்டுப்படுத்துவதாகும். பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரித்துள்ள மட்டமும், விலைகளிலும் வேதனங்களிலும் ஏற்பட்டுள்ள உயர்வும் கடன் வசதிகளை விரிவாக்குவதற்கு வங்கித் தொழில் முறைகளை நெருக்கியே தீரும். இவ்வருடம் ஜனவரி - பெப்ரவரியில் மட்டும் பண நிரம்பலில் 55.3 கோடி ரூபா அதிகரித்தது; அல்லது 1978 ஆம் ஆண்டு முடிவிலிருந்த மட்டத்துக்கு மேல் 9 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டது. இதனுடன் ஒப்பிடுகையில், 1978 ஆம் வருடம் முழுதும் பண நிரம்பலில் 57 கோடி ரூபா மட்டுமே அதிகரித்தது.

பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் (கடந்த வருடம் இது ஏறக்குறைய 16 சதவிகிதமாயிருந்தது) குறிப்பிடத்தக்க இறக்கம் காண்பது சாத்தியமில்லை. ஜனவரியில் அரசாங்கம் புகையிலை, மதுபானம் ஆகியவற்றின் மீது கலால் வரிகளை உயர்த்தியது. அதன் விளைவாக, நுகர்வோருக்கு இப்பொருள்களின் விலைகள் அதிகரித்தன. பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகள் அறிவித்த விலை அதிகரிப்புகளின் தொடர் பெற்றோலியம் உற்பத்திப் பொருள்களின் உள்நாட்டு விலைகள் உயர்வதற்கு அடிகோல வேண்டும். இங்கு சுட்டப்படும் ஒரு மாற்றுவழி யாதெனில், குறிப்பாகத் தற்போது பெருமளவில் மானிய உதவி வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய்க்கும் டீசல் எண்ணெய்க்கும் அரசாங்கம் விலை அதிகரிப்புகளை அமுல் செய்ய வேண்டும் என்பதாகும். டீசல் எண்ணெயின் விலை உயர்ந்ததால், வாகனப் போக்குவரத்துச் செலவுகள் — குறிப்பாக வர்த்தக வாகனப் போக்குவரத்தினதும் அரசாங்க வாகனப் போக்குவரத்தினதும் செலவுகள் — பொதுவாக உயரும். அதிகரித்து வரும் பெற்றோலியம் விலைகளாலும், உலகளாவிய பண வீக்கத்தாலும் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புகளைச் சமாளிக்க இப்பொழுது ஆலோசிக்

(**27**ம் பக்கம் பார்க்க)

## பெருந்தோட்டப் பயிர்கள்

# தேயிலை – நிச்சயமற்ற வருங்காலம்

இவ்வருடம் மார்ச் மாத முடிவில் இலங்கையின் தேயிலை உற்பத்தி கடந்த வருடம் அதே காலத்தில் நடைபெற்ற உற்பத்திக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தது. இக்காலத்தில் சற்றே விலை குறைந்துவரும் சந்தைப் போக்கும் காணப்பட்டுள்ளது. அத்துடன், கொழும்பு ஏல விற்பனைகளில் தேயிலைக்குக் கிடைத்த விலைகள் 1978 இன் முதல் காலாண்டில் கிடைத்த விலைகளை விட வெகு குறைவாகக் காணப்பட்டன.

1979 ஜனவரி - மார்ச் காலத்துக்குரிய உற்பத்தி புள்ளி விவரம், கடந்த வருடம் அதே காலத்திலிருந்த 49.4 மில்லியன் கிலோகிராம்களுக்கு மாறாக, 49.1 மில்லியன் கிலோகிராம்களாயிருந்தது. ஆனால், மார்ச் மாத முடிவு வரை பிரதான உற்பத்தி நாடுகள் சிலவற்றின் உற்பத்திப் புள்ளி விவரங்களை நோக்குமிடத்து, அவற்றின் கூட்டு உற்பத்தி 1978 இல் விட கிட்டத்தட்ட 5 மில்லியன் கிலோகிராம்கள் அதிகமாயிருக்கக் காணப்பட்டது. முந்திய வருடத்தின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், தென் இந்தியாவின் தேயிலை உற்பத்தியில் சுமார் 4 மில்லியன் கிலோகிராம் அதிகரிப்பும், கென்யாவின் உற்பத்தியில் 1.4 மில்லியன் கிலோகிராம் அதிகரிப்பும் காணப்பட்டன. இலங்கையில் 1979 இன் முதல் காலாண்டில் சம பூமித் தேயிலையினதும் மலைநாட்டுத் தேயிலையினதும் உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்டது. ஆனால், பதிவு செய்யப்பட்ட தாழ் பூமித் தேயிலையின் உற்பத்தி முந்திய வருடத்தின் உற்பத்தியை விட கிட்டத்தட்ட 1 மில்லியன் கிலோகிராம் குறைவாயிருந்தது. லண்டன் ஏல விற்பனைகளுக்கு ஒப்படைக்கப்படுவதற்காகத் தேயிலைக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களும் 1979 ஆம்கவருட காலத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியையே காட்டின. (மேலே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்).

கொழும்பு ஏலங்களில் மார்ச் மாதத்துக்கான கடைசி விற்பனையில் ரஷ்ய ஆதரவு வாபஸ் பெறப்பட்டதன் தாக்கம் காணப்பட்டது. கணிசமான விலை வீழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன.

**லண்டனின் தேயிலை ஏல விற்பனை**

| 1978 (கிலோ கிராம்) | | 1979 (கிலோ கிராம்) |
|---|---|---|
| 2,284,920.0 | உயர் நிலம் .. | 1,486,339.0 |
| 1,213,771.0 | மத்திய நிலம் | 1,186,807.0 |
| 46,870.0 | தாழ் நிலம் .. | 129,275.0 |
| 3,545,561.0 | | 2,802,421.0 |

குறைந்த விலைத் தேயிலை ரகங்களைப் பொறுத்தவரை விலை இறக்கங்கள் கிலோவுக்கு 1 ரூபாவுக்கும் 2 ரூபாவுக்கு மிடையே யிருந்தன. விலை குறைந்துவரும் இந்தச் சந்தைப் போக்கின் மத்தியில் கிடைத்த ஒரே ஓர் ஆறுதல் யாதெனில், திம்புல்ல மாவட்டத்திலிருந்து வந்த பீ. ஓ. பி. தேயிலையின் ரகமொன்றுக்கு இந்த ஏல விற்பனையில் கிலோவுக்கு 70 ரூபா கிடைத்ததாகும். நாட்டின் இப்பகுதிக்கான விலைப் பட்டியலில் இது எல்லாக் காலத்துக்குமான ஒரு சாதனையாகும்.

இவ்வருடத்தின் முதல் காலாண்டில் தாழ் பூமித் தேயிலை ரகங்களுக்கு அறவிடப்பட்ட விலைகளில் ஒரு கடும் பின்னடைவு காணப்பட்டதுடன், கடந்த வருடத்தின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 48.6 சதவிகித வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டது. ஒரு வருடத்திலே விலைகளில் 10 ரூபா 65 சதம் குறைந்துள்ளது. அஃதாவது, விலைகள் 21 ரூபா 34 சதத்திலிருந்து 10 ரூபா 69 சதத்துக்குக் குறைந்துள்ளன. இவ்வருடத்துக்கான ஆரம்ப விற்பனையில் மொத்த விற்பனைச் சராசரி 12 ரூபா 85 சதமாயிருந்தது. ஆனால், இவ்வருடத்தின் முதல் காலாண்டிற்குரிய கடைசி விற்பனையில் விலைகள் 9 ரூபா 73 சதத்துக்கு விழுந்து விட்டன. 1978 ஆம் ஆண்டிலும், 1979 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற முதல் விற்பனைகளுக்காக மொத்த விற்பனைச் சராசரிகளுடன் ஒப்பிட்டால், விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி இன்னும் அதிகமாயிருப்பது தெரியவரும். 1978 ஜனவரியில் நடைபெற்ற முதல் விற்பனையில் கிடைத்த சராசரி விலையான 24 ரூபா 18 சதத்திலிருந்து விலைகள் 1979 இல் நடைபெற்ற முதல் விற்பனையில் 12 ரூபா 85 சதத்துக்கு இறங்கிவிட்டன. இது கிலோ ஒன்றுக்கு 11 ரூபா 33 சதம் வீழ்ச்சியாகும். எனினும், கடும் உறைபனி பிரேஸிலின் கோப்பிப் பயிரைப் பாதித்து வருகிறதென்று செய்தி வெளிவந்ததையடுத்து, ஆண்டின் நடுப்பகுதியில் விலைகள் ஏறி விடுமென்று வர்த்தக வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. இந்த உறைபனி உக்கிரமடைந்தால், கோப்பி ஏற்றுமதிகளைப் பிரேஷில் தற்காலிகமாக நிறுத்திவிடுமென்றும், இது கோப்பியின் விலைகளை மட்டுமன்றித் தேயிலை உட்பட ஏனைய பான வகைகளின் விலைகளையும் மேலே தள்ளிவிடுமென்றும் ஊகங்கள் வெளியிடப்பட்டன. மெக்ஸிகோ, கொலம்பியா, எல் சல்வடோர் ஆகிய மற்றும் தென் அமெரிக்க கோப்பி உற்பத்தி நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. உறைபனி பிரேஸிலைத் தாக்குவதற்கு முன்பு நிலவிய இறாத்தல் 1.50 டாலருக்கும் குறைந்த உலகக் கோப்பி விலைகள் ஜூன் மாத முடிவில் இறாத்தல் 2 டாலருக்கு மேல் ஏறிவிடுமென்று ஹேஷ்யங்கள் கூறப்பட்டன. பிரேஷிலிலுள்ள உறைபனி நிலைமை குறித்து மிகுந்த அவநம்பிக்கை தெரிவித்த கருத்துக்கள் அந்நாட்டின் கோப்பி மரங்களில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாகக் கூறின. இது பிரேஸிலைத் தாக்கியுள்ள இன்னொரு ''பயங்கரமான உறைபனி'' யாக இருக்கலாமென்று கூட அச்சங்கள் தெரிவிக்கப்பட்டன. 1975 ஜூலை மாதத்தில் இது போன்ற பயங்கரமான உறைபனி ஏற்பட்ட போது, கோப்பி பயிர் செய்யப்பட்ட விஸ்தாரமான பகுதிகள் நாசமடைந்து, உலகக் கோப்பி விலைகள் கிட்டத்தட்ட ஐந்து மடங்கு உயர்ந்தன. ஜூலை மாத அளவில் உண்மையான நிலைமை திட்டவட்டமாகத் தெரிந்து விடுமென்று விஷயமறிந்த கைத்தொழில் வட்டாரங்கள் கூறின. உற்பத்திச் செலவுகள் உயர்ந்து வருவதுடன் ஒப்பியல் ரீதியாக அறவிடப்படும் ஏற்றுமதித் தீர்வைகளும் உயர் மட்டத்திலிருந்து வருவதன் விளைவாக, உள்நாட்டு உற்பத்தியாளர்களின் இலாப விகிதங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுமென்று அவ்வட்டாரங்கள் எடுத்துக்காட்டின.

## நூல் ஆய்வு

# திரிவேணி: விஞ்ஞானம், ஜனநாயகம், சோஷலிசம்

ஏ. றஹ்மான், இந்திய உயர் கல்வி நிறுவனம், சிம்லா

புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான நம்பிக்கைகளிலொன்று உற்பத்தியதிகரிப்பிற்கு விஞ்ஞானத்தையும், தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்தலாம் என்பதாகும். முப்பது வருடங்களுக்கு முன்னர் பல ஆசிய நாடுகள் சுதந்திரம் பெற்று புதிய ஊழியின் ஆரம்பம் தென்பட்ட வேளையில், விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பவற்றின் பாவனை புதிய இலட்சியங்களின் மையக்கருவாக இருந்தது. சுதந்திரத்திற்கு பிற்பட்ட ஆரம்ப காலத்திலிருந்தே — அதி உயர்ந்த அரசியல் மட்டத்தில் — விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய இரண்டினதும் தேவை பற்றி வலியுறுத்திய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். (கால இடைவெளி அடிப்படையில் நாம் இங்கு நாம் நோக்க வேண்டியது யாதெனில், முப்பது வருடங்களுக்கு முன்னர் நேரு இந்தியாவில் இவற்றிற்கு வழங்கிய முக்கியத்துவத்தை இலங்கை நோக்க வேண்டியுள்ளது என்பதாகும்.) இதன் விளைவாக, இன்று இந்தியா உலகின் மூன்றாவது மிகப் பெரிய விஞ்ஞான, தொழில்நுட்ப மனுவளத்தைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. மேலும் விஞ்ஞான தொழில் நுட்பத்தின் எல்லாத் துறைகளிலும் ஆக்கத்திறனையும் கொண்டுள்ளது. எவ்வாறிருப்பினும், இந்திய தலாநபர் வருமானமும், வாழ்வெல்லையும் மிகக் குறைந்த அளவில் இருப்பதுடன், சனத்தொகையில் பெரும்பான்மையினர் கல்வியறிவற்றவர்களாகவும் இருக்கின்றனர்.

விஞ்ஞானம், சமுதாயம் ஆகிய இரண்டிற்குமிடையிலான நெருங்கிய உறவை ஆராயும் முயற்சியாக பேராசிரியர் றஹ்மானின் நூல் விளங்குகின்றது. தனது நூலுக்கு விஞ்ஞானம், ஜனநாயகம், சோஷலிசம் என உப தலைப்பிட்டிருக்கும் அவர், இவற்றிற்கிடையிலான நெருங்கிய உறவினை எடுத்துக்கூறி, சோஷலிசம், ஜனநாயகம் என்பவற்றின் பெறுமதியையும் கோடிட்டுக் காட்டுகின்றார். பேராசிரியர் ரகுமானின் ஆராய்ச்சி பெரும்பாலும் இந்தியாவைப் பற்றியதாயினும், அவரது கருத்துக்கள் பல மூன்றாம் உலக நாடுகளிற்கும் பொருந்தக் கூடியவையாகும். இந்தியாவின் விஞ்ஞானக் கொள்கையை மேற்பார்வை செய்கின்ற விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவரான பேராசிரியர் றகுமான் சிம்லாவிலுள்ள இந்திய உயர் கல்வி நிறுவனத்தில் ஆற்றிய உரைகளிலிருந்து இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கின்றது.

மேற்கத்திய, இந்திய பாரம்பரியத்தில் விஞ்ஞானத்தின் மூல வேர் பற்றி இந்நூல் ஆராய்கின்றது. முன்னையதைப் பொறுத்தவரையிலும் அவர் கிரேக்க காலத்திற்குச் சென்று, அயோனியர், எபிகியூரியர் ஆகியோர் ஆராய்ச்சி, அறிவியல் எனபன பற்றி முன் வைத்த கருத்துக்களைக் கூறுகின்றார். இந்தியாவைப் பொறுத்தவரையிலும் அக்காலத்தில் கட்டுக்கதைகள், மூடநம்பிக்கைகள் என்பன பற்றித் தீவிரமாக விமரிசித்த சர்வகாரர்களை உதாரணமாகக் காட்டுகின்றார். இவர்களது கருத்தினை உலகு தொடர்பான சடப்பொருள்வாத கருத்தாக அவர் விளக்குகின்றார். விஞ்ஞான - சடப்பொருள்வாத அணுகுமுறைகள் வளர்ச்சிபெற்ற சமூகச் சூழ்நிலையையும், பண்டைய உலகில் இரு நாடுகளிலும் இது ஒன்றுடனொன்று பாதிப்பேற்படுத்தியதையும் அவர் ஆராய்கின்றார்.

இவையிரண்டும் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னர் கிழக்கிலும், மேற்கிலும் காணப்பட்ட ''விஞ்ஞான'' உலகாகும். ஆனால், நவீன விஞ்ஞானம் மிக அண்மைக் காலத்தில் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்தில் எழுச்சி பெற்றது. மத்தியகால சமூகத்தின் உடைவு, அதனுடன் எழுச்சி பெற்ற சமூக இயக்கங்கள் என்பவற்றிற்கூடாக இவ்வெழுச்சியை ரகுமான் அடையாளம் காணுகின்றார். இவ்வாராய்ச்சியில், அவர் முதலாளித்துவத்தின் எழுச்சியினால், மாறுதலடைந்து வந்த சமூக - பொருளாதார அமைப்பில் வளர்ச்சி பெற்ற குறித்த சில கருத்துக்களின் பாதிப்பினையும் அவர் இனங் காணுகின்றார். இப்பின்னணியில் மேற்குலகில் வளர்ச்சி பெற்ற ஆரம்பகால விஞ்ஞானம், மிக அண்மைக் காலத்தில் ஒரு விஞ்ஞான இயக்கத்திலிருந்து ஒரு சமூக இயக்கமாக மாற்றமடைந்ததையும் அவர் விவரிக்கின்றார். முதலாம் உலக யுத்தத்தினைத் தொடர்ந்து இடம் பெற்ற சம்பவங்களும், பின்னர் விஞ்ஞான வளர்ச்சியில் அரசாங்கங்கள் கொண்ட அக்கறையும் — இவற்றுள் சோவியத் யூனியனின் முயற்சியே ஆரம்ப முன்னுதாரணமாகும் — மிக முக்கியமானதாகும். இந்தியாவின் நவீன விஞ்ஞானம் பெரும்பாலும் பிரித்தானியர் வருகையுடனேயே ஆரம்பித்தது. ''கலாச்சாரம், பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய எல்லாத் துறைகளிலும் பிரித்தானியாவின் மேலாதிக்கம் வலுப்பெற்றது.'' என்கின்றார். இச்செயற்கையான ஒட்டுதலை, இந்திய விஞ்ஞானத் துறை தொடர்ந்தும் எதிர்நோக்குகின்ற பாரிய பிரச்சினையாக அவர் அடையாளம் காணுகின்றார். வேறுபட்ட சமூக, கலாச்சாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்ட விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் இந்திய விஞ்ஞானத்தின் அபிவிருத்தியைத் தொடர்ந்தும் உருக்குலைத்தது. (உதாரணமாக, கற்பிப்பதற்குப் பாவிக்கப்பட்ட பல புத்தகங்கள் பொருத்தமற்றவையாகவிருந்தன.)

இன்று இந்தியாவில் நிலைபெற்றுள்ள விஞ்ஞானம், மேற்கத்திய கலாச்சார மேலாதிக்கத்தின் ''நினைவுச்சின்னம்'' என்று அவர் கூறுகின்றார். மேலும், அமெரிக்காவினதும், ஐரோப்பாவினதும் விஞ்ஞானம், கொள்கை, கோட்பாட்டு அடிப்படையிலும் செயல்பாட்டு ரீதியிலும் இந்தியாவில் பேணப்பட்டு வருவதாக அவர் குறிப்பிடுகின்றார். ''தொழில் நுட்ப இடமாற்றம் என்ற பெயரில், கூடிய விலையில் பழந்தொழில் நுட்பம் மூன்றாம் உலகிற்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது. உள்ளூர் தொழில்நுட்பமின்மை, தொழில்நுட்ப அறிவின் இறக்குமதி என்பன வேகமான கைத்தொழில்மயமாக்கலிற்கு உதவுவதற்குப் பதிலாக, வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் மீது வளர்முக நாடுகள் தொடர்ந்

(20ம் பக்கம் பார்க்க)

**வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு**

# 1979 ல் ஆசியப் பொருளாதாரங்கள்

## பணவீக்க அதிகரிப்பு மெதுவான வளர்ச்சி விகிதம் என்பன பற்றிய ஹேஷ்யங்கள்

ஆசியப் பிரதேசத்தின் சந்தைப் பொருளாதாரங்கள் உட்பட உலகச் சந்தைப் பொருளாதாரங்கள் யாவற்றினதும் வளர்ச்சி விகிதம் குறையுமென்றும், பணவீக்கம் அதிகரிக்குமென்றும் ஹேஷ்யம் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான ஹேஷ்யங்கள் இவ்வருடம் உலக வர்த்தக விகிதம் திட்டமாக மந்தகதியை அடையுமென்றும் கூறுகின்றன. எனினும், சகல பிரதான ஐரோப்பிய நாடுகளும் கடந்த வருடக் குறை வளர்ச்சிச் செயற்பாட்டை மிஞ்சி, 3 லிருந்து 4 சதவிகிதம் வரையான வளர்ச்சி விகிதத்தைப் பெற்றுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது; ஆனால், இந்த நலன்கள் அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினால் அழிக்கப்பட்டு விடக்கூடும். அமெரிக்காவின் வளர்ச்சி விகிதம் கடந்த வருடத்தின் 3.8 சதவிகிதத்திலிருந்து 2.4 சதவிகிதத்துக்குக் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆதலால், இந்த நிலைமைகளில், பிரதான வர்த்தக நாடுகளில் இறக்குமதிகளுக்குரிய சாத்தியமான கோரிக்கை மேலும் கட்டுப்படுத்தப்படக்கூடும். 1979 ஆம் ஆண்டில் உலக வியாபாரப் பொருள்களின் கன அளவில் 3.7 சதவிகித வளர்ச்சி விகிதம் மட்டுமே ஏற்படும் என ஹேஷ்யம் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆசியப் பிரதேசத்தைப் பொறுத்தவரை, பெரும்பாலான ஆசிய நாடுகளின் வளர்ச்சி விகிதங்கள் மந்தகதியை அடையுமென்று எதிர்பார்க்கப்படுவதாலும், இப் பிரதேசத்தின் ஏற்றுமதிகளில் பெரும் பகுதியை எடுக்கும் வளர்ச்சியுற்ற நாடுகளில் வர்த்தகக் காப்பு வரிகள் வளர்ந்து வருவதாலும் 1979 ஆம் ஆண்டில் நிலைமை அவ்வளவு பிரகாசமாக இருக்குமென்று தோன்றவில்லை. பெரும்பாலும் எண்ணெய் விலைகள் உயர்த்தப்பட்டதன் காரணமாக இப்பிரதேசத்தில் பணவீக்கம் மோசமடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அநேக ஆசிய நாடுகளில் வளர்ச்சி இவ்வருடம் ஓரிரு சதவிகிதம் குறையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், பல நாடுகள் தங்களுடைய வளர்ச்சி விகிதம் 5 முதல் 9 சதவிகிதம் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கின்றன. எனினும், இது 1978 ஆம் ஆண்டில் கண்ட வளர்ச்சி விகிதத்தை விடக் குறைவானதேயாகும். இது சில மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நேர் எதிரான நிலையாகும். இந்நாடுகள், 3 சதவிகிததைதவிடக் குறைந்த வளர்ச்சி விகிதத்தை எதிர்பார்க்கும் அமெரிக்காவின் குறைவான வளர்ச்சி விகிதத்துக்கு ஈடானதொரு வளர்ச்சி விகிதத்தைக் கூட அடையாவென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இந்த ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை 1978 ஆம் ஆண்டில் உயர்வான மொத்தத் தேசிய உற்பத்தி விகித வளர்ச்சியைச் சாதித்திருந்த போதிலும், அந்நாடுகளின் பெருந் தொகையான மக்களிடையே கவனிக்கப்படத்தக்க அபிவிருத்திகளை உண்டாக்கக்கூடிய ஒரு பொருளாதார விஸ்தரிப்பு அவற்றிற்கு இன்னும் தேவைப்படுகின்றன.

1970 களின் ஆரம்பத்தில் எண்ணெய் விலையில் ஏற்பட்ட செங்குத்தான அதிகரிப்புகளாலும், அதையடுத்துத் தற்காலிகமாக வர்த்தகம் குறைந்ததாலும் உலகம் தற்போது வர்த்தகக் காப்பு முறைகளின் நிர்ப்பந்தத்தினால் குறிப்பாகப் பாதிக்கப்படக்கூடியதாயிருக்கிறது. கைத்தொழில்மயமான உலகத்தின் விஷயத்தை விட அதிக விரக்தியை உண்டு பண்ணும் விஷயம் ஆசிய நாடுகளின் நிலையாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பணவீக்க விகிதம் தங்களுடைய வளர்ச்சி விகிதங்களை விட வேகமாக ஏறி வருவதையும், இதனால் தாங்கள் சாதித்துவரும் கொஞ்ச முன்னேற்றமும் குலையும் பயமுறுத்தல் ஏற்பட்டு வருவதையும் ஆசிய நாடுகள் காண்கின்றன.

ஆசிய நாடுகள் சிலவற்றின் பொருளாதார வாய்ப்புகளைப் பற்றிய ஒரு சுருக்கமான நோக்கு கீழே தரப்படுகிறது:

### ஜப்பான்

ஜப்பானில், உத்தியோகபூர்வமான ஹேஷ்யங்களின்படி, 1979 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி முந்திய வருடத்தின் 6 வீதத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உறுதியான நுகர்வோர் செலவுகளும், அதிகரித்த தனியார் முதலீடுகளும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவது சாத்தியம். 1979 ஆம் ஆண்டில் ஒபெக் (பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் ஸ்தாபனம்) எண்ணெய் விலை உயர்வுகள், மற்றெல்லா ஆசிய நாடுகளில் போலவே, ஜப்பானிலும் வளர்ச்சி விகிதங்களைப் பாதிக்குமென்றும், பணவீக்கப் போக்குகளைக் கூட்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வருடத்தின் 4 சதவிகிதத்திலிருந்து 4.9 சதவிகிதம் வரை இந்த விகிதங்கள் உயர்வதுடன் அதிக பணவீக்கமும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தியாவசிய மூலப்பொருள்களுக்கு ஜப்பான் உயர்விலைகளைக் கொடுக்க வேண்டியிருக்கும். அதே வேளையில் உள்நாட்டு நுகர்வோர் விலைகளும் மேலும் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. யென்னின் பெறுமதியில் சாத்தியமான குறைப்பு, ஏற்றுமதிகளின் விலைகளை உயர்த்தி வருமென்றும் அச்சங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

### சிங்கப்பூர்

சிங்கப்பூரின் வளர்ச்சி 1978 ஆம் ஆண்டின் உத்தியோகபூர்வமான விகிதமான 8.6 சதவிகிதத்திலிருந்து, இவ்வருடம் 6.8 சதவிகிதத்துக்கு இறங்கி வருமென எதிர்பார்க்கப்படுகிறது. சிங்கப்பூரின் பொருளாதாரம் பெருமளவுக்குக் கப்பற் போக்குவரத்தையும், விமானப் போக்குவரத்தையும், உல்லாசப் பயணத் துறையையும் சார்ந்துள்ளது. ஆதலால், அது உலகளாவிய பண வீக்கத்தாலும், கப்பல் , விமானப் போக்குவரத்துச் செலவுகளின் உயர்வினாலும், உலகப் பொருளாதாரத்தின் பொதுவான தளர்ச்சியினாலும் பாதிக்கப்படும் என்பது திண்ணம். ஹேஷ்யங்களின்படி நாட்டின் ஏற்றுமதிகள் இவ்வருடம் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இறக்குமதிகளில் இதை விடத் துரிதமான அதிகரிப்புக்கூட எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் சிங்கப்பூரில் முதலீடு செய்யும் ஜப்

பாானிய உற்பத்தியாளர்கள் உயர் பெறுமதியுள்ள மூலதன, முத லீட்டு, இயந்திர சாதனங்களைக் கொண்டுவருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### தென் கொரியா

தென் கொரியாவின் வளர்ச்சி விகிதம் கடந்த வருடத்தின் உயர் விகிதமான 12.5 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதத்துக்கு இறங்கி வருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1978 ஆம் ஆண்டில் 14.4 சதவிகிதத்தை எட்டிய பணவீக்க விகிதத்தைக் குறைப்பதற்கு உதவியாக, பொருளாதார வளர்ச்சி அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படவிருக்கிறது. பணவீக்க விகிதம் இவ்வருடம் 12 சதவிகிதத்துக்குக் குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், பணவீக்கவிகிதம் 1978 ஆம் ஆண்டின் விகிதத்துக்கு மேல் செல்வதாகத் தோன்றுகிறது. எனவே, 1979 ஆம் ஆண்டில் அதனை 12 சதவிகிதத்தில் வைத்திருக்கும் இலக்கை அடையும் சாத்தியப்பாடு கடினமாகவே தோன்றுகிறது. ஏற்றுமதிகளின் பெறுமதி 22 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டு 1550 கோடி டாலருக்கு உயர்த்தப்பட வேண்டுமென அரசாங்கம் கேட்டிருப்பதால், ஏற்றுமதிகள் தொடர்ந்து சாத்தியமான மிக உயர்ந்த மட்டங்களில் இருந்து வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தைவான்

கடந்த வருடம் இப்பிரதேசத்தில் மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் — 12.8 சதவிகிதம் — பதிவு செய்த தைவான் 1979 ஆம் ஆண்டில் 8.5 சதவிகித வளர்ச்சி விகிதத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதிகளால் தூண்டப்படும் அதன் பணவீக்கம் 5.8 சதவிகிதத்திலிருந்து கிட்டத்தட்ட 9 சதவிகிதத்துக்கு உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. மூலப்பொருள்களின் உயர் விலைகள் ஒருபுறமிருக்க, பணவீக்கம் தைவானின் பண நிரம்பலில் ஏற்பட்டுள்ள திடீர் அதிகரிப்பினால் மேலும் மேலே தள்ளப்படுகிறது. 1978 ஆம் ஆண்டில் பண நிரம்பல் 33 சதவிகிதம் அதிகரித்தது.

### ஹொங்கொங்

ஹொங்கொங்கிலும் பணவீக்கமே பொருளாதாரத்துக்கு மிகப் பெரிய பிரச்சினையாயுள்ளது. 1979 ஆம் ஆண்டில் பணவீக்கம் 9 சதவிகிதத்தை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. வங்கியின் கடன் கொடுக்கும் விகிதங்களை உயர்த்துவது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பணவீக்கத்தைக் குறைக்க அரசாங்கம் முயன்றுள்ளது. ஆனால், நுகர்வோரின் செலவுகள் இன்னும் பாதிக்கப்படாமலே இருந்து வந்துள்ளன. இங்கு பணவீக்கம் அதிகரித்து வருவதற்குத் தங்குதடையின்றித் தாராளமாகப் பணத்தைச் செலவிடும் குடும்பங்களின் வருமானங்கள் வளர்ந்து வருவதே காரணம்; அத்துடன் ஹொங்கொங் டாலரின் மதிப்பு குன்றி வருவதும் ஒரு காரணமாகும். இதனால் பெரும் வர்த்தகப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதிச் சந்தைகளில் நிலவும் உறுதியற்ற நிலைமைகளாலும், வெளிநாட்டு எண்ணெய் விலை உயர்வுகளின் தாக்கத்தினாலும், வர்த்தகக் காப்பு முறைகளாலும், ஏற்றுமதிச் சந்தைகளில் தைவான், தென் கொரியா, 'ஏசியன்' நாடுகள் ஆகியவற்றிடமிருந்து போட்டி வளர்ந்துவருவதாலும் பொருளாதாரம் மந்தகதியை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்சின் பொருளாதாரம் 1978 ஆம் ஆண்டின் 5 சதவிகிதத்திலிருந்து இவ்வருடம் 5.5 சதவிகிதத்துக்கு இலேசான மேல் நோக்கிய வளர்ச்சியைப் பதிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதி விலைகளிலும் ஓர் உயர்வு ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஏற்றுமதி உள்ளீடுகள் கடந்த வருடத்தின் 8 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 12 சதவிகிதத்துக்கு உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்க விகிதம் பிரதானமாக எண்ணெய் விலைகளின் உயர்வால் கடந்த வருடத்தின் 8 சதவிகித அதிகரிப்பிலிருந்து 17 சதவிகிதம் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கமும் சில விலைகளைச் செயற்கையாகக் குறைந்த மட்டங்களில் பிடித்து வைத்திருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலமாக அடைத்து வைக்கப்பட்டிருந்த பணவீக்க சக்திகளை விடுவித்து வருகிறது. அண்மையில் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புகள் நுகர்வோரின் செலவுகளுக்கு உதவியுள்ள அதே வேளையில், வாகனப் போக்குவரத்து, மின்சாரம் போன்ற சேவைகள் சம்பந்தமாகக் கட்டண விகிதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சிமெந்து அரிசி போன்ற பொருள்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த விலை உயர்வுகள் தொழிற் சங்கங்களிடையே ஓரளவு அதிருப்தியை உண்டாக்கி வருகின்றன.

### மலேசியா

மலேசிய அரசாங்கம் விலைகளை ஸ்திரப்படுத்தி வைத்திருக்கவும், பணவீக்கத்தை அடக்கிவைத்திருக்கவும் சகல சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகத் தோன்றுகிறது. உதாரணமாக, கடந்த வருடத்தின் பிற்பகுதியில், நுகர்வோர் விலைகள் கட்டு மீறிச் சென்று விடுமென்று தோன்றியபோது, வரி மான்யங்கள் அறிவிக்கப்பட்டு, சேமிப்புகளுக்கு ஊக்கமூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந் நடவடிக்கைகள் யாவும் பொருளாதாரத்தில் பணவீக்கப் போக்குகளை எதிர்த்தடக்கும் நம்பிக்கையுடன் எடுக்கப்பட்டன. பணவீக்க விகிதம் கடந்த வருடத்தில் போலக் கிட்டத்தட்ட அதே மட்டங்களில் — ஏறக்குறைய 5 சதவிகிதம் — தொடர்ந்து இருந்து வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வருடத்தின் 7.9 சதவிகித வளர்ச்சி விகிதத்துக்கெதிராக இவ்வருடம் 7.2 சதவிகித வளர்ச்சி விகிதம் எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச வர்த்தகத்தில் துரித வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மந்தமாகத் தோன்றிய போதிலும், நாட்டின் பிரதான ஏற்றுமதிகளான தகரம், ரப்பர், செம்பனை எண்ணெய் ஆகியவற்றிற்கு வெளிநாடுகளில் தொடர்ந்து கிராக்கி இருந்து வருகிறது. இவ்விதமாக அரசாங்கம் உள்நாட்டுச் செலவுகளை அதிகரித்து, தனது வர்த்தக விஸ்தரிப்புக் கொள்கையைப் பேணியுள்ளது.

### இந்தோனேஷியா

1979 ஆம் ஆண்டில் இப்பிரதேசத்திலேயே மிக உயர்வான பணவீக்க விகிதம் இந்தோனேஷியாவில் பதிவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வருடத்தில் செய்யப்பட்ட நாணய மதிப்பிறக்கத்தின் விளைவுகள் உணரப்பட்டு வருவதுடன், பணவீக்கம் 20 சதவிகிதத்துக்கும் 25 சதவிகிதத்துக்குமிடையே உயருமென எதிர்பார்க்

கப்படுகிறது. 1978 நவம்பரில் ரூபியாவின் மதிப்பு குறைக்கப்பட்டதற்குப் பின் விலைகள் மாதமொன்றுக்குச் சராசரியாக 2.1 சதவிகிதம் அதிகரித்துள்ளன. எரிபொருள் விலை உயர்வுகளும் அத்துடன் உள்நாட்டு உதவி மானியங்களின் வெட்டுகளும் பணவீக்கப் - போக்குகளை அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், அரசாங்கம் பணச்சுருக்கத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்வதற்காகத் தனது 1978-79 ஆம் ஆண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டத்தை 43 சதவிகிதம் அதிகரிக்க வேண்டியுமிருந்தது. மேலும், நவம்பருக்குப்பின், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள்களின் விலைகள் ஏறக்குறைய 50 சதவிகிதம் உயர்ந்துள்ளன. இது சீனி, பாண் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதற்கு அடிகோலி வருகிறது. ரப்பருக்கும் தகரத்துக்கும் நல்ல விலைகள் கிடைத்து வருவதால், கூட்டுமொத்த ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகபிரகாசமாகத் தோன்றுகின்றன; அதே வேளையில் உயர் எண்ணெய் விலைகளும் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தை அதிகரிக்கலாம்

### தாய்லாந்து

இப் பிரதேசத்திலுள்ள மற்றுமநேக நாடுகளில் போலவே, தாய்லாந்திலும் பணவீக்கம் பற்றிய அச்சங்கள் மிகவும் உண்மையாயிருப்பதாகத் தோன்றுகின்றன. கட்டட நிர்மாணம் போன்ற சில துறைகளில் நடவடிக்கைகள் மந்தகதியை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி 1978 ஆம் ஆண்டின் 9 சதவிகிதத்திலிருந்து இவ்வருடம் இலேசாக 8 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உபயோகிப்பாளர் சிமெந்து, மணல், உருக்கு மற்றும் கட்டடப் பொருள்களுக்கு உயர் விலைகள் கொடுக்க வேண்டியிருக்கும். இவையெல்லாம் பணவீக்கத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

மீண்டும் தாய்லாந்திலும் உயர் எண்ணெய் விலைகளும், எண்ணெய் வழங்கல் மூலங்களும் பொருளாதாரத்துக்குக் கவலையை உண்டாக்கி வருகின்றன. இவ்வருடம் 9 சதவிகிதப் பணவீக்கம் — இது 1978 ஆம் ஆண்டில் இருந்த அதே விகிதம் தான் — ஏற்படுமென அரசாங்கம் ஜோஸ்யம் கூறியுள்ளது. ஆனால், இதைவிட நம்பிக்கைக் குறைவான கருத்துப்படி பணவீக்கம் 10 சதவிகிதத்துக்கு மேல் உயரக்கூடும். நாட்டின் ஏற்றுமதிகள், குறிப்பாக அரிசி, தகரம், மரவெள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் ஏற்றுமதிகள் தொடர்ந்து உறுதியாயிருந்து வருமென எதிர்பார்க்கப்படுகிறது; அதே வேளை உல்லாசப் பயணத் துறையின் சம்பாத்தியம் 15-20 சதவிகிதம் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது; நாட்டின் பொருளாதாரத்தில் இவ்வருடம் 9 சதவிகித வளர்ச்சி ஏற்படும் என்பது. இந்த எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பது சாத்தியம்.

### சீனு

சீனு மேற்கொண்டுள்ள நவீனமயமாக்கும் வேலைத்திட்டத்தையும், பொருளாதாரத்தின் கிட்டத்தட்ட சகல துறைகளிலும் அதிகரித்துள்ள நடவடிக்கைகளையும் நோக்கும் போது, உற்பத்தி 1978 ஆம் ஆண்டின் அளவுக்கு அல்லது அதைவிட வேகமாக அதிகரிக்குமென்று தோன்றுகிறது. எனினும், மொத்தத் தேசிய உற்பத்தியில் கூட்டுமொத்த உயர்வு இரு முக்கியமான காரணிகளைப் பொறுத்திருக்கும்; அஃதாவது, விவசாய நடவடிக்கைகளுக்கான காலநிலை; சீனு திட்டமிட்டுள்ள பிரமாண்டமான கைத்தொழில் மய, நவீனமய வேலைத் திட்டங்களில் முதலீடு செய்வதற்குரிய வெளிநாட்டு நிதியளிப்பு. குறிப்பாகத் தேயிலை, நிலக்கரி, வாகனப் போக்குவரத்து, மின்சாரம் போன்ற துறைகளில் பிரமாண்டமான முதலீடுகளுக்குத் திட்டமிடப்படுகிறது.

### இந்தியா

இந்தியப் பொருளாதாரத்தினுல் குவிக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டு நிதி வளங்கள் — முன்னெப்போதும் காணுதவாறு வெளிநாட்டுச் சேமிப்புகளில் 650 கோடி டொலர் குவிக்கப்பட்டுள்ள சாதனை — நாட்டின் அபிவிருத்தி வாய்ப்புகள் சம்பந்தமாகக் கொள்கைக் கர்த்தாக்களுக்குச் சுயதிருப்தி உணர்ச்சியைக் கொடுத்திருப்பதாகத் தோன்றுகிறது. எனினும், அதிகரித்து வரும் பெட்ரோலியம் விலைகளும், உலக வியாபகமான பணவீக்கமும் 1978 ஆம் ஆண்டில் அவற்றின் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுச சென்றுள்ளன. கடந்த வருடம் இந்தியாவின் ஏற்றுமதிச் சம்பாத்தியம் 6,900 கோடி டாலராயிருந்த போதிலும், 1977 ஆம் ஆண்டில் 417 மில்லியன் அமெரிக்க டாலராயிருந்த அதன் வர்த்தகப் பற்ருக்குறை, 1978 ஆம் ஆண்டில் அநேகமாக 2 மடங்கு அதிகரித்து, 1,050 மில்லியன் அமெரிக்க டாலராகியது. இதன் விளைவாக இந்தியாவின் வளர்ச்சி விகிதமும் குன்றியது. 1977 ஆம் ஆண்டில் 7-2 சதவிகித மட்டத்திலிருந்த இது கடந்த வருடம் 3.5 சதவிகித மட்டத்துக்குக் குறைந்தது. இந்தியா பெருந்தொகைப் பணத்தை வங்கியில் போட்டு வருகிறது. ஏனென்ருல், பொறியியல் சாதனங்களில் மட்டும் அதன் ஏற்றுமதிச் சம்பாத்தியம் 1978 ஆம் ஆண்டின் 875 மில்லியன் டாலருக்கெதிராக 1979 ஆம் அண்டில் 100 கோடி டாலர் இலக்கை அடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.. மேலும் 1970 ம் ஆண்டிலிருந்து உணவு உற்பத்தி அதிகரிப்புகள் உண்மையில் ஜனத்தொகை வளர்ச்சியை விஞ்சியிருந்த போதிலும், விவசாயத்தில் ஏற்பட்ட இம்முன்னேற்றம் அவ்வளவாக உதவவில்லை. ஏனென்ருல், கிராமப்புற இந்தியாவில் பணமும் கொள்வனவுச் சக்தியும் இல்லாக் குறை தொடர்ந்து விரிவான அளவில் இருந்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் தொழிலாளர் படையில் சேரும் 6 மில்லியன் மக்களில் நவீன கைத்தொழில்மயத் துறையால் சுமார் அரை மில்லியனிலிருந்து ஒரு மில்லியன் வரையானவர்களை மட்டுமே உள்ளிழுத்துக் கொள்ள முடியும். எஞ்சியுள்ள 5 மில்லியனிலிருந்து 5½ மில்லியன் வரையானவர்கள் சம்பந்தமாக என்ன செய்ய முடியும் என்பதே கேள்வி.

இந்தியப் பொருளாதாரத்தினுல் வெளிநாட்டு நிதிவளங்கள் குவிக்கப்படுதல் ஒரு தற்காலிக சம்பவமாகும் என்பதும், இது 1983 ஆம் ஆண்டில் அதன் ஆருவது திட்டக்கால முடிவில் மறைந்து விடக்கூடும் என்பதும், ஜூன் மாதத்தில் பாரிசில் கூடும் உதவி நாடுகள் குழுவின் அங்கத்தினர்களுக்கு இந்தியப் பொருளாதாரம் பற்றிய தனது அறிக்கையில் உலக வங்கி தெரிவித்துள்ள கருத்தாகும்.

பிறநாடுகளிலிருந்து பணமனுப்பப்படும் பாய்ச்சலில் ஏற்படும் குறைவு, பயிர் விளைச்சல் தவறுதல் அல்லது இந்தியாவின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்படும் சீரழிவு போன்ற பாதகமான நிலைமைகளின் விளைவாக இந்தியாவின் வெளிநாட்டு நிதிவளங்கள் மறைந்துவிட முடியுமென வங்கி கருதுகிறது.

இந்தியப் பொருளாதாரத்தின் வெளிநாட்டு உதவித் தேவைகள் தொடர்ந்து துரிதமாக அதிகரித்து வருமென்றும், இந்தியப் பொருளாதாரத்துக்கு வெளிநாட்டு உதவி மேன்மேலும் அதிக அளவில் தேவைப்படுமென்றும் வங்கி வலியுறுத்துகிறது. வேலை வசதிகளைச் சிருஷ்டிப்பதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் காணிச் சீர்திருத்தங்கள், விவசாயக் கடன் வசதி, கிராமாபிவிருத்தி, பொது மராமத்து வேலைகள் போன்ற நேரடியான வேலைத் திட்டங்கள் முக்கியமாகும் என உலக வங்கியின் அறிக்கை வற்புறுத்துகிறது. இந்தியாவில் விவசாயச் சீர்திருத்தம் ''முன்பு கொண்டிருந்த சிறு உத்வேகத்தைக் கூட'' இழந்து விட்டதைக் குறித்து உலக வங்கி வருந்துகிறது.

### பாகிஸ்தான்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகரித்துவரும் பணவீக்கம் பாகிஸ்தானின் பிரச்சினைகளை அதிகரித்துள்ளன. ஜனாதிபதி ஷியா - வுல் - ஹக்கின் அரசாங்கம் குறிப்பாக அடிமட்டங்களில் உண்மையான வருமானங்கள் வேகமாகக் கரைந்து வருவதைப் பற்றிக் கவலை காட்டியுள்ளது. ''தற்போதைய பொருளாதாரக் குழப்ப நிலையிலிருந்து தப்பும் வழிகளை அளவு மீறிய தடைகள் அடைத்துக் கொண்டிருக்கின்றன. வறுமையையும், குறைந்த வருமானங்களையும் கொண்ட தீய வட்டத்திலிருந்து தப்ப, பொருளாதாரத்துக்கு மேன்மேலும் கஷ்டமாகி வருகிறது. குறைந்த வருமானங்கள் குறைந்த சேமிப்புகளையே அனுமதிக்கின்றன; குறைந்த சேமிப்புகள் வருமானங்களைக் குறைந்த மட்டத்தில் வைக்கின்றன. இதைவிட மோசமானதென்னவெனில், இத்திய வட்டத்தை ஊடுருவிச் செல்வதற்கான திடசித்தமில்லாமல் கொள்கைக் கர்த்தாக்கள் அவதிப்படுவதாகத் தோன்றுவதாகும்'' என்று பாகிஸ்தான் அபிவிருத்திப் பொருளியல் கழகம் அண்மையில் எச்சரித்தது.

இந்த எச்சரிக்கைகளின்படி பொருளாதார நிலைமை அபிவிருத்தியடைந்து வரவில்லை. ஐந்தாவது ஐந்து வருடத் திட்டத்தின் அளவில் ஏறக்குறைய 19 சதவிகிதத்தை வெட்டி, அதன் செலவினத்தை 171 பில்லியன் ரூபாவுக்குக் குறைக்கும் யோசனையொன்றும் இருந்து வந்துள்ளது. அரசாங்கம் தனது கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் ஆற்றலைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. ஏனென்றால், பாகிஸ்தானுக்குக் கடன் கொடுத்தவர்கள் எவரும், நடப்பு வருடத்தில் திருப்பிக் கொடுபட வேண்டிய கடன்கள் சம்பந்தமாகக் கஷ்ட நிவாரணம் கோரி அந்நாடு விடுத்த வேண்டுகோள்களுக்கு இதுவரை செவிசாய்க்கவில்லை. நாட்டின் அந்நியக் கடன் பொறுப்பு 700 கோடி அமெரிக்க டாலரை எட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### பங்களாதேஷ்

பணவீக்கத்தின் விளைவுகள் பங்களாதேசத்திலும் உணரப்பட்டு வருகின்றன. 1979 ஆம் ஆண்டில் நாட்டின் வளர்ச்சி விகிதத்தில் இது தனது தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுச் செல்லுமென்று எதிர்பார்க்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டில் பங்களாதேசத்தில் தானிய உற்பத்தி 10 சதவிகிதம் அதிகரித்தது. அனுகூலமான கால நிலையுடன் இவ்வருடம் இது மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 1979 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் உணவு விலைகள் தொடர்ந்து உயர்ந்து வந்துள்ளன. இவ்வருடம் ஜனவரி மாதத்தில் 3.75 தக்கா (அமெரிக்க டாலர் 0.12) வுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசி மார்ச் மாத முடிவில் 4.75 தக்காவுக்கு விலையுயர்ந்துவிட்டது. எனினும், பங்களாதேஷில், 1979 ஆம் ஆண்டில் உலகெங்கும் அதிகரித்துள்ள எரிபொருள் விலைகளினதும் வளர்ந்துவரும் பணவீக்கத்தினதும் விளைவுகள் ஒருபுறமிருக்க, அதன் மொத்தத் தேசிய உற்பத்தியில் வளர்ச்சி விகிதம் பெருமளவுக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் ஸ்திரத்தையும், கால நிலையையும், வெளிநாட்டு உதவி விவேகமாக உபயோகிக்கப்படுவதையும் பொறுத்திருக்கும்.

### நூல் ஆய்வு

(16ம் பக்கத் தொடர்ச்சி)

தும் தங்கியிருக்கும் நிலையை நீடிக்கச் செய்துள்ளன என்பதனை இந்தியாவின் கடந்த மூன்று தசாப்த கால அனுபவம் நிரூபித்துக் காட்டியுள்ளது.''

இதற்கு அவர் கூறுகின்ற பரிகாரம் என்னவெனில், உள்ளூர் நிலைமைக்குப் பொருந்தக்கூடிய அதி நவீன தொழில்நுட்ப முறையாகும். மேலும், விஞ்ஞானிகள், ''எல்லைப்படுத்தப்பட்ட, குறுகிய நோக்கம் கொண்ட தொகுதிநலன்களின் பழிவாங்குதல்களுக்கு''ப் பயப்படாது பிரச்சினைகளைக் கிளப்பி, ஆராய்வதற்கும், சுதந்திரமாக் கருத்துக்களை வெளியிடுவதற்கும் வாய்ப்பைப் பெற வேண்டும். கைத்தொழில்துறை, அரச முகவரின்மைகள் என்பவற்றில் கருமமாற்றுகின்ற விஞ்ஞானிகளைப் பொறுத்தவரையில் இது மிக முக்கியமானது என அவர் கூறுகின்றார்.

மூன்றாவது உலகில் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான, தொழில்நுட்ப இலக்கியத்தில் திரிவேணி முக்கியமான ஒரு படைப்பாகும். ரகுமானின் அணுகுமுறையானது உலகளாவியதும், வரலாற்று ரீதியானதுமாகும். 1930 க்களில் மேற்குலகின் விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கு பேர்னல் செய்த சேவையையும், சில தசாப்தங்களுக்கு முன்னர் இந்திய வரலாற்று ஆராய்ச்சிக்கு கொஸாம்பி செய்த சேவையையும் இம்முயற்சி ஏத்திருக்கின்றது. புத்தகத்தில் குறைகள் இல்லாமலில்லை. அதன் போக்கு திடீரென அசைவுருகின்றது. இப் பாணியில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முயற்சிகளுக்குப் போதிய துணைக் குறிப்புக்களளித்திருக்கலாம். மேலும், சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் மாற்று விஞ்ஞான அபிவிருத்தி எவ்வளவு தூரம் அபிவிருத்தி கண்டுள்ளது? அல்லது சோவியத் யூனியன் போன்ற நாடுகள் மூன்றாம் உலகின் போதிய பிரதியீட்டு விஞ்ஞானத்தை அபிவிருத்தி செய்கின்றதா போன்ற கேள்விகளை அவர் எழுப்பவில்லை. சிறு சிறு குறைபாடுகள் காணப்படினும் கூட, இனிவரும் சில வருடங்களுக்கு, விஞ்ஞானம், அபிவிருத்தியுற்றுவரும் சமூகங்கள் என்பவற்றின் பிரச்சினைகளுக்கான இன்றியமையாத ஓர் அறிமுகமாக பேராசிரியர் ரகுமானின் நூல் அமையும்.

— சுசந்தா குணதிலகா

# வாசனைத்திரவியங்கள்—திருப்தியற்ற ஏற்றுமதி நிலை

1978 ம் ஆண்டில் வாசனைத் திரவியங்கள் மூலமான ஏற்றுமதிச் சம்பாத்தியம் 27.3 கோடி ரூபாவாக இருந்தது. இது 1977ம் ஆண்டின் சம்பாத்தியத்தை விட 75 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. உலகச் சந்தைகளில் நிலவிய விலை அதிகரிப்பே இதற்கான அதி முக்கிய காரணியாகக் காணப்பட்டது. எல்லா வாசனைப் பொருள்களதும் சராசரி கப்பற்றளம் வரையிலான விலைகள் அதிகரித்தன. அதிகரிப்பு வீதம் மிளகின் 39 சதவீதத்திலிருந்து கராம்பு, சாதிக்காய், கறுவா என்பனவற்றின் 100 சதவீதத்துக்கும் கூடியளவு வரை காணப்பட்டது.

இதற்கு மாறாக கொழும்பு தரகர் சங்கத்தினால் வாராந்த ஏலத்துக்கு விடப்பட்ட பல்வேறு வாசனைப் பொருள்களின் தொகையின் அளவு, திருப்தி தருவதாக இல்லை. 1978 ல் ஏலத்துக்கு விடப்பட்ட வாசனைப் பொருள்களின் மொத்தத் தொகையானது, 1977 ல் ஏலத்துக்கு விடப்பட்ட தொகையிலும் பார்க்க 11 சதவீதம் குறைவானதாகும். உற்பத்தி அதிகரிப்பைக் காட்டிய ஏலம், கறுவா என்பனவற்றைத் தவிர, ஏனைய சகல வாசனைப் பொருள்களினதும் உற்பத்திகள் வீழ்ச்சியையே பதிவு செய்தன. குறிப்பாக கராம்பு, மிளகு, சாதிக்காய்ப்பூ என்பனவற்றின் உற்பத்தி வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. 1978 ல் ஏற்றுமதி செய்யப்பட்ட தொகைகளுள் ஏலம், சாதிக்காய், மிளகு என்பன கணிசமான அளவு அதிகரிப்பைக் காட்டின. இருந்தபோதிலும், கராம்பு (76 சதவீதம்), கறுவா (24 சதவீதம்) என்பனவற்றின் ஏற்றுமதிகளிற் காணப்பட்ட வீழ்ச்சியானது, மேற்படி அதிகரிப்பின் முக்கியத்துவத்தை மங்கச் செய்துவிட்டது. இதன் பிரகாரம் வாசனைப் பொருள்களின் ஏற்றுமதியானது, 1977 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1978 ல் 0.10 சதவீத எல்லை ரீதியான குறைவைக் காட்டிற்று.

கொழும்பு ஏல விற்பனைகளைச் சென்றடையும் தொகைக்கும், ஏற்றுமதியாகும் தொகைக்குமிடையே பாரிய வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியாகும் தொகையில் ஒரு சிறு வீதமாக ஏலத்துக்கு வரும் தொகை காணப்படுகிறது. வர்த்தகர்கள் ஏலத்தில் விடாது தங்களது பண்டங்களை நேரடியாக ஏற்றுமதி செய்யும் போக்கு அதிகரித்து வருவதை இது காட்டி நிற்கிறது.

ஏற்றுமதித் தொகைகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதும், உலகச் சந்தை விலைகளில் காணப்பட்ட சாதக நிலைமைகள், வாசனைப் பொருள்களின் மூலமான ஏற்றுமதிச் சம்பாத்தியத்தைக் கணிசமான அளவு அதிகரித்துக் கொள்ள உதவின. பகிரங்க ஏலங்களில் ஏலம், கராம்பு, கறுவா என்பனவற்றுக்கே அதிகரித்த விலைகள் கிடைத்த போதும், எல்லா வாசனைப் பொருள்களினதும் கப்பற்றளம் வரையிலான விலைகளில் சராசரியான அதிகரிப்பைக் காணக்கூடியதாகவிருந்தது. இதில் அதி முக்கியமான அதிகரிப்புக்கள் கராம்பு, சாதிக்காய், கறுவா என்பனவற்றிற் காணப்பட்டன. 1977 ம் ஆண்டின் விலை மட்டங்களுடன் ஒப்பிடுகையில், 100 சதவீதத்துக்கும் கூடிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 1978 ம் ஆண்டுக்கான மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியம் 27.3 கோடி ரூபாவாகக் காணப்பட்ட அதே வேளை, 1977 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருமானத்தில் 75 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது. 1978 ல் 100 சதவீதம் வரை அதிகரித்துச் சென்ற கறுவாவின் ஏற்றுமதிச் சம்பாத்தியம் இதற்கான பிரதான காரணமாகும். வாசனைப் பொருள் ஏற்றுமதி வருமானத்தின் 50 சதவீதமாக இது இருந்தது. கராம்பு தவிர்ந்த ஏனைய எல்லாப் பொருள்களது ஏற்றுமதி வருமானமும் அதிகரித்தன. கராம்பைப் பொறுத்தளவில் அது 50 சதவீதமாகக் குறைந்தது. 1977 ல் வெளிநாட்டுச் சம்பாத்தியத்தை அதிகம் உழைத்த பொருள்களுள் இரண்டாம் இடத்தைப் பெற்ற கராம்பு, 1978ல் நான்காம் இடத்தை அடைந்தமை இங்கு கவனிக்கத்தக்கது. மொத்த சம்பாத்தியத்தில் ஏலம், மிளகு என்பன முறையே 15, 13 சதவீதங்களைப் பெற்றுத் தந்தன. இந்நிலைமையை முற்றிலும் அனுகூலமானது என நம்ப முடியாது. இவ்வருமான அதிகரிப்பு நிலைமைகளை எஸ். டி. ஆர். அளவீடுகளில் நாம் பார்க்கும் பட்சத்தில், 1978 ல் அவை 11 சதவீத வீழ்ச்சியைக் காட்டி நிற்கின்றன. 1978 ல் இவற்றின் எஸ். டி. ஆர். பெறுமதி 1.39 கோடி எஸ். டி. ஆர். ஆகக் காணப்பட்ட அதே வேளை, 1977 ல் இது 1.56 கோடி எஸ். டி. ஆர். ஆகக் காணப்பட்டது. தனித்தனியாகப் பார்க்கையில், கராம்பு மூலமான சம்பாத்தியம் எஸ். டி. ஆர். பெறுமதியில் 75 சதவீதத்தில் குறைந்துள்ளது. மற்றெல்லாப் பொருள்களதும் சம்பாத்தியம் கணிசமான அளவு அதிகரித்தது. ஜனவரியில் கிலோ ரூ. 200 ஆகக் காணப்பட்ட ஏலத்தின் விலை பெப்ரவரி, மார்ச் அளவில் வேகமாக உயர்ந்து சென்றது. எனினும் ஏப்ரல், மே மாதங்களில் சந்தைகளிற் காணப்பட்ட மந்த நிலைமைகளுக்கு வெளிநாட்டுக் கேள்விகள் குறைவாகக் காணப்பட்டமை காரணமாகலாம். இதனால் பெருந் தொகைப் பொருள்களை விற்பனையிலிருந்து வாபஸ் பெறவேண்டிய நிலை ஏற்பட்டதுடன், ஏப்ரலில் விற்பனைத் தொகை வெகுவாகக் குறைந்தது. வெளிநாட்டுக் கேள்விகளில் காணப்பட்ட சிறிது அதிகரிப்புக் காரணமாக, ஜூனில் சந்தை நிலைமைகள் பலமடைந்து ஆகஸ்ட் - செப்டம்பர் காலங்களில் சிறிது வீழ்ச்சி நிலைமைகளை அனுபவித்தன. பின்னர் தொடர்ந்து காணப்பட்ட அதிகரித்த கேள்வி பெரும் வருமானத்தைப் பெற்றுத்தந்தது. டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 10,000 கிலோ ஏலம் விற்பனைக்கு விடப்பட்டது. டிசம்பரில் ஏலத்துக்கு மிக உச்ச விலை (கிலோ ரூபா 297.90) கிடைத்தது.

ஏலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஏனைய எல்லா வாசனைப் பொருள்களதும் சந்தை நிலைமைகள் தளம்பலின்றி இருந்தன. கராம்புச் சந்தை தளம்பல் நிலையிற் காணப்பட்டதுடன், ஜூலையில் அதன் ஆகக் கூடிய விலையாக கிலோ 128 ரூபாவை எட்டிப் பிடித்தது. இதே வேளை, சாதிக்காய்க்கான சந்தை நிலைமைகள்

ஜூன் மாதம் வரை விரைவாக வீழ்ச்சியுற்று கிலோ ரூபா 24.50 இல் நிலை கொண்டது. சாதிபத்திரி, மிளகு, கறுவா என்பனவற்றுக்கான சந்தை நிலைமைகளும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. இதில் குறிப்பிடத்தக்க ஒரே அம்சமாகக் காணப்பட்டது இவ்வருடத்தில் விற்பனைக்கென விடப்பட்ட மிளகுத் தொகையிற் காணப்பட்ட ஏற்ற இறக்கங்களாகும். 200 கிலோ முதல் 13,300 கிலோ வரை இந்த ஏற்ற இறக்க வித்தியாசம் காணப்பட்டது.

சாதகமான உலகச் சந்தை நிலைமைகளின் வாய்ப்புக்களை 1978 ம் ஆண்டிலும் இலங்கை இழந்துவிட்டது. 1976 ஐ விட 1977 ல் ஏற்றுமதியில் 13 சதவீத அதிகரிப்புக் காணப்பட்ட போதும், 1978 ல் 1977 ஐ விட 0.1 சதவீத எல்லை ரீதியான வீழ்ச்சி காணப்பட்டது. உற்பத்தியிற் காணப்பட்ட தேக்க நிலை இதற்குக் காரணமாயிற்று.

எதிர்வரும் வருடங்களில், வாசனைப் பொருள்களுக்கான-குறிப்பாக ஏலம் மிளகு என்பனவற்றுக்கான — உலகக் கேள்வி வருடாந்தம் 3-5 சதவீதம் வரை அதிகரித்துச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகச் சந்தைக்கான இலங்கையின் பங்களிப்பு மிகச் சிறு அளவிலேயே காணப்படுவதால், உள்ளூரில் எவ்வளவு கூடுதலாக உற்பத்தி செய்தாலும் உலகச் சந்தையில் அவற்றை இலகுவாக விற்பனை செய்துவிட முடியும். எமது பிரதான ஏற்றுமதிப் பயிர்களுக்குக் கடும் போட்டி நிலவும் இவ்வேளையில், அரசாங்கத்தின் பயிர் பன்முக நடவடிக்கைக் கொள்கையையும் கருத்திற் கொண்டு, நாட்டில் வாசனைப் பொருள்களின் உற்பத்தி விருத்திக்கான ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை உருவாக்கவும், செயற்படுத்தவும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

## நானாவித விளைபொருள்கள்

### 1978 – சாதகமான ஒரு வருடம்

ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு, பெறப்பட்ட விலைகள் ஆகிய இரண்டையும் நோக்குமிடத்து, 1978 ஆம் ஆண்டில் நானாவித விளைபொருள்களின் ஏற்றுமதி எதிர்கால வெற்றி வாய்ப்புக்கு உறுதிகூறும் வகையில் செயற்பட்டுள்ளது. இப்பண்டங்களின் மொத்த ஏற்றுமதி, 1976 ஆம் ஆண்டின் 24,150 மெட்ரிக் தொன்னுக்கும் 1977ம் ஆண்டின் 17,664 மெட்ரிக் தொன்னுக்கும் மாறாக 1978 ஆம் ஆண்டில் 25,410 மெட்ரிக் தொன்னாக இருந்தது. இது 1977 ஆம் ஆண்டின் ஏற்றுமதி மட்டத்தைவிட 44 சதவிகிதக் கூட்டு மொத்த அதிகரிப்பாகும். 1977 ஆம் ஆண்டில் போலவே, இந்த அதிகரிப்புகள் பிரதானமாக எள்ளின் அதிகரித்த ஏற்றுமதிகளிலேயே பிரதிபலித்தன. மொத்த ஏற்றுமதிகளில் எள்ளின் பங்கு 1977 ஆம் ஆண்டின் 48 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில், 17,000 மெட்ரிக் தொன்னாக அல்லது 67 சதவிகிதமாக அமைந்திருந்தது. தனித்தனியாகப் பார்க்குமிடத்து கொக்கோ, பப்பாசிப்பால் (வெ.) பாக்கு, இலவம் பஞ்சு ஆகியவற்றின் ஏற்றுமதி அளவுகளில் 20 சதவிகிதத்துக்கு மேற்பட்ட குறைவு பதிவு செய்யப்பட்டது. எனினும், இந்தக் குறைவுகள் சோப்பி, பப்பாசிப்பால (பி), எள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 100 சதவிகிதத்துக்கு மேற்பட்ட கணிசமான அதிகரிப்புகளால் ஈடு செய்யப்பட வேண்டியதற்கு மேற்பட்ட அளவில் ஈடு செய்யப்பட்டன. இதன் பயனாக, மீளாய்விலுள்ள ஆண்டில் 44 சதவிகிதக் கூட்டு மொத்த அதிகரிப்பு இறுதியில் டதிவுசெய்யப்பட்டது. 1978 ஆம் ஆண்டில் கோப்பியும், எள்ளும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று, 1977 ஆம் ஆண்டில் நிலவிய அனுகூலமான காலநிலையாகும். அட்டவணை 1 இல் இப்பண்டங்களின் ஏற்றுமதிச் செயற்பாடுகள் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன.

1977-78 இல் உலக கொக்கோ உற்பத்தி 144.2 கோடி தொன் எனச் சர்வதேச கொக்கோ ஸ்தாபனம் மதிப்பிட்டது. இது 1976-77 இன் உற்பத்தியை விட 6.4 சதவிகிதம் அதிகமாகும். நிறையில் ஏற்பட்ட இழப்புகள் சரிக்கட்டப்பட்ட பின் உபரியாக 39,000 தொன் உள்ளது. இதுவும், சில மேற்கு ஆபிரிக்க நாடுகளில் உற்பத்தி அதிகரிக்கும் எனக் கூறப்பட்ட ஹேஷ்யங்களும், உலகச் சந்தைக்குச் சில குறிப்பிட்ட மூலங்கள் பிரதானமாக மேற்கு ஆபிரிக்க நாடுகள் அருகிவிருந்தமையும் மீளாய்விலுள்ள ஆண்டின் ஆரம்ப காலத்தில் கொக்கோவின் உள்நாட்டு விலைகளில் ஏற்பட்ட குறைவுக்குப் பின்னாலுள்ள குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். ஆனால் இந்நிலைமை நெடுங்காலத்துக்கு நிலவவில்லை. மே மாதத்தில், சகல கொக்கோ ரகங்களும் விலையேற்றத்தைப் பதிவு செய்தன. இதற்கு ஏற்றுமதித் தீர்வை 45 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதத்துக்கு அரசாங்கத்தினால் குறைக்கப்பட்டமை ஒரு வேளை காரணமாயிருக்கலாம். அதன் பின், விலைகள் இடையறாது ஏறத் தொடங்கின. அக்டோபரில் உறுதியான கொள்வனவாளர்கள் இருந்ததால், அந்த ஆண்டில் முதன் முதலாக முதலாவது, இரண்டாவது தரங்கள் தலா 50 கிலோவுக்கு 2,000 ரூபாவுக்கு மேல் பெற்றன. 50 கிலோவுக்கு 2,450 ரூபா வீதம் வருடாந்த சராசரி விலைகளுடன் அவ்வருடம் முடிவடைந்த அதே வேளையில், வருடாந்த சராசரி க.த.இ. (கப்பல் தளம் மட்டும் இலவசம்) விலையாக 50 கிலோவுக்கு 2,415 ரூபா வீதம் பதிவு செய்யப்பட்டது. இது 1977 ஆம் ஆண்டில் பதிவான விலையை விட 65 சதவிகிதம் உயர்வானதாகும். அனுகூலமான க.த.இ. விலைகளின் காரணமாக, ஏற்றுமதிகளின் அளவு 22 சதவிகிதம் குறைந்த போதிலும், கொக்கோ ஏற்றுமதி மூலம் மொத்தம் 5 கோடி ரூபா சம்பாதிக்கப்பட்டது. இது 1977 ஆம் ஆண்டில் சம்பாதிக்கப்பட்டதை விட 31 சதவிகிதம் அதிகமாகும். (அட்டவணை 2).

1974 ஆம் ஆண்டிலிருந்து கோப்பி விலைகளில் காணப்பட்ட ஏறுமுகப் போக்கு 1978 ஆம் ஆண்டிலும் நீடித்தது. 1978 ஜனவரியில் பிரேசில் (உலகின் மிகப் பெரிய உற்பத்தி நாடு) நாட்டி

### அட்டவணை 1

### நாளுவித விளைபொருள்கள் ஏற்றுமதியின் அளவு 1977 – 1978

(மெட்ரிக் தொன்)

| பண்டம் | ஏற்றுமதியான அளவு 1977 | மொத்த ஏற்றுமதியில் சதவிகிதம் | ஏற்றுமதியான அளவு 1978 | மொத்த ஏற்றுமதியில் சதவிகிதம் | 1977 க்கு மேல் 1978 இன் ஏற்றுமதி சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| கொக்கோ | 1,323,64 | 7.49 | 1,039,74 | 4.09 | — 21.45 |
| கோப்பி | 985,66 | 5.58 | 2,319,16 | 9.13 | —135.29 |
| பப்பாசிப்பால் (டப்ளியூ) | 35,64 | 0.20 | 27,15 | 0.11 | — 23.82 |
| பப்பாசிப்பால் (பி) | 5,09 | 0.03 | 14,95 | 0.06 | —193.71 |
| பாக்கு | 6,025,00 | 34.11 | 4,442,77 | 17.48 | — 26.26 |
| இலவம் பஞ்சு | 782,70 | 4.43 | 479,02 | 1.89 | — 38.80 |
| எள் | 8,506,28 | 48.16 | 17,087,60 | 67.25 | —100.88 |
| மொத்தம் | 17,664.01 | 100.00 | 25,410,39 | 100.00 | — 43.85 |

ஆதாரம்: இலங்கைச் சுங்கப்பகுதியின் விவரத் திரட்டு

லிருந்து கிடைத்த அறிக்கைகள் பெரும் ஏற்றுமதி விற்பனைகளை எடுத்துக் காட்டின. அதே காலத்தில், கப்பற்றுறையில் நடைபெற்ற வேலை நிறுத்த மொன்றின் விளைவாகக் கொழும்பில் கோப்பி தடுத்து நிறுத்தப்பட்டதையடுத்து, லண்டன் சந்தை விலைகள் உயர் மட்டங்களை அடைந்தன. ரூபஸ்டா கோப்பிக்கு முடிவு விலையாக மெட்ரிக் தொன் ஒன்றுக்கு 1,980 பவுண் கிடைத்தது. நடப்பிலிருந்த ''குறைந்த'' உலகச் சந்தை விலைகளை உயர்த்துவதற்காக, சந்தையிலிருந்து விலகுமாறு மற்றும் இலத்தின் அமெரிக்க நாடுகளைத் தூண்ட பிரேசில் முயன்று கொண்டிருந்ததாக இடையறாத வதந்திகள் உலாவின. இச் செல்வாக்குகள் பிரயோகிக்கப்பட்ட போதிலும், உள்நாட்டுச் சந்தையில் 1978 ஆம் ஆண்டில் கோப்பிக்கு வருடாந்த சராசரி க. த. இ. விலையில் 9 சதவிகித அதிகரிப்பு மட்டுமே பதிவாயிற்று. அஃதாவது, 1977 ஆம் ஆண்டின் விலை மட்டங்களுக்கு மேல் 50 கிலோவுக்கு 1,837 ரூபா வீதம் கிடைத்தது. உயர்ந்த க. த. இ. விலையுடன் ஏற்றுமதிகளின் அளவும் அதிகரித்ததால் (1977 ஆம் ஆண்டில் விட 135 சதவிகிதம் அதிகம்) கோப்பியிலிருந்து ஏற்றுமதிச் சம்பாத்தியம் குறிப்பிடத்தக்கவாறு அதிகரித்தது. 1977 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட 3.3 கோடி ரூபாவுடன் ஒப்பிடுகையில், மொத்தம் 8.5 கோடி ரூபா ஈட்டப்பட்டது. இது 150 சதவிகிதத்துக்கு மேற்பட்ட அதிகரிப்பாகும். இதன் பயனாக, மொத்த நாளுவித ஏற்றுமதிகளின் சம்பாத்தியத்தில் கோப்பி இரண்டாவது பெரும் பங்கு கொண்டது; இச் சம்பாத்தியத்தில் கோப்பி 24 சதவிகிதப் பங்கு பெற்றது. அட்டவணை 2ல் 1977 ஆம் ஆண்டிலும், 1978 ஆம் ஆண்டிலும் நாளுவித விளைபொருள்களின் ஏற்றுமதி மூலம் சம்பாதிக்கப்பட்ட வருமான விவரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை காட்டுவதுபோல, 1978 ஆம் ஆண்டில் மற்றெல்லாப் பண்டங்களும் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் உயர் மட்டங்களைப் பதிவு செய்துள்ளன. இவற்றுள் மிகக் குறிப்பிடத்தக்கவை பழுப்புப் பப்பாசிப்பால், பாக்கு, எள் ஆகியனவாம். இவற்றில் 150 சதவிகிதத்துக்கு மேற்பட்ட மட்டங்கள் சாதிக்கப்பட்டன. உயர் க.த.இ. விலைகளே இச்சிறந்த செயற்பாட்டுக்குப் பிரதான காரணம். குறிப்பாக வெள்ளைப் பப்பாசிப்பால்,

### அட்டவணை 2

### நாளுவித விளைபொருள்களின் ஏற்றுமதிப் பெறுமதி 1977 - 1978

(கோடி ரூபா)

| பண்டம் | ஏற்றுமதிகளின் பெறுமதி 1977 | மொத்தத்தில் சதவிகிதம் | ஏற்றுமதிகளின் பெறுமதி 1978 | மொத்தத்தில் சதவிகிதம் | 1977க்கு மேல் 1978 இன் பெறுமதி சதவிதம் |
|---|---|---|---|---|---|
| கொக்கோ | 3.8 | 28.16 | 5.2 | 14.34 | — 31.19 |
| கோப்பி | 3.3 | 24.11 | 8.5 | 24.32 | — 31.10 |
| பப்பாசிப்பால் (டப்ளியு) | 0.8 | 5.81 | 0.9 | 2.57 | — 12.63 |
| பப்பாசிப்பால் (பி) | 0.1 | 1.16 | 0.4 | 1.15 | —150.63 |
| பாக்கு | 1.3 | 9.70 | 3.9 | 11.25 | —194.99 |
| இலவம் பஞ்சு | 0.2 | 1.77 | 0.3 | 1.02 | — 46.31 |
| எள்ளு | 4.3 | 29.30 | 15.8 | 45.36 | —293.68 |
| மொத்தம் | 13.8 | 100.00 | 35.0 | 100.00 | —154.28 |

ஆதாரம்: இலங்கைச் சுங்கப்பகுதித் திரட்டு.

### அட்டவணை 3

### வருடாந்த சராசரி க. வ. ஆன விலைகள் 1974 - 1178

(ரூபா கணக்கில்)

| பண்டம் | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 | 1977 க்கு மேல் 1978 இன் விலை சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| கொக்கோ .. .. .. .. | 525.00 | 391.00 | 590.00 | 1,466.00 | 2,415.00 | — 64.74 |
| கோப்பி கிலோ .. .. .. | 247.00 | 381.00 | 717.00 | 1,685.00 | 1,837.00 | — 9.03 |
| பப்பாசிப்பால் வெள்ளை (கிலோ ஒன்றுக்கு) .. | 85.00 | 55.00 | 56.0 | 262.00 | 332.00 | — 26.66 |
| பப்பாசிப்பால் பழுப்பு .. .. .. | 59.00 | 30.00 | 30.00 | 314.00 | 268.00 | — 14.66 |
| பாக்கு (மெட்ரிக் தொன் ஒன்றுக்கு) .. | 1,093.00 | 1,076.00 | 1,193.00 | 2,217.00 | 8,870.00 | —300.12 |
| இலவம் பஞ்சு .. .. .. | — | 1,333.00 | 1,395.00 | 3,117.00 | 7,453.00 | —139.10 |
| எள் .. .. .. | — | 3,177.00 | 4,158.00 | 4,754.00 | 9,299.00 | — 95.60 |

ஆதாரம்: இலங்கைச் சுங்கப் பகுதித் திரட்டு.

பாக்கு, இலவம் பஞ்சு ஆகியன சம்பந்தமாக 1978 ஆம் ஆண்டில் ஏற்றுமதி அளவுகளில் 20 சத விகிதத்துக்கு மேற்பட்ட குறைவுகள் பதிவாயின. எள்ளின் செயற்பாடு ஈண்டு விசேஷமாகக் குறிப்பிடப்பட வேண்டும். ஏற்றுமதி அளவு 100 சதவிகிதத்துக்கு மேல் அதிகரித்ததுடன் க.த.இ. விலையும் 96 சதவிகிதம் அதிகரித்ததன் காரணமாக, எள்ளிலிருந்து கிடைத்த சம்பாத்தியம் எப்போதுமில்லாத உயர் அளவான 15.9 கோடி ரூபாவை அடைந்தது. இது, 1977 ஆம் ஆண்டில் கிடைத்ததை விட கிட்டத்தட்ட 300 சதவிகிதம் அதிகம் என்பதுடன், 1978 ஆம் ஆண்டுக்குரிய நாறுவித ஏற்றுமதிகளின் பட்டியலில் முன்னணி வகிப்பதற்காக மொத்தச் சம்பாத்தியத்தில் 45 சதவிகிதத்துக்கு மேற்பட்ட தொகையையும் உதவியது. அட்டவணை 3 இல் 1974 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இப் பண்டங்கள் பெற்ற வருடாந்த சராசரிகப் பற்றளம் வரையிலான விலைகள் தரப்பட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டில் மொத்த நாறுவித ஏற்றுமதிச் சம்பாத்தியம், 1977 ஆம் ஆண்டின் 13.8 கோடி ரூபாவுடன் ஒப்பிடுகையில் 35 கோடி ரூபாவாக இருந்தது. இது 150 சதவிகிதத்துக்கு மேற்பட்ட பிரமாண்டமான அதிகரிப்பாகும். எனினும், 1977 ஆம் ஆண்டில் ரூபாவின் மதிப்பிறக்கத்தை முன்னிட்டு, இங்கு எச்சரிக்கையடைய வேண்டி இருக்கின்றது. நாணய மாற்று விகித மாற்றங்களின் விளைவுகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்கும் எஸ். டி. ஆர். (விசேஷ எடுப்புரிமைகள்) மதிப்புக்களின்படி, சம்பாத்தியம் 35 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது. அஃதாவது, 1977 ஆம் ஆண்டில் சம்பாதிக்கப்பட்ட எஸ். டி. ஆர். 1.3 கோடிக்கு மாறாக 1978 ஆம் ஆண்டில் 1.8. கோடி எஸ். டி. ஆர். சம்பாதிக்கப்பட்டது. (அட்டவணை 4). இங்கு மீண்டும் கவனிக்கத்தக்க தென்னவெனில், ரூபாக் கணக்கில் சகல நாறுவித விளைபொருள் பண்டங்களும் சம்பாத்தியத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்த அதே வேளையில், எஸ். டி. ஆர். கணக்கில், கோப்பி பழுப்புப் பப்பாசிப்பால், பாக்கு, எள் ஆகிய பண்டங்கள் மட்டுமே சம்பாத்தியத்தில் அதிகரிப்பைப் பதிவுசெய்தன என்பதாகும்.

எல்லாவற்றையும் கவனிக்குமிடத்து, 1978 ஆம் வருடம் உள்நாட்டு நாறுவித விளைபொருள் ஏற்றுமதிகளுக்கு — குறிப்பாகக் கோப்பிக்கும் எள்ளுக்கும்— நல்ல வருடமாக விளங்கியுள்ளது.

### அட்டவணை 4

### பத்துலட்சம் எஸ். டி. ஆர். கணக்கில் நாறுவித ஏற்றுமதிச் சம்பாத்தியம் 1977 - 1978

| பண்டம் | 1977 | 1978 | 1977 க்கு மேல் 1978 இன் சத விகித |
|---|---|---|---|
| கொக்கோ (50 கிலோ) .. .. .. .. | 3.72 | 2.56 | — 31.18 |
| கோப்பி .. .. .. .. | 3.19 | 4.35 | — 36.36 |
| பப்பாசிப்பால் வெள்ளை .. .. .. | 0.77 | 0.46 | — 40.26 |
| பப்பாசிப்பால் பழுப்பு .. .. .. .. | 0.15 | 0.20 | — 33.33 |
| பாக்கு .. .. .. .. | 1.21 | 2.01 | — 57.03 |
| இலவம் பஞ்சு .. .. .. .. | 0.23 | 0.18 | — 21.74 |
| எள் .. .. .. .. | 3.87 | 8.11 | —109.56 |
| மொத்த .. .. .. .. | 13.21 | 17.87 | — 35.33 |

ஆதாரம்: திரட்டப்பட்ட புள்ளிவிவரங்கள்

# வெளிநாட்டு வர்த்தகம்—1978

1977 ன் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள், ''வெளி நோக்கிய'' பொருளாதார வளர்ச்சிக்குரிய முன்னுயத்தமாகக் கருதப்படுகின்றது. இந் நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஸ்ரீ லங்காவில் ஒப்பீட்டுரீதியில் ''திறந்த பொருளாதாரம்'' இடம்பெறலாயிற்று எனலாம். பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தூண்டுதலளிக்கும் நோக்குடன், வர்த்தகம், நாணய மாற்று ஆகிய நடவடிக்கைகளில் இருந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. இறக்குமதி, வெளிநாட்டு நாணயமாற்றுத் தளர்வு என்பவற்றின் உடனடி விளைவுகளை, 1977 நவம்பரின் பின்னர் இறக்குமதி பெருமளவிற்கு அதிகரித்ததன் மூலம் தெளிவாகக் காணமுடிந்தது.

கொள்கை மாற்றங்களுக்கேற்ப நிலைமையைச் சரிப்படுத்தவும், இணங்கிச் செல்வதற்கும் ஏற்றுமதித் துறை நீண்ட கால இடைவெளியை அனுபவிப்பது இயற்கையாகும். இவ்விரு போக்குகளும் இணைந்தமையால் ஏற்பட்ட விளைவு யாதெனில் 1978ல் ஸ்ரீ லங்காவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட பாரிய பற்றுக் குறைவாகும்.

தொடர்ந்து இரு வருடங்களாக ஸ்ரீ லங்கா மிகை வர்த்தக நிலுவையை அனுபவித்தது. ஆனல், குறைந்த ஏற்றுமதி வளர்ச்சி விகிதாசாரத்துடன் இணைந்து, இடம்பெற்ற அதிகரித்த இறக்குமதியின் விளைவினுல் 1978 ல் குறிப்பிடத்தக்களவு வர்த்தகக் குறை ஏற்பட்டது. சுங்கப் புள்ளிவிபரங்களின் பிரகாரம் 1978 ல் ஏற்றுமதி வருமானம் 3 சதவீதத்தினுல் அதிகரித்த அதே வேளை, இறக்குமதி 23 சதவீதத்தினுல் அதிகரித்தது. ரூபா வடிவில் நோக்குமிடத்து, ஏற்றுமதிப் பெறுமானம் ரூ. 1320.6 கோடியாகவும், இறக்குமதி 1536.6 கோடியாகவும் இருந்தது. இதன் பிரகாரம் வர்த்தக நிலுவை ரூ. 145.7 கோடியாகும்.

இத் தரவுகளை சென்ற வருடத்துடன் ஒப்பிடுமிடத்து, 1978 ல் பதிவாகியுள்ள ரூபாய்ப் பெறுமானம் அபரிமிதமானதாகத் தென்படுகின்றது. 1977 நவம்பரில் ஏற்படுத்தப்பட்ட நாணய மாற்றுச் சீர்திருத்தம் ரூபாய் நாணயப் பெறுமதியிறக்கத்திற்கு வழிவகுத்தமையே இதற்குக் காரணமாகும். இதன் விளைவினுல் ஏற்றுமதி அல்லது இறக்குமதிப் பெறுமானத்தை டொலர் அல்லது பவுணில் மதிப்பீடு செய்யுமிடத்து பெறுமதி உயர்வாகவிருந்தது. ஆகையால், வர்த்தகத் தரவுகளின் பகுப்பாய்விற்கு மிக உறுதியான கணக்கீட்டு அலகொன்றின் பாவனை மத்திய வங்கியினுல் சிபாரிசு செய்யப்பட்டது. விசேட எடுப்பனவு உரிமை அல்லது எஸ். டி. ஆர். எனப்படும் இக் கணக்கீட்டு அலகானது சர்வதேச நாணய நிதியின் கொடுக்கல் வாங்கல்களின் பொழுது அங்கத்துவ நாடுகளினுல் பொதுப்பட ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு அலகாகும். இக் கணக்கீட்டு அலகினைப் பிரயோகிப்பதன் மூலம் 1978 ம் வருடத்திற்கான ஏற்றுமதி, இறக்குமதித் தரவினை சென்ற வருடங்களுடன் பயன்மிக்கதாகவும், யதார்த்த ரீதியிலும் ஒப்பீடு செய்ய முடிகின்றது.

1978 ற்கான எமது ஏற்றுமதி, இறக்குமதிப் பெறுமானம் வி. எ. உ. வடிவில், அட்டவணை 1 ல் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது. 1977 ல் 659 மில்லியன் வி. எ. உ யிலிருந்து 1978 ல் 676 மில்லியன் வி. எ. உ. ஆக எமது ஏற்றுமதி எல்லை அதிகரிப்பினைக் கூடுள்ளது. மறுபுறத்தில் இதே காலப்பகுதியில் இறக்குமதி 630 மில்லியன் எஸ். டி. ஆரிலிருந்து 774 மில்லியன் எஸ். டி. ஆர். ஆக அதிகரித்துள்ளது. ஆகையால் சென்ற வருடகால மிகை நிலை மறைந்து, 100 மில்லியன் எஸ். டி. ஆர். குறைநிலை தோன்றியுள்ளது. சென்ற ஐந்து வருடங்களிற்கான ஒப்பீட்டு ரீதியிலான தரவுகளும் அட்டவணை 1 ல் தரப்பட்டுள்ளன.

ஏற்றுமதி, இறக்குமதி விலைகள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியிலான மாற்றத்தைக் கணிப்பீடு செய்யும் வருடாந்த வர்த்தக மாற்றுச் சுட்டெண், முன்னைய வருடங்களில் அடைந்திருந்த மிகக் குறைந்த நிலையிலிருந்து உயர்வடைந்தமையால் 1977 ல் சாதகமான நிலையைக் காட்டி நிற்கின்றது. வர்த்தக மாற்று விகிதச் சுட்டெண் 80 (1967 — 100) ஆகவிருந்ததிலிருந்து இப்போக்கு தொடர்ந்துள்ளது. ஆனல், இன்னும் ஸ்ரீ லங்காவிற்குப் பாதகமாகவேயுள்ளது. ஏற்றுமதிப் பெறுமானத்தை விடவும் இறக்குமதிப் பெறுமானம் மிக வேகமாக அதிகரித்துச் செல்வதனுல், 100க்குக் குறைவான சுட்டெண் ஒரு நாட்டின் வர்த்தகமாற்று விகிதாசாரத்தின் சீர்குலைவினைக் காட்டுகின்றது. இச் சந்தர்ப்பங்களில் மோசமான வர்த்தக நிலுவையைத் தடைப்படுத்த ஏற்றுமதித் தொகையதிகரிப்பு போதுமான

அட்டவணை 1

வெளிநாட்டு வர்த்தகக் கணக்கு 1974—78

(ரூபாய் மில்லியனில்)

(எஸ்.டி.ஆர். பெறுமானம் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.)

| | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் ரூ. மில்லியன் .. .. | 3,472 (432) | 3,933 (466) | 4,815 (495) | 6,638 (659) | 13,206 (676) |
| இறக்குமதிகள் ரூ. மில்லியன் .. .. | 4,554 (569) | 5251 (477) | 4,645 (477) | 6,007 (630) | 14,663 (774) |
| வர்த்தக நிலுவை: ரூ. மில்லியன் .. .. | 1,082 (—137) | 1,318 (—151) | 170 (% 18) | (% 29) | 1,457 (— 98) |
| வர்த்தக மாற்று விதொசாரச் சுட்டெண்(1967—100) .. | 58 | 46 | 62 | 81 | 80 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 2

**ஏற்றுமதிகள் (1974–78)**
(ரூபாய் மில்லியனில்)

| | | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|---|
| 1. | தேயிலை .. .. | 1,360 | 1,932 | 2,100 | 3,503 | 6,401 |
| 2. | இறப்பர் .. .. | 738 | 654 | 890 | 931 | 2,021 |
| 3. | தேங்காய் .. .. | 397 | 397 | 382 | 335 | 972 |
| 4. | சிறு விவசாயப் பயிர்கள் .. | 267 | 202 | 279 | 452 | 902 |
| 5. | கைத்தொழில் ஏற்றுமதிகள் .. | 492 | 498 | 761 | 919 | 1,891 |
| 6. | இரத்தினக்கல் .. .. | 109 | 180 | 261 | 298 | 531 |
| 7. | ஏனையவை .. .. | 109 | 70 | 142 | 200 | 488 |
| | மொத்த ஏற்றுமதிகள் .. | 3,472 | 3,933 | 4,815 | 7,638 | 13,206 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தாக அமையாது. ஏற்றுமதிகளின் குறைந்த விலைகளும், குறுங்காலத்தில் ஒப்பீட்டுரீதியில் நிரம்பல் நெகிழ்ச்சியற்ற தன்மையும் காரணமாக இறக்குமதி விலைகள் அதிகரிக்கின்ற சமயத்தில் இறக்குமதித் தளர்வினை மேற்கொண்டமை உயர்ந்த வர்த்தக நிலுவைக்குக் காரணமாகியது.

குறிப்பாக தேயிலையின் குறைந்த விலையே 1978 ல் ஏற்றுமதி வருமானக் குறைவிற்குக் காரணமாகவிருந்தது. இவ்விலைக் குறைவு அதிகரித்த ஏற்றுமதித் தொகையின் பங்களிப்பினையும் குறைத்து விட்டது. எஸ். டி. ஆர் வடிவில் நோக்குமிடத்து 1978ல் தேயிலையின் ஏற்றுமதி வருமானம் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உலகச் சந்தையில் இறப்பரின் விலை 11 சதவீதத்தினால் அதிகரித்தமையால் இறப்பர் ஏற்றுமதி வருமானத்தின் எஸ். டி. ஆர் பெறுமானம் 11 சதவீதத்தினால் அதிகரித்தது.

தென்னைச் செய்கை மீட்சி பெற்று உற்பத்தி அதிகரித்தமையால் 1978 ல் ஏற்றுமதிப் பெறுமானம் பெறுமளவிற்கு அதிகரித்தது. தென்னை ஏற்றுமதி விலை வீழ்ச்சியுற்ற பொழுதிலும் 1978 ல் பிரதான மூன்று பிரதான தெங்கு உற்பத்தியினால் பெற்ற ஏற்றுமதி வருமானத்தின் எஸ். டி. ஆர் பெறுமானம் 550 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது. எவ்வாறாயினும், ஸ்ரீ லங்காவின் ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை அரைப் பங்கினை வகிப்பதால், ஏற்றுமதியில் அதன் மோசமான பங்களிப்பு கவனத்தை யீர்க்கத்தக்கதாகும்.

சென்ற தசாப்தத்தில் ஏற்றுமதி அமைப்பினைப் பன்முகப்படுத்தும் வகையில் பல்வேறு மரபுரீதியற்ற ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது சிறு விவசாய ஏற்றுமதிகள், கைத்தொழில் ஏற்றுமதிகள், இரத்தினக்கல் ஏற்றுமதி என்பன இன்று ஸ்ரீ லங்காவின் ஏற்றுமதி வருமானத்தில் 25 சதவீத பங்கினை வகிக்கின்றன. 1978ல் கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமானம் (பெற்றோலிய உற்பத்தியும் உட்பட) 1891.

அட்டவணை 3

**இறக்குமதிகள் 1974–78**
(ரூபாய் மில்லியனில்)

(சதவீதப் பங்கு அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது)

| | | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|---|
| | | (47) | (50) | (36) | (42) | (38) |
| 1. | நுகர்வுப் பொருட்கள் .. .. .. | 2,138 | 2,651 | 1,689 | 2,534 | 5,594 |
| | (அ) உணவும் குடிவகையும் .. .. | 1,950 | 2,520 | 1,491 | 2,181 | 4,103 |
| | (ஆ) புடைவை .. .. .. | 59 | 20 | 49 | 150 | 531 |
| | (இ) நுகர்வுப் பொருட்களும் ஏனையவையும் .. | 129 | 111 | 149 | 203 | 99 |
| | | (42) | (36) | (49) | (4) | (38) |
| 2. | நடுத்தரப் பொருட்கள் .. .. .. | 1,920 | 1,888 | 2,259 | 2,648 | 5,51 |
| | (அ) உரம் .. .. .. | 221 | 208 | 99 | 51 | 252 |
| | (ஆ) பெற்றோலியம் .. .. .. | 905 | 872 | 1,164 | 1,441 | 2,403 |
| | (இ) ஏனையவை .. .. .. | 794 | 808 | 996 | 1,156 | 2,936 |
| | | (10) | (12) | (14) | (12) | (23) |
| 3. | மூலதனப் பொருட்கள் .. .. .. | 457 | 653 | 641 | 746 | 3,367 |
| | (அ) கைபுடப் பொருட்கள் .. .. | 147 | 169 | 104 | 129 | 150 |
| | (ஆ) போக்குவரத்துச் சாதனங்கள் .. .. | 91 | 116 | 175 | 232 | 988 |
| | (இ) இயந்திர சாதனங்கள் .. .. .. | 183 | 322 | 364 | 286 | 1,846 |
| | | (1) | (2) | (1) | (2) | (1) |
| 4. | வகுக்கப்படாதவை .. .. .. | 39 | 59 | 54 | 79 | 110 |
| | மொத்தம் .. .. .. | 4,554 | 5,251 | 4,645 | 6,007 | 14,663 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கோடி ரூபாவாக அல்லது 10 கோடி எஸ்.டி. ஆர் ஆககு அமைந்தது. இது மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 14 சதவீத அதிகரிப்பாகும். மேலும், கைத்தொழில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்த அதே வேளை, இரத்தினக் கல் ஏற்றுமதி வருமானம் எஸ். டி. ஆர் வடிவில் 10 சதவீதத்தினுலும், சிறு விவசாய ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமானம் எஸ். டி. ஆர் வடிவில் 13 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தது. 1978 ல் மேற்கொள்ளப்பட்ட நாணயமாற்று ஒழுங்குகளின் காரணத்தால், இவ்வேற்றுமதிகளின் பெறுமானம் ரூபா வடிவில் அதிகரிப்பினைக் காண்பிக்கும். ஆனல், ஏற்கனவே கூறியது போல் வர்த்தகச் சாதனைகளை ரூபா வடிவில் அளவிடு செய்வது பொருத்தமற்றதாகும்.

பல வருடகால நிர்வாகக் கட்டுப்பாடுகள், கொடுப்பனவு, நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளின் பின்னர், 1977 நவம்பரில் அரசாங்கம் அறிமுகம் செய்த புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாக வெளிநாட்டு வர்த்தகம் சுதந்திரமாக இயஙக ஆரம்பித்துள்ளது. பெரும்பாலான நுகர்வுப் பொருட்கள், நடுத்தரப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் (ரூ. 700,000 வரை) என்பன அரசாங்க அனுமதியின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. இவ்விறக்குமதித் தளர்வின் காரணமாக இறக்குமதிப் பெறுமானம் வேகமாக அதிகரித்தது. இலங்கை மத்திய வங்கியினுல் மதிப்பீடு செய்யப்பட்ட இறக்குமதிப் பெறுமானச் சுட்டெண் (1967 — 100) 1978 ல் 132 ஐ அடைந்ததன் மூலம், 1977 கால நிலையை விடவும், 36 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. விலை, தொகை ஆகிய இரண்டினதும் அதிகரிப்புக் காரணமாக இறக்குமதிப் பெறுமானமும் அதிகரித்தது. 1978 ன் 1466.3 கோடி ரூபா இறக்குமதிப் பெறுமானம் 77.4 கோடி எஸ். டி. ஆர்களாகும். 1977 ல் இது 63 கோடி எஸ். டி. ஆர்களாகும். 1978 ல் இது 23 சதவீத அதிகரிப்பினைக் காட்டி நிற்கின்றது.

எவ்வாருயினும், இறக்குமதி வளர்ச்சியானது பல்வேறு வகையான இறக்குமதிகளின் பங்களிப்புடன் ஓர் அசைவினைக் காட்டியது. மூலதனப் பொருட்களினதும், முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதி அதிகரித்திருப்பதனை இறக்குமதிப் பொருட்களின் விவரம் தெளிவாகக் காட்டியது. 1977-1978 காலக் கட்டத்தில் வேதனப் பொருட்களின் பங்கு 12 இலிருந்து 23 சதவீதத்தினுல் அல்லது இரு மடங்கு அதிகரித்துள்ளது. இதில் இயந்திரங்களும், இயந்திர உதிரிகளும் பிரதானமாகும். 1978 ல் மூலதனப் பொருட்களும், நடுத்தரப் பொருட்களும் மொத்த இறக்குமதியில் 70 சதவீதமாகும். இறக்குமதித் தளர்வுக் கொள்கையிலிருந்து பொருளாதாரம் அடைகின்ற திருப்திகரமான அபிவிருத்தியாக இது தென்படுகின்றது. மூலதனப் பொருட்களும், நடுத்தர இறக்குமதிகளும் (ஏனைய காரணிகள் சாதகமாக அமையின்), ஒரு கால இடைவெளிக்குப் பின்னர் உற்பத்தி யதிகரிப்பினை ஏற்படுத்தி நீண்டகால ரீதியில் அபிவிருத்தியை ஏற்படுத்தும்.

---

## பொருளாதாரம்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு வரும் மற்றும் திட்டங்கள் யாவையெனில், கோதுமை மா மீது நுகர்வோருக்கு வழங்கப்படும் மான்ய உதவியைக் குறைப்பதும், அரிசிப் பங்கீட்டுக்குப் பதிலாக உணவுக் கூப்பன்களை ஏற்படுத்துவதும், இதனைத் தொடர்ந்து இன்னெரு சுற்று கூலிகளையும் சம்பளங்களையும் அதிகரிப்பதுமான சாத்தியக் கூறுகளாகும். எனினும், பெரும்பாலான நடவடிக்கைகள் இந்த மான்ய உதவிகளைப் பொருளாதாரம் எந்த அளவுக்குத் தாங்கும் என்பதைப் பொறுத்திருக்கும். ஆனல், சில முக்கியமான உணவுப் பொருள்கள் சம்பந்தமாக எதிர்பாரா நிலைமையைச் சமாளிப்பதற்கு அதிக அளவில் கையிருப்பைக் கொண்டிருக்கும் அரசாங்கக் கொள்கையினுலும், உள்நாட்டுச் சந்தையில் அரிசி வழங்கல் நிலைமை விருத்திபெற்றிரு தாலும், மிகப் பெரும்பாலான உணவுப் பொருள்களின் விலைகள் இவ்வருடம் செங்குத்தாக அதிகரிப்பது சாத்தியமில்லை.

## வர்த்தகம்

வர்த்தக நிலுவை இவ்வருடம் தொடர்ந்து பற்றுக்குறையையே காட்டி வரவேண்டும். இப் பற்றுக்குறையின் பரிமாணம் கடந்த வருடத்தைவிட பெரிதாயிருப்பது சாத்தியம். இவ் வருடத்தின் முதல் இரு மாதங்களில் இறக்குமதிச் செலவு ஏற்றுமதிச் சம்பாத்தியத்தைவிட 114 கோடி ரூபா அதிகமாயிருந்தது. இவ்வருடம் மொத்த இறக்குமதிச் செலவு கடந்த வருடத்தை விட அதிகமாயிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதிச் சம்பாத்தியமும் அதிகரிக்க வேண்டும்; ஆனல் இறக்குமதிச் செலவு உயர்வுக்குப் பின்னலேயே இருக்கும். தேயிலை விலைகளில் எதிர்பார்க்கப்படும் இறக்கம் தேயிலை ஏற்றுமதிச் சம்பாத்தியத்தை மோசமாகப் பாதிக்க வேண்டும். ஆனல், இது ரப்பரிலிருந்து கிடைக்கும் அதிக சம்பாத்தியத்தினுல் ஈடு செய்யப்படுவது சாத்தியம். 1978 ஆம் ஆண்டிலும் 1979 ஆம் ஆண்டின் முதற்கால் பகுதியிலும் காணப்பட்ட போக்கு ஆண்டின் எஞ்சிய பகுதியிலும் நீடிக்குமாயின், நவரத்தினங்களிலிருந்தும் தைத்த ஆடைகளிலிருந்தும் பெறப்படும் ஏற்றுமதிச் சம்பாத்தியம் பெரும் அதிகரிப்பைப் பதிவு செய்ய வேண்டும்.

கடந்த வருட உண்மையான ஏற்றுமதிப் பெறுமதியான 41.4 கோடி ரூபாவுக்கு மாருக, இவ்வருடம் உடை ஏற்றுமதிகளுக்கான உத்தியோக பூர்வமான இலக்காக 75 கோடி ரூபா குறிக்கப்பட்டுள்ளது. முதற் காலாண்டில் உடைகளின் ஏற்றுமதிப் பெறுமதி 14.2 கோடி ரூபாவாகும். 1979 ஆம் ஆண்டின் முதற் கால் பகுதியில் இலங்கைக்கு வந்துசேர்ந்த உல்லாசப் பிரயாணிகளின் தொகை (77,592), 1978 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் வந்து சேர்ந்தவர்களின் தொகைக்கு மேல் 18 சதவிகித அதிகரிப்பைக் காட்டியது. உல்லாசப் பிரயாணிகள் வருகையிலிருந்து கிடைக்கும் சம்பாத்தியம் இவ்வருடம் திட்டமாக உயரவேண்டும் என்பதற்கு இது ஓர் அறிகுறி.

வர்த்தகப் பற்றுக்குறையின் பெரும் பகுதிக்கு வெளிநாட்டுக் கடன் வாங்கல்கள் மூலமும், கடந்த வருடம் சேர்க்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் மீது உண்டி எழுதுவதன் மூலமும் நிதியளிக்கப்படும். 1978 ஆம் ஆண்டு முடிவில் 750 கோடி ரூபாவாக இருந்த வெளிநாட்டுச் சொத்துக்களில் இவ்வருடத்தின் முதலிரு மாதங்களில் 30 கோடி ரூபா குறைந்தது.

# சிக்கனத்தை நோக்கி நகரும் மேற்கத்தைய மனோபாவம்

## புதிய பொருளாதார ஒழுங்குகளின் எழுச்சி பற்றிய ஒரு பரிசீலனை

பெருந்தொகையான அமெரிக்கர் ''வெளிக்கு எளிமையாகவும், உள்ளுக்கு வளமாகவும்'' இருக்கும் வாழ்க்கை முறையொன்றை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

— கார்டர் ஹெண்டர்சன்

மேற்கத்திய நாடுகளில் விரும்பப்படும் ''நல்வாழ்க்கை'' என்பது என்னவென்பதைப் பற்றிய மனோபாவங்களில் இன்று ஓர் ஆழ்ந்த மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. மிக முன்னேற்றமடைந்த மேற்கத்திய நாடான அமெரிக்கா அதிகமான உலகாயத பண்டங்களைக் கோரும் முந்திய மனோபாவத்தைக் கைவிட்டுக் குறைந்த உலகாயத பண்டங்களைக் கோரும் மனோபாவத்துக்கு மாறியுள்ளதாகத் தோன்றுகிறது. அமெரிக்கா, பொதுவாக மேற்கத்திய உலகம், பொருளீட்டும் முயற்சியின் மீதும், ''வீண் ஜம்பமாக அயல்வீட்டாரின் வாழ்க்கைத் தரத்துடன் போட்டியிடல்'' போன்ற குறிப்பு வசனங்களால் சில சமயங்களில் திருஷ்டாந்தப்படுத்தப்படும் புரொடெஸ்டாந்து நீதி நெறி மீதும் கட்டியெழுப்பப்பட்டது. விஞ்ஞான - பொது விவகார சஞ்சிகையான ''அணு விஞ்ஞானிகளின் அறிக்கைப் பத்திரம்'' (பதிப்புரிமை — அணு விஞ்ஞானிகளுக்குரிய கல்வி ஸ்தாபனம்) வழங்கிய அனுமதியுடன் நாம் இங்கு மறு பிரசுரம் செய்யும் கட்டுரை புதிதாக உருவாகிவரும் அமெரிக்க மனோபாவங்களில் சிலவற்றைச் சுருக்கித் தருகின்றது.

கடந்த 200 வருடகால மேற்கத்திய கைத்தொழில் நாகரிகத்தின் ஊகங்கள் சிலவற்றைக் கைவிடும் இம் மனப்போக்கு, அமெரிக்காவுக்கு மட்டுமன்றி மூன்றாவது உலகுக்கும் அத்துடன் சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் அர்த்தபுஷ்டியுள்ளதாகும். ''சோஷலிஸம் சோவியத் வல்லமைக்குச் சமம் — சக்தி மின் வலு'' என்னும் லெனினிஸ்ட் சுலோகத்தின் கீழோ அல்லது ''நாலு நவீனமயமாக்கல் திட்டங்கள்'' என்னும் மாவோக்குப் பிற்பட்ட சுலோகத்தின் கீழோ சோஷலிஸ்ட் நாடுகளின் குறிக்கோள், பொருள் உற்பத்தியில் மேற்கைப் பின்பற்றுவதும், மேற்குக்குச் சமமானதும், மேற்கை முந்திச் செல்வதுமான தத்துவத்தையே எப்பொழுதும் மறைமுகமாகக் குறித்துள்ளது. சோஷலிஸ்ட் உலகம் மேற்கிலுள்ள சமூக உற்பத்தி ஸ்தாபனங்கள் யாவற்றையும் நிராகரிக்காவிட்டாலும் சிலவற்றை நிராகரித்துள்ளது. ஆனால், மேற்கின் உற்பத்திப் பொருள்களை நிராகரிக்கவில்லை. கார்கள், விமானங்கள், வர்ண டெலிவிஷன் அல்லது நேர்த்தியான உடைகள் எதுவாயிருந்தாலென்ன மேற்கத்திய உற்பத்திப் பொருள்கள் கிழக்கு ஐரோப்பாவின் ஆசையைத் தூண்டியுள்ளன. ஆதலால், பொருள் தேடும் ஒரு போக்கை அமெரிக்கா நிராகரித்துள்ளமை, அந்நாட்டைப் பின்பற்றும் இந்நாடுகள் சிலவற்றில் பலமான தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளது. மூன்றாம் உலகத்தைப் பொறுத்தவரை, முற்கூறியது உண்மையாகும்; சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்து வாய்ச் சாலங்கள் மேற்கின் பொருள் வள விநியோகத்தில் ஒரு பகுதியைப் பெ றும் காட்சியையே எப்பொழுதும் எழுப்பியுள்ளன.

ஒருவர் எழுப்ப வேண்டிய கேள்வி யாதெனில், இன்று அமெரிக்கா காட்டிவரும் குணங்குறிகள் தள்ளாமை எய்திவிட்ட ஒரு சமுதாயத்தின் அடையாளமா, முற்றாகச் சோர்வடைந்துவிட்ட ஒரு சக்தியின் அடையாளமா அல்லது இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு ''தொழில் நுட்பவியலி''லிருந்து வெகு வித்தியாசமான எதிர்கால தொழில் நுட்பவியலின் தீவட்டிக்காவியாக அது இன்னும் இருந்து வருகிறதா என்பதேயாகும்.

அடுத்துவரும் கட்டுரையில், சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி சிந்தனையைத் தூண்டும் விமர்சனங்களுக்குப் பிரசித்திபெற்ற ஒரு பெண் பத்திரிகையாளரான மாவெல் தம்போ இதே நிலைமையை உள்நாட்டுக் கோணத்திலிருந்து நோக்கி, ''ஒரு புதிய பொருளாதார ஒழுங்கு அல்லது மனித இனஅழிவு என்னும் பிரச்சினையைக் கிளப்புகிறார். எதிர்காலத்திய முற்போக்கான அல்லது வளர்ச்சி பெற்ற சமுதாயங்கள் தற்போதுள்ள 'வளர்ச்சி குன்றிய' சமுதாயங்களின் குணம்சங்களைக் கொண்டிருக்குமென அவர் சாதிக்கிறார்.

நுகர்வோர் தங்களுடைய வாழ்க்கையை எளிமையாக்கவும் உலகாயத பண்டங்கள், சேவைகள் மீது செலவைக் குறைக்கவும் முடிவு செய்தால் என்ன நடக்கும்? கைத்தொழில் மயமான உலகெங்கும் பொருளாதார வளர்ச்சி விகிதங்கள் தொடர்ந்து குறைந்து வருவதாலும், இலட்சக் கணக்கான நுகர்வோர் அதிக செட்டான வாழ்க்கை முறைகளைத் தெரிவு செய்து வருவதாகத் தோன்றுவதாலும், இப் பிரச்சினை ஒரு குறிப்பிட்ட அவசரத் தன்மையைப் பெற்று வருகிறது.

கிட்டத்தட்ட ஐம்பது இலட்சம் அமெரிக்க மக்கள் ''இஷ்டபூர்வமான எளிமை'' பொருந்திய வாழ்க்கையைப் பின்பற்றி வருகிறார்களென்றும், அதைப்போல் இரட்டிப்புத் தொகையினர் அதன் அடிப்படைக் கோட்பாடுகள் ''எல்லாவற்றையுமல்ல — சிலவற்றை விடாது பற்றிக் கொண்டு செயற்படுத்துகிறார்கள்'' என்றும், சிக்கன நிகழ்வுப் போக்குபற்றி மிக விரிவான ஆய்வுகளை செய்துள்ள ஸ்டான்போர்ட் ஆராய்ச்சிக் கழகம் மதிப்பிடுகிறது.

சிக்கனப் புதுமை, ஐம்பதுகள், அறுபதுகளின் போது கைத்தொழில் மயமான உலகில் நிலவிய உயர் நுகர்வு வாழ்க்கை முறைகளை நடுத்தர வகுப்பினர் நிராகரித்துவிட்ட ஒரு நிகழ்ச்சியாக முதலில் பிரபலம் பெற்றது. ''அமைதியான புரட்சி'' என்னும் நூலில், மிச்சிகன் சர்வகலாசாலையின் சமூக ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த ரொனல்ட் இங்கிள்ஹார்ட் என்பார், அமெரிக்காவிலும் 10 மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இந்த அனுபவத்தை ஆராய்ந்தார். ''உலகாயத சுகவாழ்வுக்கும், தூலப் பாதுகாப்புக்கும் அளவு மீறிய முக்கியத்துவம் அளிக்கும் நிலையிலிருந்து வாழ்க்கையின் சீர்சிறப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதை நோக்கி'' ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதென அவர் முடிவு செய்தார். அஃதாவது, ''உலகாயதத்திலிருந்து உலகாயதப் பின்னிலைக்கு ஒரு மாற்றம்'' ஏற்பட்டுள்ளது.

அறுபதுகளை ''கொழுத்த வருடங்கள்'' என்கிறார் இங்கிள்ஹார்ட். அவர்களுடைய அலங்கார அணிகளிடையே பணக்கார வாலிப பருவத்தினர் அணிந்து கிழிந்து கந்தையான — பகட்



## எரிபொருளுக்காக விறகு வெட்டுதல்

பெருந்தொகையான அமெரிக்கர் வெளிக்குச் சிக்கனமானதும், எளிமையானதும், உள்ளே ஆத்மாவுக்குத் திருப்தி தருவதுமான புதிய வாழ்க்கை நெறியொன்றைப் பின்பற்றத் தொடங்கியிருக்கின்றனர். அதனையடுத்து, பல தலைமுறைகளாக கைவிடப்பட்டிருந்த இந்த வழக்கம் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது. இள வயதினரான சுமார் 50 லட்சம் அமெரிக்க மத்திய வகுப்பார், கைத்தொழில் நாகரிகத்தின் ஆடம்பர நுகர்வுப் போட்டியை நிராகரித்து, 'இஷ்டபூர்வமான எளிமையை' ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர்கள் என அண்மைய ஆய்வுகள் காட்டின. இந்த 50 லட்சம் பேரில் பெருந்தொகையானோர் சுய உந்துதலும், இலட்சிய வேட்கையும் கொண்ட இளைஞர்களாவர். இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா என்ற தேசத்தை நிர்மாணித்த தமது மூதாதையரிடம் காணப்பட்ட எளிமை, கடினமான உழைப்பு என்ற உன்னதமான பண்புகள் இந்த இளைஞர்களிடையே காணப்படுகின்றன.

டாக ஒட்டுப் போடப்பட்ட — நீல நிற ஜீன்சுகளும் இருந்தன. எனினும், உலகாயதத்திலிருந்து பின்வாங்கிய நிகழ்ச்சியின் பெரும் பகுதி அவ்வளவாகக் கண்ணுக்குத் தெரியவில்லை. சுக சௌகரிய நிலையிலிருந்த அமெரிக்கர் இல்லாமையைச் சகித்துக் கொண்டும், பொருள்களை அதிககாலம் நீடிக்கச் செய்து கொண்டும், அவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொண்டும், அலுவல்களைத் தாங்களே செய்யக் கற்றுக்கொண்டும், காலங் கடத்தினர். எனினும், சிக்கனப் புதுமை — அறுபதுகளின் வானளாவ வளர்ந்த நிலையிலிருந்து வெளியேறி எழுபதுகளின் மந்த நிலைக்குள் புகுந்து — முதிர்ந்த போது, அதில் ஓர் அடிப்படையான உருமாற்றம் ஏற்படுவதாகத் தோன்றியது. அமெரிக்க நுகர்வாளர் உலகாயதத்தில் தொடர்ந்து நம்பிக்கை இழந்து வந்ததுடன், எதிரில் இருண்டு தெரிந்த பொருளாதார வானைக்கண்டு சிக்கனத்தைக் கட்டியணைத்துக் கொண்டிருந்த புதிய மனமாறிகளும் அவர்களுடன சேர்ந்து கொண்டனர். நிதிவளத் தட்டுப்பாடுகளாலும், செங்குத்தாக உயர்ந்து வந்த எரிபொருள் விலைகளாலும், விடாப்பிடியாயிருந்து வந்த பணவீக்கத்தினாலும், உயர்ந்த அளவிலான வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், வர்த்தக நிலுவைப் பற்றாக் குறைகளாலும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சந்தைகளில் அமெரிக்க டொலரின் பெறுமதி குறைந்து வந்ததாலும் நுகர்வோர் தங்களுடைய சொந்த மூலாதாரங்களையே நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மேற்கத்திய ஜனநாயகங்கள் இப்பொழுது ''நாம் உணர மட்டுமே தொடங்கியுள்ள ஒரு புரட்சியின் மத்தியில்'' இருக்கின்றன என்று முன்னைய வெளிநாட்டு மந்திரி ஹென்றி கிஸிங்சர் 1977 ஆம் ஆண்டு வாஷிங்டனில் நடைபெற்ற வர்த்தக, அரசியல், கல்வித் தலைவர்களைக் கொண்ட கூட்டமொன்றில் தெரிவித்தார். ''1980 களில் ஒரு ஒரு வேளை குறைவாயிருக்கக் கூடிய நீண்ட கால வளர்ச்சி விகிதத்தின் எதிரில்'' கைத்தொழில் ஜனநாயகங்கள் தங்களுடைய பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்தவும், சமூக அமைதியை நிலைநாட்டவும் முடியுமா என்பதை அடுத்த தசாப்தம் முடிவு செய்யுமென அவர் மேலும் கூறினார்.

ஸ்டான்போர்ட் ஆராய்ச்சிக் கழகம் மதிப்பிட்டுள்ளபடி இஷ்டபூர்வமான எளிமை பொருந்திய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் சுமார் ஐம்பது இலட்சம் அமெரிக்கர் பிரதானமாக (18 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்ட) வாலிப பருவத்தினராயுள்ளதாகத் தோன்றுகிறது. இவர்களில் ஆண் பெண்கள் ஆகிய இருபாலாரும் சமதொகையினராகவும், இவர்கள் எல்லோரும் அநேகமாக வெள்ளையராகவும், நடுத்தர அல்லது மேல் வகுப்புப் பின்னணிகளைக் கொண்டவர்களாகவும், அசாதாரணக் கல்வியறிவு உள்ளவர்களாகவும், பெரும்பாலும் நகர்ப்புறங்களிலுள்ள குடும்பங்களையும், மனைவியும் கணவனுமாக இருவரும் வருவாய் ஈட்டும் குடும்பங்களையும் சேர்ந்தவர்களாகவும் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்த ஆண் பெண்கள் எளிமை பொருந்திய வாழ்க்கை முறைகளைத் தெரிவு செய்து கொண்டதற்கான காரணங்களில், ''வெளிக்கு எளிமையாகவும் உள்ளுக்கு வளமாகவும்'' உள்ள ஒரு வழியில் வாழும் விருப்பமும், ''சிக்கலுற்ற தன்மை, அநாமதேய நிலை, செயற்கைத் தன்மை, மனிதப் பண்புகளை இழந்த நிலை, கபடோபாயங்கள், வன் விரயங்கள்'' ஆகியவற்றிற்கெதிரான ''சிறு வாழ்வு வாழ வேண்டுமென்ற மனச் சாய்வும்'' அடங்கியுள்ளன. ''எவ்வளவு இயற்கையாகச் சாத்தியமோ அவ்வளவு இயற்கையாக வாழவேண்டுமென்ற பிடிவாதமும்'', ''ஆராய்ச்சிகள் செய்வதற்காக அந்தராத்மாவை விடுவித்து'', ''புதிய தட்டுப்பாட்டை'' நன்கு சமாளிக்க வேண்டுமென்ற மனவிருப்பமும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளன. முற்றாக எளிமை பொருந்திய வாழ்க்கையைப் பின்பற்றும் அமெரிக்கரின் தொகை 50 லட்சத்திலிருந்து 1987 இல் 2.5 கோடிக்கும், 2000 ஆவது ஆண்டில் 6 கோடியாகவும் வளரும் அதே வேளையில், ஓரளவு இஷ்டபூர்வமான எளிமை பொருந்திய வாழ்க்கை முறைகளைத் தெரிவு செய்பவர்களின் தொகை 1 கோடியிலிருந்து 1987 இல் 3.5 கோடியாகவும் இந்நூற்றாண்டு மாறும்போது 6 கோடியாகவும்

உயர்ந்து விடுமென்றும் ஸ்டான்போர்ட் கழகத்தினர் மதிப்பிட்டனர்.

இதற்கு முரணாக, இஷ்டபூர்வமான எளிமையில் ஏற்படும் இந்த வளர்ச்சி ''ஒரு வேளை வரும் தசாப்தங்களில் அதிவேகமாக வளரும் நுகர்வோர் சந்தையாக'' இருப்பதற்கு நல்ல வாய்ப்புண்டு எனக் கூறப்படுகின்றது. இம் முரண்பாட்டுக்குரிய காரணம் என்னவென்றால், ''எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வரும் ஆள், தொழிற்படத்தக்க, ஆரோக்கியமான, அசுத்தப்படுத்தாத, நீடித்துழைக்கவல்ல, பழுது பார்க்கத்தக்க, மாற்றிப் புதுப்பிக்கத்தக்க அல்லது புதுப்பிக்கத்தக்க மூலப்பொருள்களிலிருந்து உண்டாக்கப்பட்ட, குறைந்த எரிபொருள் செலவுள்ள, அசலான, மனங்கவர் அழகுத் தோற்றமுள்ள, எளிமையான தொழில் நுட்ப முறைகள் வாயிலாகச் செய்யப்பட்ட பொருள்களுக்கு முன்னிடமளிப்பதாகும்.''

நிதி வளத்தட்டுப்பாடுகளாலும், செங்குத்தாக உயர்ந்து வந்த எரிபொருள் விலைகளாலும், பணவீக்கத்தின் அமுக்கத்தினாலும், உயர்ந்த அளவிலான , வேலையில்லாத்திண்டாட்டத்தினாலும், வர்த்தக நிலுவைப்பற்றுக்குறைகளாலும், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சந்தையில் அமெரிக்க டொலரின் பெறுமதி குறைந்து வந்ததாலும் நுகர்வோர் தமது சொந்த மூலாதாரங்களில் காலூன்றி நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இஷ்ட பூர்வமான எளிமை பொருந்திய வாழ்க்கையைப் பின்பற்றி வரும் அமெரிக்கரின் தொகை, இது உண்டாக்கும் புதிய நுகர்வோர் சந்தைகளின் பரிமாணம் ஆகிய இரண்டுக்கும் மதிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ள ஊகங்கள் என்னவென்றால், (1) அதிக சிக்கனமான வாழ்க்கை முறைகளை நோக்கி மக்களைத் தற்போது தள்ளிக் கொண்டிருக்கும் நிதிவளத் தட்டுப்பாடுகள் நெடுங்காலம் நீடிக்கக்கூடும் போலத் தோன்றும் நிலை போன்ற நிர்ப்பந்தங்கள் தொடர்ந்து இருந்து வரும் (2) இந்த வாழ்க்கைமுறைகளைத் தெரிவு செய்வோர் இவை தங்களுக்கு மனத் திருப்தியளிப்பதை நிச்சயமாகக் காண்பார்கள் (3) பெருமளவு உற்பத்தியையும், நுகர்வையும் கொண்ட அமெரிக்காவின் பொருளாதாரம் கடுமையான வர்த்தக மந்தமொன்றைத் தவிர்க்கவும், கண்ணியமான வாழ்க்கைத் தரங்களைப் பராமரிக்கவும் போதிய பலமுள்ளதாகத் தொடர்ந்து இருந்துவரும் என்பனவாகும்.

அதிக சிக்கனமான வாழ்க்கை முறைகளை நோக்கிய போக்கு பற்றி ஸ்டான்போர்ட் ஆராய்ச்சிக் கழகத்தின் அடிப்படை வாதங்களில் பலவற்றை, அமெரிக்காவின் வரையறையற்ற பொருளாதார வளர்ச்சி என்னும் விஷயம் பற்றி ''லூயிஸ் ஹாரிஸ் அன்ட் அஸோஷியேட்ஸ் இன் கார்ப்பரேட்டட்'' கம்பெனி அண்மையில் நடத்திய பொது ஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்று ஆதரிக்கின்றது.

''வரையறையற்ற பொருளாதார வளர்ச்சிபற்றி அமெரிக்க மக்கள் ஆழ்ந்த ஐயமொன்றைக் காட்டத் தொடங்கி விட்டனர்; வளர்ச்சி கொண்டு வருமென எண்ணப்படும் நன்மைகளைக் குறித்து அவர்கள் எச்சரிக்கையாயிருக்கின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையோர் வாழ்க்கைத் தரத்தை மாத்திரம் உயர்த்துவதை விட மனித, சமூக உறவுகளையும் அமெரிக்க வாழ்க்கையின் தரச் சிறப்பையும் அபிவிருத்தி செய்வதற்கு உயர் முன்னிடம் அளிக்கின்றனர்.'' ஹாரிஸ் ஆராய்ச்சியில் புலப்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க முடிவுகளிடையே, அமெரிக்கப் பொதுமக்களில் மிகப் பெரும்பான்மையோர் இப்பொழுது விரும்புவனவும் இடம் பெற்றுள்ளன. அவையாவன:

''இப்பொழுதுள்ளதைக் காட்டிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரங்களை அடைவதைவிட அடிப்படை அத்தியாவசியப் பொருள்களுடன் எவ்வாறு வாழ்வதென்பதை மக்களுக்குக் கற்றுக் கொடுத்தல்'' (79 சதவிகிதத்தினருக்கெதிராக 17 சதவிகிதத்தினர்);

''அதிக பொருள்களுக்கும் சேவைகளுக்குமான எங்களுடைய தேவைகளைத் திருப்தி செய்வதை விட உலகாயதத் தொடர் பற்றி அநுபவங்களிலிருந்து மகிழ்ச்சி பெறக் கற்றுக் கொள்ளல்.'' (76 சதவிகிதத்தினருக்கெதிராக 17 சதவிகிதத்தினர்);

''இப்பொழுதுள்ளதைவிடத் திறமான தொழில் நுட்ப முறைகள் வாயிலாகப் பேச்சு, எழுத்து முதலிய வழிகளில் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதற்குரிய எங்கள் ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்கும் விரைவு படுத்துவதற்கும்'' பதிலாக ''ஆளுக்கு ஆள் என்ற அடிப்படையிலே மனிதப் பிறவிகளென்ற முறையில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முயல்வதில் அதிக நேரத்தைச் செலவிடல்'' (77 சதவிகிதத்தினருக்கெதிராக 15 சதவிகிதத்தினர்), அத்துடன்,

''அதிகமான இடங்களுக்கு இப்பொழுதைவிட வேகமாகச் செல்வதற்கான வழிகளை அபிவிருத்தி செய்வதைவிட, நாம் ஏற்கனவே கொண்டுள்ள பிரயாண முறைகளை அபிவிருத்தி செய்தல்'' (82 சதவிகிதத்தினருக்கெதிராக 11 சதவிகிதத்தினர்).

தெரிவிக்கப்பட்டுள்ள பெரும்பான்மைக் கருத்துக்களை ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது ......அமெரிக்க மதிப்புக்களிலும் அபிலாஷைகளிலும் ஓர் அமைதியான புரட்சி நடந்துவரக் கூடுமெனத் தோன்றுகிறது. இம்மனோபாவங்களில் சில எரிபொருள் நெருக்குதலையும், மூலப்பொருள்களின் விநியோகம் எல்லையற்றதல்லவென்பதையும் பிரதிபலிக்கின்றன; மற்றவை 1960 களில் வாலிப வயதினர் வற்புறுத்தி 1970 களில் இப்பொழுது வேரூன்றத் தொடங்கியுள்ள கருத்துக்களிலிருந்து வந்தவையாகும்.

(1620ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து வந்து பிளிமத் குடியேற்றப் பிரதேசத்தை ஸ்தாபித்த) யாத்திரீகர்கள் பரிசுத்தவாத நெறிமுறைகளை அமெரிக்காவுக்கு விட்டுச் சென்றதற்குப் பின்பு அமெரிக்காவில் சிக்கனமும் கடின உழைப்பும் தேசியப் பண்பில் ஆழமாகப் பதிந்துள்ளன. அதன் பின்னர், எளிமை பொருந்திய வாழ்க்கையின் சந்தோஷங்களைப் பற்றியும், அதன் எதிர்மறையாவதன் சஞ்சலங்களைப் பற்றியும் ஹென்றி டேவிட் தோரோ (வால்டன்), தோர்ஸ்டன் வெப்லன் (ஓய்வான வகுப்பாரின் கோட்பாடு), டேவிட் எம். பொட்டர் (வளவாழ்வு கொண்ட மக்கள்), ஸ்டாஃபன் லிண்டர் (அலைக்கழிக்கப்படும் ஓய்வான வகுப்பார்) போன்ற தொடர்ந்து வந்த சமூக விமர்சகர்கள் எங்களுக்கு ஞாபகமூட்டி வந்துள்ளனர். எனினும், தேசியப் பொருளாதாரம் தப்பிப் பிழைப்பதற்கு வீண் பகட்டான நுகர்வு முறைகளிலிருந்து அடிப்படை நுகர்வு முறைகளுக்கு மாறுவது அத்தியாவசியமாகலாமென நாம் வெகு சமீபத்திலே தான் நம்பத் தொடங்கியுள்ளோம்.

சிக்கனத்தையும், தேசியப் பொருளாதாரம் தப்பிப் பிழைப்பதற்குரிய துணையாக அதன்

பயன்பாடுகளையும் ஆராய்வதில், அதிக செட்டான வாழ்க்கை முறைகளுக்குத் தற்போது மாறிக் கொண்டிருக்கும் அமெரிக்கருக் கும் ''எதிர்க் கலாசாரம்'' எனப் பொதுவாக வர்ணிக்கப்படும் முறையில் வாழ்ந்து வந்துள்ளோ ருக்கு மிடையேயுள்ள வித்தியா சத்தை நோக்குதல் பயனுடை யது.

இவ்விரு கோஷ்டிகளும் அநேக வழிகளில் மாறுபட்டுள்ள அதே வேளையில், இவ்விருசாராருக்கு மிடையேயுள்ள மிகக் குறிப்பிடத் தக்க வித்தியாசம் என்னவென் ருல், சிக்கன வாழ்வை மேற் கொண்டுள்ள அமெரிக்கர் பெரும் பாலும் கைத்தொழில் கலாசா ரத்தின் மதிப்புக்களை ஏற்றுக் கொள்ளும்போது, எதிர்க் கலா சாரத்தைப் பின்பற்றும் அமெரிக் கர் அவற்றை ஏற்றுக்கொள்வ தில்லை யெனவே தோன்றுகிறது. எதிர்க் கலாசார வாழ்க்கை முறை களின் இயல்பு யாதெனில், நுகர் விஞல் இயக்கப்படும் பெரும் பகுதிப் பொருளாதாரத்திலி ருந்து அறுத்துக் கொள்ள அது பூண்டுள்ள உறுதியாகும்.

நுகர்வைக் குறைக்கும் வாழ் க்கை முறைகளைப் பின்பற்றத் தொடங்கும் அமெரிக்கரின் தொகை மேன்மேலும் அதிகரித்து வருகிறதென்ற உண்மை நாடெங் கும் கவனத்தை ஈர்த்து வருகின் றது. பூமித் தாய் புதினம், முழுப் பூமி இடாப்பு, மழை, தடுப்பும் தோட்டச் செய்கையும் போன்ற ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ள, மனவெழுச்சி தரும் அநேக பிரசுரங்கள் அதிக தற்சார்புள்ள, சுகமானஎளிய வாழ்க்கை முறைகளை உண்மை யில் எவ்வாறு சிருஷ்டிப்பதென் பதை இலட்சக்கணக்கான வாச கர்களுக்கு எடுத்துக் காட்டிவரு கின்றன. இவ்வாசகர்கள் சிக்கன வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டு மாயின் குறிப்பிட்ட அம்சத்தை யாவது நூற்றுக்கணக்கான ''நவ யுகம்'' நூல்களைப் புரட்டிப் பார்ப்பதன் மூலம் அவர்கள் அவ் வாறு செய்யமுடியும்.

நவயுக வாழ்க்கை முறைகளைப் பின்பற்றும் கோஷ்டிகள் அமெ ரிக்கா வெங்கும் உதயமாகி வரு கின்றன. உதாரணமாக, ''பசு மைப் புரட்சி'' என்னும் எதிர்க் கலாசார சஞ்சிகையின் சமீப இத ழொன்று 200 க்கு மேற்பட்ட ஜன சமூகங்களை ஆராய்ந்தது. இந்த ஜன சமூகங்களில் பெரும் பாலானவை 1960 களின் பிற் பகுதியிலோ, அல்லது 1970களின் முற்பகுதியிலோ ஆரம்பமானவை யாகும். தனிப்பட்ட இல்லங் களில் தொடங்கப்பட்ட இந்த ஜனசமூகங்களில் 20 வயது நட ந்து கொண்டிருப்பவர்களும் 30 ஆவது வயதைத் தொடங்கியுள் ளவர்களுமாக இளம் பருவத்தி னரே அதிகமாக உள்ளனர்.

வளர்ந்து வரும் நவயுக இயக் கத்தில் பகிர்வுக்கும் தற்சார்புக் கும் கொடுக்கப்படும் முக்கியத் துவம், ஓரளவுக்கு ''நேரிய ஜீவ னம்'' என்னும் தத்துவத்தில் அதன் அனுசாரிகளுக்குள்ள நம் பிக்கையிலிருந்து எழுகின்றது. எங்களுடைய மனித இனத் தையோ, எங்களை ஆதரித்து நிற் கும் கிரகச் சூழலையோ அல்லது இன்று நாம் செய்வனவற்ருல் பெரும்பாலும் உருவாக்கப்பட விருக்கும் எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கையையோ பயமுறுத்தாத வேலைகளில் ஈடுபடுவது என ''நேரிய ஜீவனம்'' என்பதற்கு விரிவான வரைவிலக்கணம் கூற லாம்.

முடிவாக, ஒரு வேளை மிக முக் கியதானதாக இருக்கக் கூடிய தென்னவென்ருல், இக்கோளின் மீது வாழ்க்கை நிறைவை, முடி வின்றி அதிகரித்துக் கொண்டி ருக்கும் உலகாயத பண்டங்களின் நுகர்வில் காண முடியாதென்றும் (எதிர்காலத்தில் இது சாத்திய மானுலுங்கூட), உலகத்தின் மகத் தான மதங்கள், யாவும் போதித் துள்ளவாறு அக நோக்கையும், ஆத்மிக விசாரத்தையும் கைக் கொள்ளும் வாழ்க்கை வாயிலாக மட்டுமே இந் நிறைவைக் காண முடியுமென்றும் கைத்தொழில் உலகில் எத்தனையோ பேர் இப் பொழுது பகிர்ந்து கொள்ளும் சமுசயமாகும்.

(33ம் பக்கம் பார்க்க)

---

பல தசாப்தங்களாக உலகாயத வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து, படாடோபமாக ஆடம்பர வாழ்க்கை நடத்தி வந்த அமெரிக்கர், இன்று வாழ்க்கையைப் புதிய கோணமொன்றில் தரி சிக்கத்தொடங்கியிருக்கின்ருர்கள். இல்லாமையைச் சகித்துக் கொள் ளவும், பொருட்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும், தமது அலு வல்களைத் தாமே செய்து கொள்ளவும், பாவனைப் பொருட்களின் கால அளவை நீடித்துக் கொள்ளவும் அவர்கள் பழகி வருகின்ருர்கள். இந்தப் புதிய நெறியை இன்று 50 லட்சம் அமெரிக்கர் பின்பற்று கின்றனர். இந்த நூற்ருண்டு முடியும் போது இத்தொகை 6 கோடி யாக அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

---

அமெரிக்க நுகர்வாளர் உலகாயதத்தில் தொடர்ந்து நம்பிக்கை இழந்து வந்ததுடன், எதிரில் இருண்டு தெரிந்த பொருளாதார வானைக் கண்டு அச்சங் கொண்டனர். எனவே, உலகாயதச் சுக வாழ் வுக்கும், தூலப் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கும் நிலையி லிருந்து மாறி, இயற்கையோடு ஒன்றி நடத்தும் எளிமையான வாழ்க் கையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

# ஒரு புதிய பொருளாதார ஒழுங்கு அல்லது மனித இன அழிவு

மானெல் தம்போ

புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கொன்று அமைக்கப்பட வேண்டுமென்று மூன்றாம் உலகம் எழுப்பிய கூக்குரல் இதுவரை சொற்ப உருப்படியான நன்மைகளையே உண்டாக்கியுள்ளது. மணிலாவிலிருந்து எட்டும் செய்திகளைச் சீர் தூக்கிப் பார்க்கும்போது, மே மாதத்தில் மணிலாவில் ஆரம்பமான ஐந்தாவது அங்டாட் (வர்த்தகம் - அபிவிருத்தி பற்றிய ஐ. நா. மகாநாட்டு ஸ்தாபனம்) மகாநாடும் அனுகூலங்களை அளிக்காதென்பது தெளிவு. ஆனால், பிரதானமாக இயற்கையின் ஏவல் பேரில் மனித சமூகத்துக்காக ஒரு புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு உருவாக்கப்பட்டு வருகிறது. அது இன்னும் அடிவானத்தில் வெகு தூரத்திலுள்ள ஒரு மேகமாகவே இருந்து வருகிறது. போல் ஏர்லிச், ஜியாப்ரே, பார்க்லோ, ரொபர்ட் ஹெயில்புரோனர் போன்ற உணர்ச்சியுள்ள மேற்கத்திய சிந்தனையாளர்களால் அதன் உருவச்சாயல் பிரதானமாகத் தீர்க்கதரிசன ஊகங்களாக இன்னும் உரைப்படுகிறது. தற்போதுள்ள கைத்தொழில் சமுதாயத்தின் முடிவை அவர்கள் முன்னுணர்வதன் காரணமாக, புதிய ஏற்பாட்டின் கடைசி வேதப் புத்தகமான வெளிப்படுத்தல் நூலை எழுதியவர்கள் என அவர்கள் பட்டஞ் சூட்டப்படுகின்றனர்.

இந்த ஊகங்களில் மூன்றாம் உலக நாடுகள் சிரத்தை கொள்ள வேண்டும். இந்நாடுகளில் பெரும்பாலானவை இப்போது மேற்கத்திய அபிவிருத்தி முன்மாதிரிகளை வெல்லப் பார்க்கின்றன. ஏனென்றால், அம்முன்மாதிரிகள் விரைவில் காலங் கடந்தவையென அறிவிக்கப்படுமெனத் தோன்றுகிறது. இதில் பரபரப்பூட்டும் அம்சம் யாதெனில், இந்த ஊகங்களை முறையாகப் பகுத்துப் பார்த்தால், ஒரு புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கின் சுற்றுவரையை அவை அளிக்கக்கூடும். இது நடைமுறையில் 'வளர்ச்சிபெற்ற நாடுகளினதும்' 'வளர்ச்சி குன்றிய நாடுகளினதும்' பங்களிப்புகளை அடியோடு மாற்றிவிடுமென்பது திண்ணம்.

ஹெயில் புரோனர் தமது ''மனிதனின் எதிரிலுள்ள வாய்ப்பு பற்றிய ஓர் ஆராய்ச்சி விசாரணை''யில், ''இரு நூற்றாண்டுகளாக எங்களுக்கு உலகாயத முன்னேற்றத்தை மட்டுமன்றி, உற்சாக உணர்ச்சியையும் நோக்க உணர்வையும் அளித்துள்ள ஒரு கைத்தொழில் நாகரிகத்தின் மதிப்புக்கள் இப்பொழுது தங்களுடைய சுயப் பிரத்தியட்ச நியாயத் தன்மையை இழந்து வருகின்றன'' என்று கூறுகிறார். இந்நாடுகளிலுள்ள படித்த வாலிபர்கள் உலகாயத மதிப்புக்களை நிராகரித்துள்ளமை (இவர்களுடைய ஆட்சேபனை, போதைப் பொருள்களுக்கு அடிமையாகி ஹிப்பி பாணியில் ஏகாந்தத்தை நாடும் வ க ல் உருவெடுத்துள்ளது) போன்ற இத்தகைய மனக்கலக்க மூட்டும் சமூகக் காட்சிகள் ஒரு புறமிருக்க, பொருளாதார வளர்ச்சிப் போக்கை மிக நீண்ட காலத்துக்கு நீடிக்கச் செய்வது சாத்தியமல்லவென்ற உணர்வும் வளர்ந்து வருகிறது.

இரு குறிப்பிடத்தக்க சம்பவங்கள் புதிய சிந்தனையைத் தொடக்கி வைத்தன. அரபு எண்ணெய்த் தடையால் எரிபொருள் சம்பந்தமாகவும், அது விரிவடைந்தால், மூலப்பொருள்கள் சம்பந்தமாகவும் தாங்கள் முற்றாகப் பாதிக்கப்படக்கூடிய பலவீன நிலையை உணரவேண்டிய நிர்ப்பந்தம் கைத்தொழில் மயமான நாடுகளுக்கு ஏற்பட்டது. அதிக அடிப்படையான காரணம், 1974 ஆம் ஆண்டில் ''வளர்ச்சிக்கு வரையறைகள்'' என்னும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட ரோம் கிளப் சூழலியலாளர்களின் ஆராய்ச்சி முடிவுகளைத் தொடர்ந்து ஏற்பட்டது. இவை 20 ஆம் நூற்றாண்டில் சாதிக்கப்பட்ட மிகப் பாரதூரமான உள்ளாய்வுகளில் சிலவற்றைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன், அடுக்கு வளர்ச்சியின் அளவுகள், கடந்த இரு நூற்றாண்டுகளின் போது தொழில் நுட்ப — விஞ்ஞான மனிதன் எவ்வளவோ மமதையுடன் கற்பித்துக் கொண்டதைப் போல, இறுதியில் அவனால் ஒழுங்குபடுத்தப்படுவதில்லை; ஆனால் சர்வ வியாபகமான இயற்கையாலேயே ஒழுங்குபடுத்தப்படுகின்றனவென்பதையும் இவை எடுத்துக் காட்டுகின்றன.

உணவு, மூலப்பொருள்கள் ஆகிய இரண்டுக்கும் மனிதன் 4 பெரிய உயிரியல் முறைகளை — மீன்வளப்பகுதிகள், காடுகள், புற்றரைகள், பயிர் நிலங்கள் — யும் சார்ந்திருக்கிறான் என்பதையும், 'மனித முகாமைக்கும்', 'மனிதத் தலையீட்டுக்கும்' திடமான எல்லையுண்டு என்பதையும், மேலும் கைத்தொழில் மனிதனின் நடவடிக்கைகள் அநேக பிரதேசங்களில் இயற்கையின் எல்லைகளை ஆபத்தான முறையில் ஆக்கிரமித்துள்ளன (அபாய அறிகுறிகள் ஏற்கனவே தெரிகின்றன) என்பதையும் உணர அவை மனிதனைக் கட்டாயப்படுத்தியுள்ளன.

சூழல், சமூக, கலாசார மூலங்களிலிருந்து புறச் செருகலாக ஹெயில் புரோனர் பின்வருமாறு சுருக்கிக் கூறுகிறார்: ''எந்த ஊகங்களுக்கும் எல்லா ஊகங்களுக்கும் அடியில் ஒரு மறுக்க முடியாத முடிவு தங்கியுள்ளது. முதலாளித்துவம் மேற்கத்திய சோஷலிஸம் ஆகிய இரண்டினதும் பொருளாதார, சமூக வாழ்க்கைக்கு மையமாக விளங்கும் கைத்தொழில் வளர்ச்சிக் கிரமம் அநேகமாக ஓரிரு தலைமுறைகளுக்குள் மந்தகதியை அடைய நிர்ப்பந்திக்கப்படுவதுடன், அதன் பின் தளர்வுக்கு வழிவிட வேண்டியுமிருக்கும்.''

ஹெயில் புரோனரின் சிறந்த உள்ளாய்வுகளில் ஒன்று யாதெனில், எதிர்காலம் பொருளாதாரக் காரண வாதங்களால் உருவாக்கப்பட மாட்டாது; ஆனால் பல்வேறு கோஷ்டிகளிடையே அரசியல் மாற்றத்துக்கான மனிதத் திராணிகளால் உருவாக்கப்படும் என்பதாகும். உலக அரசாங்கம் என்பது போன்ற கருத்துக்கள் தத்துவ ரீதியாக விரும்பத்தக்கனவாயிருக்கலாம்; ஆனால், அவை ஏற்றுக்கொள்ளப்படுவதை அடிப்படை மனிதத் தன்மைகள் எதிர்க்கின்றன. தேசிய ஒன்றிப்பு என்பது, ஒரு குழந்தை தனது வாழ்க்கையின் ஆரம்ப வருடங்களில் தனது குடும்பத்துடன் ஒன்றித்துக் கொள்ள வேண்டியிருக்கும் ஓர் ஆழ்ந்த மனிதத் தேவையின் விரிவாக்கமேயாகும். உணர்ச்சி பூர்வமாக ஒன்றிப்பதற்குரிய சக்தி விரிவடைந்த போதிலும், ஒவ்வோர் அறியப்பட்ட பண்பாட்டிலும் ஓர் எல்லையுண்டு; அவ்வெல்லைக்கு அப்பால் ஒன்றிப்பதற்கான இவ்வியல்பூக்கம் தடைப்பட்டுவிடுகிறது; இது, ஒரு சமுதாயத்துக்குள்ளே இருப்போரை அப்பால் இருப்போரிடமிருந்து எல்லையிட்டுப் பிரித்துவிடுகிறது.

மனித சுபாவத்தின் மற்றொரு முக்கியமான அரசியல் அம்சம் யாதெனில், கீழ்ப்படிந்து நடக்கும் குணமாகும். அனுபவத்தின் முதலாண்டுகளில் இதைக் கண்டறிவது சுலபம். விரகறிந்த பருவத்து நடத்தையில் இது. அரசியல் அதிகாரப் பிரயோகத்துக்கு மனிதர்கள் சாதாரணமாக மனமுவந்து உடன்படும் தன்மையாக வெளிப்படுத்தப்படுகிறது. எதிர்கால நிலைமை பற்றி ஜீவாதாரமான ஊகங்களை வெளியிடும் போது ஹெயில் புரோனர் கூறுகிறார்: ''மனிதனின் எதிரிலுள்ள நிலை மாற்ற முடியாததொரு மரண தண்டனையல்ல. பிரமாண்டமான பேரழிவுகள் ஏற்படக்கூடிய அபாய ஏது இருந்து வந்த போதிலும், கடைசி வேதத்தையோ அல்லது நியாயத் தீர்ப்பு நாளையோ நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கவில்லை. எதிர்கால நிலைமை நிகிலுண்டாக்கும் விதத்தில் அணிவகுத்து நிற்கும் அறைகூவல்களைக் கொண்டதாயிருக்கிறதென்று நோக்குவதே நன்று. மனித இனம் உயிர் பிழைத்திருப்பதை உறுதிப்படுத்துவதற்கு முன்பு இந்தச் சவால்கள் வெல்லப்பட வேண்டும். மனிதனின் விவேகத்தையும், தூரதிருஷ்டியையும் கொண்டு இவற்றை வெல்ல முடியாவிட்டாலும், இயற்கையின் காத்து இரட்சிக்கும் தலையீட்டினால் இவற்றை வென்றுவிடலாம். ஆதலால், அந்த மரண தண்டனையை எதிர்பாராத ஓர் ஆயுட்காலத் தண்டனையாக நோக்குவதே நலம் — ஏனெனில் அது மனித சமுதாயம் தொடர்ந்து இருந்து வருவதை அனுமதிக்கும். ஆனால் தற்போதுள்ள அடிப்படையிலிருந்து மிகவும் வித்தியாசமான ஓர் அடிப்படையில் மட்டுமே; அதுவும் ஒரு வேளை, நிலை மாறுங் காலத்தில் மிகுந்த துன்ப துயரங்களை அனுபவித்த பின்பு மட்டுமே அவ்வனுமதி கிடைக்கும்.''

''இறுதியில் எவ்வகையான சமுதாயம் தோன்றும்? நீண்ட காலப் பரிகாரம் காண்பதற்கு உயிராபத்தான செயல் முறைகளும், இசைவற்ற வாழ்க்கை முறைகளும், கைத்தொழில் நாகரிகத்தின் ஆபத்தான மனப்போக்கும் படிப்படியாகக் கைவிடப்படவேண்டியதவசியமாகும். கைத்தொழில் சமுதாயத்துக்கும் பின்புள்ள ஒரு சில சக்திகளை யூகித்தறிந்து கொள்ள முடியும்.''

''உற்பத்தியையும் நுகர்வையும் பற்றிச் சமுதாயம் கொண்டுள்ள கருத்து, உலோபித்தனமான மனோபாவத்தை வற்புறுத்த வேண்டுமேயன்றி ஊதாரித்தனமான மனோபாவத்தை வற்புறுத்தக் கூடாது. மூலவளங்களை நுகரும் முறைகளும், வெப்பம் உண்டாக்கும் முறைகளும் சமூக வெற்றிகள் எனக் கருதப்படாது, அவசியமான கேடுகள் எனக் கருதப்பட வேண்டும்.

அவை பொருளாதார வாழ்க்கையில் எவ்வளவு சிறிய பகுதிக்குச் சாத்தியமோ அவ்வளவு சிறிய பகுதிக்கு ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும். இது, முன் தெரிவிக்கப்படாத வழிகளில் உற்பத்தி முறை அடியோடு மாற்றி யமைக்கப்பட வேண்டுமென்பதைக் குறிப்பாலுணர்த்துகிறது. அஃதாவது, ஒரு வேளை நகர்ப்புறங்களில் காணப்படும் இராட்சத தொழிற்சாலையும் பிரமாண்டமான காரியாலயமும் ஒழிய வேண்டுமென்பதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.''

''ஆதலால், கைத்தொழில் நாகரிகத்துக்குப் பின்பு அமையும் ஒரு சமுதாயம், கைத்தொழில் நாகரிகத்துக்கு முன்பு அமைந்திருந்த அநேக சமுதாயங்களின் திசையில் — பொருளுண்மையையும் உலகாயத சாதனைகளையும் கொண்ட வெளியுலகை விட அனுபவத்தின் உள்நிலைகளை ஆராய்ந்து பார்ப்பதை நோக்கித் — திரும்புவதும் சாத்தியம். நடைமுறையில் கைத்தொழில் நாகரிகம் இடம் பெறாத சமுதாயங்களில் வாழ்க்கையின் தூண்களாக விளங்கிய பாரம்பரியங்களும், சடங்காசாரங்களும் ஒருவேளை வாழ்க்கையின் வழிகாட்டி என்ற முறையிலும், வாழ்க்கையில் ஆறுதலளிக்கும் சக்தி என்ற முறையிலும் தங்களுடைய பண்டைய உரிமைக் கோரிக்கைகளை மீண்டும் வற்புறுத்தக் கூடும். கைத்தொழில் பிரயோகத்துடன் எவ்வளவோ நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ''விஞ்ஞானத்'' தின் இயல்பும், இலட்சணங்களும் மிகக் குறைந்த பங்கே எடுத்து வருவது சாத்தியம்.''

எதிர்காலம் இப்படித்தானிருக்குமென்று முன்கூட்டியே பூரணமாகக் கூறமுடியாது. ஆனால், இந்த ஊகங்கள் குறைந்தபட்சம் நிர்க்கமான சாத்தியப்பாடுகளின் ஓர் அடுக்கையாவது முன்னெடுத்து வைக்கின்றனவென்பதை அநேக அறிகுறிகள் எடுத்துக்காட்டுகின்றன. கடந்த பல ஆண்டுகளாக உலகப் பொருளாதாரத்தினால் உதறிவிட முடியாதுள்ள தற்காலிக வர்த்தக மந்தம், ஈரானில் மேற்குக்கு விரோதமான ஆட்சி முறையொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதனால் உண்டாகியுள்ள எண்ணெய்த் தொல்லைகள் போன்றனவே அவ்வறிகுறிகள்.

இடைவிடாதிருந்து வரும் பொருளாதாரப் பெருக்கம் சாசுவதமான உண்மைகளில் ஒன்றென்பது போல், எதிர்கால நடவடிக்கைக்கான மூன்றும் உலகின் உபாயங்கள் இந்த ஊகங்களைக் கவனத்திற் கொள்ளாமல் உருவாக்கப்பட்டு வருகின்றன. கருத்துக்களில் ஏற்பட்டுள்ள இந்தக் காலதாமதம் எங்களுடைய அபிவிருத்தி முயற்சிகளில் பெரும்பாலானவற்றைக் குறிப்பியுள்ள ஒரு பாரதூரமான மூன்றும் உலகின் பலவீனமாக இருந்து வந்துள்ளது. இங்கு அடிப்படை முக்கியத்துவம் பொருந்திய விஷயம் என்னவென்றால், ஹெயில் புரோனர் மனக்கண்ணில் பார்க்கும் கைத்தொழில் நாகரிகத்துக்குப் பிற்பட்ட சமுதாயங்கள் மூன்றும் உலகிலுள்ள பரம்பரை சமுதாயங்களின் பிரதான அம்சங்களை ஒன்றிணைப்பதாகும். சிக்கனமாக மூலவளங்களைப் பிரித்தெடுப்பதும் நுகர்வதும்; அடிப்படையில் இவற்றின் பொருள் தேட்டத் தன்மையில்லாமைக்கும் இவற்றிற்குமுள்ள நெருங்கிய பிணைப்பு; உலகாயத செல்வத்தையும் அதிகாரத்தையும் தேடிப் பெறுவதை விட, அனுபவத்தின் உள்நிலைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஆகியனவே அப்பிரதான அம்சங்கள். இதன் உட்பொருள் என்னவெனில், எதிர்காலத்தில் அமையும் முற்போக்கான அல்லது வளர்ச்சிபெற்ற சமுதாயங்கள், தற்போதுள்ள 'வளர்ச்சி குன்றிய' சமுதாயங்களின் பண்புகளைக் கொண்டிருக்கும் என்பதாம்.

வரும் தசாப்தத்துக்கு எங்களுடைய உபாயங்களை வகுக்கும்போது இந்தச் சாத்தியக்கூறுகளை நாம் இணைத்துக் கொள்ள வேண்டுமா அல்லது இணைத்துக் கொள்ளக் கூடாதா? 'வளர்ச்சி', மூலவள நுகர்வு போன்ற கருத்துக்களை நாமே மறுமதிப்பீடு செய்ய வேண்டியிருக்கும். அத்துடன், 'குறை அபிவிருத்தி' போன்ற சொற்றொடர்களால் தற்போது உள்ளடக்கப்படும் எங்கள் சமுதாயங்களுக்குள்ளே மிகச் சிக்கனமான மூலவள உபயோகம் உயிர் பிழைத்திருப்பதற்குப் பெருதவியாயிருக்கும் என்பதையும், மித மிஞ்சிய நுகர்வுப் போக்குக்கும், அதிகரித்துவரும் உலகாயத அபிலாசைகளுக்கும் எங்களுடைய மக்களிடையே ஊக்கமளிப்பது அபாயகரமான செயல்கள் என்பதையும் நாம் உணர வேண்டியிருக்கும்.

வளர்முக நாடுகளில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வருவதில் முன்னேற்றமடைந்த நாடுகளின் உள்நோக்கம், அந்நாடுகளின் உற்பத்திப் பொருள்களுக்குரிய சந்தைகளாக நாம் மேலும் பயன்படலாம் என்பதேயாகும். இதை அந்நாடுகள் சர்வதேசத்துறையில் ஒப்புக்கொண்டுள்ளன. ஆனால், மூன்றும் உலகில் கைத்தொழில் வளர்ச்சி, காப்புவரிக் கொள்கைகளால் மறைமுகமாகத் தடைப்படுத்தப்படுகின்றது. இப்பொழுது தெளிவாகத் தெரிந்து வரும் அபாய அறிகுறிகள் இருந்தபோதிலும், நாம் வளர்ச்சி உபாயங்களை விடா முயற்சியுடன் கையாண்டு வருவோமாயின், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும்போது அதன் முழுத் தாக்கத்தை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும் அல்லது ஒரு வேளை ஏற்கவேண்டும். ஏனென்றால், இயலாத சொற்ப மறு கொடுப்பனவுகளைச் செய்யும்படி எங்களை நிர்ப்பந்திக்க ஆயுதப் பயமுறுத்தல்கள் விடுக்கப்படலாம். 'ஏற்றுமதியால் வழி நடத்தப்படும் வளர்ச்சி உபாயங்களை நாம் மேற்கொண்டால், எங்களுடைய மூலவளங்களும் தீர்ந்து போகும் வரை, கைத்தொழில் மயமான நாடுகளின் வளர்ச்சிக்காக மட்டுமே எங்களுடைய மூலப் பொருள்களை நாம் வழங்கி வருபவர்களாவோம்.

உலகளாவிய சந்தையே 'தற்போதைய பொருளாதார ஒழுங்கை'ச் சாத்தியமாக்கும் பொறி முறையாகும். மனித குலத்தைப் பேராபத்தின் விளிம்புக்குக் கொண்டு வந்து கொண்டிருக்கும் கைத்தொழில் வளர்ச்சியை நீடிக்கச் செய்துவரும் கருவியும் அதுவே. சலுகைகள் வழங்குமாறு குன்றில் கைத்தொழில் மயமான முதலாளித்துவ நாடுகளையோ அல்லது கைத்தொழில் மயமான சோஷலிஸ்ட் நாடுகளையோ நாம் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால், உலகளாவிய சந்தையிலிருந்து விலகிக் கொள்வது பற்றி ஆலோசிப்பதற்காக நாம் ஓர் ஒற்றுமையான முயற்சியை மேற்கொள்ள முடியும். ஏனென்றால், எங்களுடைய சமுதாயங்கள் இன்னும் பெருமளவுக்குக் கைத்தொழில் நாகரிகத்துக்கு முன்பு அமைக்கப்பட்டனவாகவே இருந்து வருகின்றன. எனவே, இந்தத் திமர்த்திருகளிலிருந்து அவை உயிர் தப்பிக் கொள்ள முடியும் ஒரு புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கைச் சாதிக்கவும் அத்துடன் மனித நாகரிகத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும் இயற்கைக்கு நாம் உதவி செய்வதற்கு இது ஒருவேளை ஒரு வழியாயிருக்கலாம்.

---

**சிக்கனத்தை நோக்கி . . . .**

(31ம் பக்கத் தொடர்ச்சி)


இந்தச் சிக்கனப் புதுமை, மேற்கத்திய பொருளாதார மனோபாவங்களில் ஓர் அடிப்படை மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றதா அல்லது இதைவிட நிலையற்றதான ஒன்றைப் பிரதிபலிக்கிறதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எனினும், தெளிவாகத் தெரிவதென்னவென்றால், அதிக செட்டான வாழ்க்கை வாழ்வதற்குத் தயாராக இலட்சக்கணக்கான அமெரிக்கரும், கனடாக்காரரும், பிரித்தானியரும், சுவீடிஷ் மக்களும் மற்றவர்களும் தோன்றியுள்ளமை, இதைவிட ஏற்ற காலத்தில் நிகழ்ந்திருக்க முடியாதென்பது தான்.

தலைமைத்தபாற் கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித்திட்டமாக பொருளியல் நோக்கை வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கனும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.



விலை ரூ. 2/25

பொருளியல் நோக்கில் பிரசுரிக்கப்படுபவற்றை பேற்றுக் குறிப்புடன்
மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு

தெஹிவளை, துட்டுகைமுனு தெரு, 135 இல் உள்ள, நிஸரா அச்சகத்தில் அச்சிடப்பட்டது